
கடைசிப் பந்து
நாடகம்
ஆசிரியர் : டி.எஸ்.வரதன்

# கடைசிப் பந்து

## நாடகம்

டி. எஸ்.வரதன்

மின்னூல் வெளியீடு :
**http://FreeTamilEbooks.com**

சென்னை

கடைசிப் பந்து Copyright © 2013 by Creative Commons Attribution 2.5 Generic license.

# பொருளடக்கம்


- 
- கடைசிப் பந்து - நாடகம்
- கிரிக்கெட் ரசிகர்களுக்கான வாழ்க்கை நாடகம் - முதல் பகுதி | காட்சி 1 முதல் பகுதி
- முதல் பகுதி | காட்சி 2
- முதல் பகுதி | காட்சி 3
- இரண்டாவது பகுதி | காட்சி 4
- இரண்டாவது பகுதி | காட்சி 5
- இரண்டாவது பகுதி | காட்சி 6
- மூன்றாம் பகுதி | காட்சி 7
- மூன்றாம் பகுதி | காட்சி 8
- மூன்றாம் பகுதி | காட்சி 9
- நான்காம் பகுதி | காட்சி 10

- நான்காம் பகுதி | காட்சி 11
- நான்காம் பகுதி | காட்சி 12
- நான்காம் பகுதி | காட்சி 13
- ஐந்தாம் பகுதி | காட்சி 14
- ஐந்தாம் பகுதி | காட்சி 15
- ஐந்தாம் பகுதி | காட்சி 16
- இறுதிப் பகுதி
- எங்களைப் பற்றி
- நூல் ஆசிரியர் - ஒரு சிறு குறிப்பு

# கடைசிப் பந்து - நாடகம்




இது கிரிக்கெட் பாணியில் அமைக்கப் பட்ட ஓரங்க, வாழ்க்கைப் போட்டி நாடகம். எதிர்பாராத திருப்பங்கள், கணிக்க முடியாத வெற்றி- தோல்வி ஆகிய தனித் தன்மையால் கிரிக்கெட் விளையாட்டு நம்மை வெகுவாகக்

கவர்கிறது; முக்கியமாக, முடிவு என்ன ஆகுமோவென பதைபதைக்க வைக்கும் சூழ்நிலையில் வெற்றியைத் தீர்மானிக்கும் அந்தக் கடைசிப்பந்து!

**நித்யா**

nithyavaradants@rediffmail.com

http://varadants.blogspot.in/

**மின்னூல் வெளியீடு :**

http://FreeTamilEbooks.com

**மின்னூலாக்கம் – சித்தார்த்தன் -**

sidvigh@gmail.com

அட்டைப் படம் – குரு – guru96299@gmail.com

அட்டைப்பட மூலம் – https://www.flickr.com/photos/14132971@N05/1448225545

உரிமை – கிரியேட்டிவ் காமன்ஸ். எல்லாரும் படிக்கலாம், பகிரலாம்.

Creative Commons Attribution-NonCommercial 4.0 International License

# கிரிக்கெட் ரசிகர்களுக்கான வாழ்க்கை நாடகம் - முதல் பகுதி | காட்சி 1

---

## முதல் பகுதி

முதல் பகுதி | காட்சி 1

(நாடக மேடையின் மூடிய திரையின் முன்பு நாடகப் படைப்பாளி ஒலிபெருக்கியில் பேசுகிறார்)

ரசிகர்களே, இது கிரிக்கெட் பாணியில் அமைக்கப் பட்ட ஓரங்க, வாழ்க்கைப் போட்டி நாடகம். எதிர்பாராத திருப்பங்கள், கணிக்க முடியாத வெற்றி- தோல்வி ஆகிய தனித் தன்மையால் கிரிக்கெட் விளையாட்டு நம்மை வெகுவாகக் கவர்கிறது; முக்கியமாக, முடிவு என்ன ஆகுமோவென பதைபதைக்க வைக்கும் சூழ்நிலையில் வெற்றியைத் தீர்மானிக்கும் அந்தக் கடைசிப் பந்து!

(திரை விலக, நாடகப் பாத்திரங்கள் ஒவ்வொன்றாக அணி வகுக்க, நாடகாசிரியர் அறிமுக உரையைத் தொடர்கிறார்)

இதோ, கையில் கிரிக்கெட் மட்டையுடன்

நுழைபவன் திவாகர் . கடைசிப் பந்தை எதிர்கொள்ளப் போகும் இந்த திவாகர், வாழ்க்கைப் போட்டியில் வெற்றிக்கு வெகு அருகில் வந்திருக்கிறான்! அடுத்து, கையில் பந்துடன் வருபவன் பரத்- இவன் வீசப் போகும் கடைசிப் பந்தால் திவாகர் ஜெயிப்பானா, தோற்பானா என்பதே கதை! இதோ, கையில் வெற்றிக் கோப்பையுடன் ஒயிலாக நிற்பவள் வீணா – ஜெயிப்பவனுக்கு மாலை சூடக் காத்திருப்பவள். திவாகரைத் தோல்வியடையச் செய்து, வீணாவை தூரத்துச் சொந்தக்காரன் பரத்துடன் சேர்த்து வைக்கும் முனைப்புடன் இதோ நிற்பவள் விக்கெட் கீப்பர் மீனாட்சி – வீணாவை வளர்த்து ஆளாக்கியவள்.

போட்டியின் முடிவை இதோ ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருப்பவர்கள்- வீணாவின் பெற்றோர் மூர்த்தி, விசாலம் , உறவினர்கள்

நாகராஜன், வேம்பு மற்றும் திவாகரின் நண்பன் மாசி. முத்தாய்ப்பாக, முந்திரிக் கோட்டை மாதிரி தன்னையே அம்பயராக வரித்துக்கொண்டு நிற்கும் கோழி கோபால்- எல்லாப் பிரச்சினைகளையும் கோழி மாதிரி கிளறி விடுவதில்  மன்னன்!
இனி, கடைசிப் பந்து  நாடகம் ஜாலியாக ஆரம்பம்!

காட்சி 1:

(மூர்த்தியின் வீட்டு ஹால் ... டீவீ எதிரே மூர்த்தியும், விசாலமும் அதை வெறித்துப் பார்த்தபடி உட்கார்ந்திருக்கிறார்கள். கோழி கோபால் உள்ளே நுழைகிறார்)

மூர்த்தி: அடடே... வாடா

கோழி ......விசாலம்...ஆபீஸ்ல என்னோட வேலை பாத்த கோபால் பத்தி

சொல்லியிருக்கேனே... இவன் தான்...எல்லா விஷயத்தையும் கோழி மாதிரி கிளறுவான் .. உக்காருடா கோபால்

கோபால்: சாரிடா மூர்த்தி... நீங்க டீவீ பார்துக்கொண்டிருக்கப்ப நான் கரடி மாதிரி வந்துட்டேன்!

விசாலம்: ஏங்க... இவர் கோழியா... கரடியா?

மூர்த்தி: கிளரினா கோழி... இப்படி சொல்லாம கொள்ளாம வீட்டுக்குள்ள நொழஞ்சா கரடி..

மத்த நேரத்தில வெறும் கோபால்... சரியாடா?

கோபால்: அதை விடு... (எட்டிப் பார்த்துவிட்டு)

என்னடா மூர்த்தி... டிவியில படமும் இல்ல.. பேச்சும் இல்ல!

மூர்த்தி: டீவீ வேலை செய்யலேடா... பாத்து பாத்து பழகிடிச்சா ... அதான் வெறுமே பாத்துக்கிட்டிருக்கோம்!

கோபால்: டிவி ரிப்பேர் ஆனா என்னடா மூர்த்தி.... பக்கத்தில ரேடியோ இருக்கே.... நீதான் ஆபிசில சொல்லுவியே, உன் பொண்டாட்டி ஒரு ரேடியோன்னு!

விசாலம்: (படபடவென்று மூர்த்தியை நோக்கி கையாட்டியபடி) அடப்

பாவி மனுஷா... உமக்கு பொண்டாட்டியா வாழ்க்கைப் பட்டதுக்கு எனக்கு இதுவும் வேணும்...இன்னமும் வேணும்...இவர் என்னை பொண்ணு பாக்க வந்தப்பவே என் அப்பா கிட்ட இந்த ஆளு முழியே சரியிலேன்னு தலையால அடிச்சுகிட்டேன்... இந்த பாழாப் போனவர் கிட்ட என்னை தாரை வார்த்து

கொடுத்திட்டு எங்கப்பன் பரலோகம் போயிட்டாரே! ஏன்யா... நான் ரேடியோவா? அலறிகிட்டே இருக்கேனா? நான் பேசறது நாராசமா இருக்கா? அப்ப, என்னை டைவோர்ஸ் பண்ணிட்டு, ஒரு ஊமையை கட்டிக்கிரதுதானே? ஆனா, எல்லாருமே என்னை மாதிரி ஏமாளியா என்ன, இந்த ஆளுக்குப் போய் கழுத்தை நீட்டுறதுக்கு! எனக்கு பொறந்த வீட்டில சீராப் போட்ட நகை நட்டை தவிர, இந்த மனுஷன் குந்து மணி தங்கமாவது வாங்கித் தந்தது உண்டா...இல்ல, ஆசையா நாலு இடத்துக்கு கூட்டிப் போனது உண்டா?

மூர்த்தி: ஐயோ விசாலம்... இந்த கோபால்

ரொம்ப வருஷம் கழிச்சு இப்பதான் வந்திருக்கான்... அதான் தப்பா ஏதோ உளற்றான்.. ஏண்டா கோழி கோபால்.. பழசை சரியா கௌரிப் பாரு... நம்ம கூட ஆபீசில வேலை பார்த்த சாரதி தாண்டா தன் பொண்டாட்டியை ரேடியோன்னு சொன்னான்!

கோபால்: நீ சொல்றது பாதி சரி... சாரதி தன பொண்டாட்டியை ரேடியோ சிலோன்னு சொன்னான்.. நீ உன் பொண்டாட்டியை ஆல் இண்டியா ரேடியோன்னு சொன்னே

! விசாலம்: இப்படி ஆபீசில இருந்த கண்டவன் கழிசடைங்க கிட்டேயல்லாம் என்னை இளக்காரமா பேசரதுக்குத் தான் என்னோட குடும்பம் நடத்தினீரா ?  இத மாதிரி உதவாக்கரைங்களோட வெட்டிப் பேச்சு பேசித்தான் கிளார்க்காவே ரிடையர் ஆயிட்டீங்க!  நான் ஆல் இண்டியா

ரேடியோன்னா செத்துப்போன உங்கம்மா கீறல் விழுந்த கிராமபோன் ரிகார்டுன்னு இந்த கோழி கிட்ட சொல்றது தானே?

(மூர்த்தி அவசரமாக எழுந்து டிவி ரிமோட்டை எடுத்து விசாலத்தின் முகத்துக்கு நேரே அழுத்த, விசாலத்தின் கையும் வாயும் மட்டும் அசைய, பேச்சு வரவில்லை!)

மூர்த்தி: அப்பாடா...(ம்யூட்ல வச்சுட்டேன்!

கோபால்: ஏண்டா மூர்த்தி... உன் பொண்டாட்டி

உன்னை திட்டறது நியாயம்... என்னையுமில்ல கழிசாடை, கண்டவன்னு பேசறா!

மூர்த்தி: தப்புதான்டா ....உன்னை

கடன்காரன்னு சொல்லியிருக்கணும்...(மேஜை மீதிருந்து ஒரு நோட்டை எடுக்கிறார்).. இங்க பாரு .. நாப்பது வருஷமா ஆபீசில டீ பிஸ்கட் வாங்கினப்பெல்லாம் 'நீ காசு குடு, அப்புறம்

தரேன்'னு சொன்னே இல்லே! மொத்தம் 6575 ரூபா 20 பைசா... எடுடா பணத்த...

கோபால்: ஏண்டா ... 10 பைசா 20 பைசாவையெல்லாம் ஜனங்க எப்போவோ மறந்துட்டாங்க...கவர்மெண்டே அச்சடிக்கிறதை நிறுத்திடுச்சு! நீ எதுக்குடா எழுதி வச்சிருக்கே? (மெதுவாக) இவன் இப்படி ஹைதர் காலத்து பாக்கியையெல்லாம் மறக்காம இருக்கான்னு தெரிஞ்சிருந்தா, எதிர் வீட்டுக்குக்கு குடி வந்திருக்கவே மாட்டேன்!

மூர்த்தி: என்ன யோசிக்கிற...நீ பிரெண்டாச்சே ... வட்டி எதுவும் போடலே! கோபால்: அட... நோட்டில இன்னும் நெறைய பக்கம் பாக்கி இருக்கேடா... எழுதி முடி... மொத்தமா தாரேன்!

(மீனாட்சி கையில் தண்ணீர் தம்பளுருடன் வந்து கோபாலிடம் நீட்டுகிறாள்)

மூர்த்தி: மீனாட்சி...இவன் என்னோட ஆபீஸ் நண்பன் கோபால்... ரொம்ப நாள் கழிச்சு வந்திருக்கிறான்... எதிர் வீட்டில்தான் குடி வந்திருக்கிறான்... கோபால், தண்ணி குடிப்பா... கேன் 30 ரூபான்னு வாங்கறேம்பா! (கையில் இருந்த கடன் நோட்டை ஆட்டுகிறார்)

கோபால்: (அவசரமாக) வேணாம்... தண்ணி வேணாம்...நான் எதிர் வீடுதானே... பேப்பர் படிச்சிட்டு போயிடுவேன்... (மீனாட்சியிடம்) ஆமா... நீங்க?

மூர்த்தி: மீனாட்சி என்னோட தூரத்து உறவுடா ... இவ பையனோட இந்த வீட்டோட இருக்கா... இந்த வீட்டு நிர்வாகமெல்லாம் மீனாட்சிதான்!

கோபால்: அப்படியா... ரொம்ப

சந்தோஷம்மா... உங்க வீட்டுக்காரர்...?

மீனாட்சி: அந்த மனுஷன் ஓடிட்டார்!

கோபால்: (யோசித்து விட்டு சிரிக்கிறார்)

ஓஹோ...கிரேசி மோகன் டிராமா ஜோக்கு! ஆடிட்டரை ஓடிட்டார்னு சொல்றீங்க!

மூர்த்தி: அட... நெஜமாவே, மீனாட்சி புருஷன் நாகராஜன் எங்கியோ ஓடிட்டான்யா!

கோபால்: வெரி சாரீ

மீனாட்சி:மூர்த்தி அத்தான்... என் புருஷன் பேச்சை விடுங்க... விசாலம் அண்ணியை ஏன் சைலண்ட் மோட்ல வச்சிருக்கீங்க? கை வாயை அசைச்சு ஏதோ சொல்ல

நெனைக்கறாங்க..

. மூர்த்தி: அவ சொல்லி நாங்க வாங்கி கட்டிக் கிட்டது போதும்... இப்ப பாரு.. ஆப் பண்ணிடறேன், தூங்கிடுவா!

(மூர்த்தி ரிமோட்டை அழுத்த, விசாலம் சேரில் சாய்ந்து தூங்கி விடுகிறாள்!)

கோபால்: மீனாட்சியம்மா ... நீங்க கவலையை விடுங்க.. உங்க புள்ளை இருக்கானே... உங்களை ஒரு குறையும் இல்லாம பாத்துப்பான்

மீனாட்சி: (எரிச்சலுடன்) அட போங்க... அப்பன்தான் சொத்தை முழுசா அழிச்சிட்டு ஓடிப் போனான்னா, புள்ளை எடக்கு மடக்கா பேசிக்கிட்டு திரியறான், என்னையும் சேர்த்து எல்லாரையும் பைத்தியமாக்கிறான்... இதோ

வரான் பாருங்க என்னோட சீமந்த புத்திரன்!
(வேம்பு உள்ளே நுழைகிறான்)

வேம்பு : ஹாய் மம்மி... ஹாய் மூர்த்தி

அத்தான்... ஹாய் கோழி கோபால் சார்!
கோபால்: (திடுக்கிட்டபடி) என் பேரு எப்படி

உனக்குத் தெரியும் தம்பி... ஒட்டுக்கேட்டியா?

வேம்பு: இல்ல... இந்த வேம்பு ஒரு துப்பறியும்
சாம்பு! இந்த தெருவில எனக்குத் தெரியாம
யாரும் நடமாட முடியாது!

மூர்த்தி: ஆமா.... தெரு நாய் கூடவே இவனும்
இருப்பான்!
வேம்பு: நீங்க எதிர் வீட்டிலேந்து இங்க

நுழஞ்சீங்க .... நான் ஜோசியம் சொல்லற
ஆளா உங்க வீட்டில நுழைஞ்சு உங்க
பொண்டாட்டி கிட்ட எல்லா விஷயத்தையும்

கறந்துட்டேன் ... நீங்களும் மூர்த்தி அத்தானும்

ஒன்னா ஒரே ஆபிசில 25 வருஷம் இருந்து ரிக்கார்ட் கிரியேட் பண்ணியிருக்கீங்க!

கோபால்: ஹி ஹி .... தேங்க்ஸ்

வேம்பு: எதுக்கு தேங்க்ஸ்...ஆபீஸ்ல வேலையே செய்யாம அரட்டை அடிச்சதால,

அப்பப்ப மெமோ கொடுத்திருக்காங்க... இப்ப, தெனம் எங்க வீட்டில வந்து ஓசி பேப்பர் படிக்கிறதுக்காகவே எதிர் வீட்டில குடி வந்திருக்கீங்கன்னு உங்க வொய்ப் உங்களுக்கு கான்டக்ட் சர்டிபிகேட் குடுத்திருக்காங்க!

கோபால்: (அசடு வழிய) அது அப்படியில்லடா கண்ணா.. பசங்களுக்கு நல்லது கெட்டது எடுத்துச் சொல்ல எப்பவும் நாலு பேர்

இருக்கணும்... நான் நாலாவது! ஆமா... நீ என்ன பண்ற வேம்பு?

வேம்பு: மத்த மனுஷனுங்க, ஜீவராசிங்க மாதிரி

நானும் நடமாடிக்கிட்டிருக்கேன்!

மீனாட்சி: அட கிறுக்குப் பயலே... கடவுள் உனக்கு ஆறாவது அறிவை

குடுத்திருக்கானே... அதை வச்சு உருப்படியா என்ன பண்றேன்னு இவர் கேக்கறார்

கோபால்: அதாவது, இன்னொருவர் தயவை எதிர்பார்க்காம சொந்தமா நாலு காசு சம்பாதிக்க நீ என்ன முயற்சி செய்யிறே!

வேம்பு: அப்ப நீங்க ஏன் சார் என் மூர்த்தி அத்தான் தயவில டீ , பிஸ்கட், பழம்னு சாப்பிட்டு கடன் வச்சிருக்கீங்க!

கோபால்: (சமாளித்த படி) இது வேற

விஷயம்டா அம்பி ... நாங்க ரெண்டு பேரும்

ஒன்னுக்குள்ள ஒன்னு... இவன் சும்மா நோட்ல கடன்னு எழுதி வச்சு தமாஷ் பண்ணறான்!

மூர்த்தி: டேய்..டேய்.. சந்தடி சாக்கில கடனை கை கழுவப் பாக்காத!

வேம்பு: அது! அம்மா... பசிக்குது... சாப்பாடு போடு (தலையில் அடித்தபடி மீனாட்சி வேம்புவுடன் உள்ளே போகிறாள்... பரத் நுழைகிறான்)

பரத்: மூர்த்தி மாமா...மாடியில கேபிள் டிவி ஓயர் லூசா இருந்திச்சு... சரி பண்ணிட்டேன்.. இனிமே டிவி நல்லா தெரியும்

மூர்த்தி: அப்பாடா.. நாம கிரிக்கெட் மேட்சை பாக்கலாம்னு சொல்லு

விசாலம்: (எழுந்து கொண்டு) மேட்ச் ஆரம்பிச்சாச்சா .... யார் ஆடறா... டெண்டுல்கரும் ஷேவாக்குமா?

கோபால்: பேஷ் பேஷ்...அறுபதிலும் கிரிக்கெட் ஆசை வருமில்ல!

மூர்த்தி: டேய் கோபால்... இந்த பரத் எனக்கு உறவுடா . கிரிக்கெட் போர்டில வேலை செய்யிறான்.. பீ காம் படிச்சிருக்கான் விசாலம்: எங்க பரத் வந்தா வீடே கலகலன்னு ஆயிடும்.. இவனால எங்களுக்கு கிரிக்கெட்னா என்னான்னு புரிஞ்சு போச்சு!

மூர்த்தி: அதுவும் மெட்ராசில மேட்ச் வந்தா பெரிய பெரிய ப்ளேயருங்க, மேட்ச் பாக்க வந்த பெரிய மனுஷனுங்க, சினிமாக்காரனுங்கன்னு அத்தினி பெரும் பரத் கையை பிடிச்சு குலுக்கறதை கதை கதையா சொல்லுவான்!

கோபால்: கொஞ்சம் இரு... பழசை கௌரிப் பாக்கிறேன்.... இந்த பரத்தோட அப்பாவைப் பத்தி ஏதோ முன்னாடி நீ சொன்னதா

ஞாபகம்?

மூர்த்தி: (கோபத்துடன்) சொன்னேன்... அந்த வேலூர் கிருஷ்ணசாமி பத்தி பேச்சை எடுக்காத.. எனக்குப் பத்திகிட்டு வருது

பரத்: நான் சொல்றேன் கோபால் சார்... நாங்க இவரோட அக்கா வழி உறவு.. எங்க அப்பாவுக்கும் இவருக்கும் பண விஷயத்தில ஒரு தகராறு... அன்னிக்கு எங்க அப்பா படபடன்னு பேசினது தப்புதான்... ஆனா, நான் இந்த வீட்டில எல்லாரோட சகஜமா பழகிண்டிருக்கேன்... சரிதானே மூர்த்தி மாமா!

மூர்த்தி: ஆமா...ஆமா

(மூர்த்தியின் மகள் வீணா நுழைகிறாள்)

வீணா: பரத்.... கிரிக்கெட் மேட்ச் இன்னும் ஆரம்பிக்கலியே ... அப்பாடா... நீயும் கரெக்டா

வந்துட்டே ... விளையாடறவங்க பத்திய விஷயங்களை புட்டு புட்டு வச்சிடுவே...

அப்பா.... சார் யாரு?

மூர்த்தி: (கடன் நோட்டை எடுத்தபடி) நான் முன்னே சொல்லியிருக்கேனேம்மா ... ஆபிசில கோழி கோபால்னு ... இவன்....

கோபால்: (குறுக்கிட்டு) உன் அப்பாவுக்கு க்ளோஸ் ப்ரெண்டுமா நான்!

மூர்த்தி: ஆமா..... டீ , பிஸ்கட்டை க்ளோஸ் பண்ணின ப்ரெண்ட்

/திரை- மறுபடி விலகும் /

# முதல் பகுதி | காட்சி 2

(அதே இடம்.... விசாலம், மூர்த்தி, கோபால் ஆகியோர்) கோபால்: (பேப்பரைப் படித்தபடி) இங்க பார்றா மூர்த்தி... பாகிஸ்தான் பந்து வீச்சில் இந்தியா திணறல்.... சேவாக், டோனி ரன் எடுக்காமல் ஆட்டம் இழந்தனர்

விசாலம்: நாசமாப் போச்சு... இவங்க

ஆடலேன்னு யார் அழுதா!

மூர்த்தி: நீதான் அழுதே.... நேத்து மேட்ச் ஆரம்பிக்கச்சே 'இதோ சேவாக்கும் டோனியும் நுழையறாங்க... சிக்ஸரா அடிச்சு குவிக்கப் போறாங்க'ன்னு குதிச்சே...உடனே கரண்ட் போயி மேட்சே பாக்கல ... இப்ப என்ன ஆச்சு பார்

விசாலம்: ம்... ஒரு தரம் நன்னா ஆடறா... ஆனா, அடுத்த மேட்ச்ல சொதப்பிடறா !

மூர்த்தி: அதாண்டி கிரிக்கெட்டு..

கோபால்: இத பாருங்க... கிரிக்கெட்டும் நம்ம வாழ்க்கையும் ஒன்னு ... நல்லதும் கெட்டதும் மாறி மாறி வரும்... ஆனா எப்ப எப்படி மாறும்னு யாருக்கும் தெரியாது!

(உள்ளிருந்து வீணா , பரத், மீனாட்சி ஆகியோர் வருகிறார்கள்) பரத்: மூர்த்தி 

மாமா.... மாடி ரூம்ல வயரிங், பைப் லைன் எல்லாத்தையும் சரி பண்ணிட்டேன்..

வீணா: ஆமாம்பா... மாடி ரூம் இப்ப ரொம்ப நீட்டா, சூப்பரா ஆயிடிச்சு ... சாரி பரத்.... உன்னை வேலை வாங்கி சிரமப் படுத்திட்டேன்..

பரத்: ஏய் வீணா... உதை குடுப்பேன்... சாரி கேக்க நான் என்ன வேற்று மனுஷனா?

கோபால்: அதானே... ஏண்டா மூர்த்தி.. எனக்கு எப்ப உன் பொண்ணோட கல்யாண சாப்பாடு போடப் போறே ?

மூர்த்தி: உனக்கு மொய் எழுத எப்ப வசதி வருதோ, அப்ப வீணா கல்யாணத்தைப் பத்தி யோசிக்கறேன்... ஆபிஸ்ல டீ , பிஸ்கட் சாப்பிட்டதுக்கே நீ குடுக்கலே... எங்க நோட்டு (தேடுகிறார்)

வீணா: எனக்கு தெரியும்பா.... 6575 ரூபா 20 

பைசா இவர் குடுக்கணும்

கோபால்: ஆ ஊன்னா கடனைப் பத்தி

பேசுங்க... ஒரு வயசுப் பொண்ணு வீட்ல

இருக்காளே...காலா காலத்தில ஒருத்தனுக்கு
கட்டிகுடுக்கனும்னு உனக்கு தோணலி யாடா?
வீணா: (கிண்டலாக) அப்புறம், வயித்தில
நெருப்பைக் கட்டிகிட்ட மாதிரி இருக்க
வேணாமானு கேளுங்க சார்!
பரத்: இன்னொரு கேள்வியும் இருக்கே!
பஞ்சையும் நெருப்பையும் பக்கத்தில வச்சா
பத்திக்காதான்னு கேளுங்க!

கோபால்: மனசில இருக்கிறதை ரெண்டு
பேரும் தெளிவா சொல்லிட்டீங்க! (மூர்த்தியைப்

பார்த்து) ஏண்டா மரமண்டை .... இந்த ரெண்டு

பேரும் வரிஞ்சு கட்டிக்கிட்டு மாடி ரூமை ரெடி பண்ணியிருக்காங்க...பஞ்சு நெருப்புன்னு பஞ்ச் டயலாக் பேசறாங்க... இவங்க மனசில என்ன திட்டம் இருக்குன்னு உனக்குப் புரியலையா?

விசாலம்: இவர் என்ன சொல்ல வர்றாரு? மாடி ரூம் பூரா தட்டுமுட்டு சாமான் போட்டு குப்பை கூளமா கெடந்திச்சு... அதை இவங்க கிளீன் பண்ணி அழகா பண்ணியிருக்காங்க!

கோபால்: போச்சுடா... உன் வொய்பும் ட்யூப் லைட்டு தானா... மீனாட்சியம்மா ... உங்களுக்கும் புரியலையா?

மீனாட்சி: அதாவது, இவங்களுக்குள்ள 'அது' இருக்குன்னு சொல்ல வர்றீங்க...

வீணா: கோபால் சார்... அது, இது, எது... இந்த மூணுமே எங்க நடுவில இல்ல!

மீனாட்சி: இல்லேன்னா, வரவழிச்சுக்குங்க... 

நீயும், பரத்தும் ரொம்ப நல்ல ஜோடி... உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணி வைக்கணும்னு நான் அடிக்கடி சொல்லிக்கிட்டு வர்றேன்

பரத்: மீனாட்சி மாமி... நானும்தான்

ஏற்கெனவே பதில் சொல்லிட்டேனே...

மறுபடியும் சொல்றேன்... நான் கிரிக்கெட்

ஆபிஸ்ல சாதாரண வேலையில இருக்கேன்... இன்னும் பெரிய வேலைக்கு முயற்சி பண்ணி

சேரணும் ... நடுவில வேற எதையும் என்னால யோசிக்க முடியல மாமி

வீணா: நானும் அப்படித்தான்... பீ. காம் முடிச்ச கையோட மேல எம். காம் சேரனும்கிறது என்னோட கனவு

மூர்த்தி: கேட்டுக்கிட்டாயாடா கோபால்.... இவ கல்யாணத்தைப் பத்தி எந்த யோசனையும் இப்ப எங்களுக்கு இல்ல..

(வேம்பு நுழைகிறான்)

வேம்பு: ஏய் வீணா... பரத்....ரொம்ப

அலட்டிக்காதீங்க...'நீங்க மேட் பார் ஈச் அதர் ஜோடி.. கட்டிக்கீங்க, கட்டிக்கீங்கன்னு என் மம்மி புலம்பறதும், நாங்க அதைப் பத்தியே நெனைக்கிறதில்லன்னு நீங்க புருடா உடறதும்

... கேட்டுக்கேட்டு எனக்கு அலுத்துப் போச்சு... என்ன, பிலிம் காட்ரீங்களா? சரின்னு தலையை ஆட்டிட்டு போகவேண்டியதுதான!

வீணா: அட போடா லூசு... கூத்தில வர்ற கோமாளி மாதிரி பேசாத..

பரத்: கூல் வீணா... எண்டா வேம்பு... எங்களுக்குன்னு தனி அபிப்பிராயம் இருக்கக்

கூடாதா என்ன?

வேம்பு: நான் சொல்றதை சொல்லிட்டேன்... அப்புறமா, கல்யாண விஷயத்தில நான் உங்களை முந்திகிட்டேன்னு நீங்க புலம்பக் கூடாது! (எல்லாரும் சிரிக்கிறார்கள்)
வீணா: நீயே உன்னை வச்சு காமெடி பண்ணிக்கிறியா! வா.. பரத் (போகிறார்கள்)
(வேம்பு அவர்களை முறைக்கிறான்)

மீனாட்சி: என்னடா முறைக்கிற.... ஊர் உலகத்தில வயசுப் பசங்க உன்னை மாதிரி வெட்டியாவா இருக்காங்க? உனக்கு கல்யாணம் ஒன்னுதான் பாக்கி (உள்ளே போகிறாள்)
கோபால்: (வேம்பு அருகில் சென்று) ஏன்டா

கண்ணா... நீ யாரையாவது லவ் பண்றியா?

வேம்பு: ஆமா கோபால் சார்... டிசம்பர் 7ம் லவ் ஆரம்பிச்சாச்சு! 2020ஆம் வருஷம் என்

கல்யாணம்!

கோபால்: வெட்கத்தைப் பாரு... ஆனா, ஏழு வருஷம் எதுக்கு வெயிட்டிங்? நாலு காசு சம்பாதிச்சு நாலு பேரு மெச்சுகிற மாதிரி வரணும்னு ஏதாச்சும் கண்டிஷனா?

வேம்பு: வேலை, பேங்க் பேலன்சு எதுவுமே தேவையில்லை சார்... ஏன்னா, பொண்டாட்டி இருக்கிற எடத்துக்கு நான் போயி செட்டில் ஆயிடுவேன்! அங்க, நம்ம ஊர் சங்கதிங்க எதுவும் செல்லாது!

கோபால்: என்ன கண்ணா... என்கிட்டயே தமாஷ் பண்றே! நான் காவிரி தண்ணி குடிச்சு வளர்ந்தவன்!

வேம்பு: என்னோட லவர் அல்லுவியல் பேன்

தண்ணி குடிச்சு வளர்ந்தவ சார்!... அவ ஊர் பேரு ப்ராபரி !

கோபால்: அட என்னப்பா இது... வாயில நுழையாத பேரையெல்லாம் சொல்லி இப்படி கடிக்கறே?

வேம்பு: வாயில நுழையாத இடம் மட்டுமில்ல...

கொசு நுழையாத இடம்... அதனால, கடிங்கற

பேச்சே இல்லே... சரி... நீங்க, என்ன

மாதிரி வேலை,இல்லாமதான இருக்கீங்க.... டிசம்பர் 7ஆம் தேதி என்ன நடந்திச்சுன்னு இந்த நாடக ஆசிரியரை ஒரு ப்ளாஷ் பேக் சீன் எழுத சொல்றேன்!

/திரை – மறுபடி விலகும்/

# முதல் பகுதி | காட்சி 3

அதே ஹாலை ஒட்டிய அறை )

வேம்பு: (இருட்டில் குரல்) கோபால் சார்.... டிசம்பர் 7ஆம் தேதி ராத்திரி 11 மணி இருக்கும்.... தூங்கிக் கிட்டிருந்த நான் ஒரு தகரக் குரல் கேட்டு எழுந்தேன்!

(திரையில் ஒளி ... வேம்பு நிற்கிறான் )

பெண் குரல்: ஹலோ வேம்பு !

வேம்பு: யாரு? பொம்பளை ரோபோ குரல் மாதிரி இருக்கு? ஆனா ஆளு கண்ணுல தெரியலே?

குரல்: நான் உன் எதிரதான் நிக்கிறேன் வேம்பு!
வேம்பு: எதிர டேபிள் தான இருக்கு? என் பேரு எப்படி உனக்குத் தெரியும்?

குரல்: விளக்கமா சொல்றேன்... நான் ஒரு alien பொண்ணு! பூமியிலேந்து செவ்வாய் கிரகத்துக்கு கௌம்பின கியூரியாசிடி ஆகாயக் கப்பல் எங்க ப்ராபரி ஊர்ல நேத்தைக்கு

இறங்கிச்சு... அப்ப நான் அல்லுவியல் ஆத்தில

குளிச்சிக்கிட்டிருந்தேனா... அந்தக் கப்பல்ல எழுதியிருந்த உன் பேரு பளிச்சினு என் கண்ணில பட்டிச்சு!
வேம்பு: (ஆச்சரியத்துடன்) ஆமா செவ்வாய் போன க்யூரியாசிடி கப்பல்ல என் பேரையும் எழுதச் சொல்லி நாசாவுக்கு நான் ஈமெயில் அனுப்பிச்சேன்! குரல்: லட்சக் கணக்கான பேர்ல உன் பேர்தான் எனக்குப் புடிச்சிது

வேம்பு... ஏன்னா, போன ஜன்மத்தில நாம லவ் பண்ணியிருக்கோம்! அதை கண்டினியு பண்ண உன்னைத் தேடி இங்க நொடியில பறந்து வந்திருக்கேன்!

வேம்பு: (ஜொள்ளு விட்டபடி) ஹை .... அவ்வளவு வேகமாவா என்னை காதலிக்கிறே! உன் பேர் என்ன?

குரல்: என் பேரு கிர் கிர்.... உனக்காக கிரிஜான்னு சேத்துக்கிட்டேன்!

வேம்பு: கிர் கிர் கிரிஜா.... நீ எப்படி இருப்பே? உன்னை நான் உடனடியா பாக்கணுமே!

கிரிஜா: என்னைப் பாக்க மனுஷங்க

கண்ணுக்கு பவர் பத்தாது... கவலைப் படாதே

டியர்.... நாசா கிட்ட நான் உன்னை லவ்

பண்றதை சொல்லிட்டேன்... அவங்க 2020 வருஷத்தில மறுபடி பூமியிலேந்து செவ்வாய்க்கு அனுப்பப் போற ஆகாயக் கப்பல்ல உன்னையும் அழைச்சிகிட்டு வர்றதா ப்ராமிஸ் பண்ணிட்டாங்க! நீ என்னை கல்யாணம் பண்ணிக்கிட்டு என்னை ஆசை தீர பாத்து ரசிக்கலாம்!

வேம்பு: ஹை ... கேக்கவே சந்தோஷமா இருக்கே கிர் கிர் கிரி...நாசா கப்பல் நம்ம கல்யாணத்தை படம் எடுத்து, அதை எங்க உலகமே பாக்கப் போகுதா! (கெஞ்சலாக) கிர் கிர் கிரி... உன்னை பாக்கிறதுக்கு ஏழு வருஷம் வெயிட் பண்ண முடியாது... ஏன்னா , நான் இன்னும் லூசாயிடுவேன்... இப்பவே நான் உன்னைப் பாக்கிறதுக்கு வழி பண்ணேன்... ப்ளீஸ்!

கிரிஜா: ஆசையைப் பாரு! மேஜை மேல குட்டிக் கிண்ணத்தில  கொஞ்சம் எண்ணெய் இருக்கு பாரு டியர்.... அதில ரெண்டு சொட்டு உன் கண்ணில ஊத்திக்க... நான் ரெண்டு நிமிஷம் தெரிவேன்! (வேம்பு  மேஜை மேலிருந்த கிண்ணத்தில் இருந்த எண்ணையை இரு சொட்டு கண்ணில் ஊற்றிக்கொள்ளுகிறான் )

கிரிஜா (எதிரே நின்றபடி): வேம்பு... நான் அழகா இருக்கேனா?

வேம்பு: (பார்த்துவிட்டு திடுக்கிட்டு):  ஐயையோ ... பிசாசா நீ?  வாய் மேல இருக்கு .... மூக்கு கீழ இருக்கு... கண்ணுங்க ஒன்னு மேல ஒன்னு இருக்கே?

கிரிஜா:  சாரி வேம்பு.... புரோக்ராம்ல ஏதோ தப்பு வந்திச்சு..... இரு (திரும்பி, மறுபடி வருகிறாள்) இப்ப எப்படி இருக்கேன் வேம்பு!

வேம்பு: (பயம் தெளிந்து): அப்பாடா... நீ இப்ப சூப்பரா இருக்கே கிர் கிர் கிரி ….. ஆமா, என்னப் பத்தி நல்லா தெரிஞ்சுதான் நீ லவ் பண்ணியா?

கிரிஜா: ஆமா... இந்த பூமியில நீ ஒன்னுத்துக்கும் லாயக்கில்லாத ஆளு.... பிரம்மா ஒரு மிஷ்டேக் பண்ணிட்டாரு.... நீ செவ்வாய்க்கு வந்தா ஓஹோன்னு ஆயிடுவே!

வேம்பு: சபாஷ்... நான் செவ்வாயில பெரிய ஆளா ஆயிடுவேனா (தயங்கிய படி) ஒரு விஷயம் கிர் கிர் கிரி... உங்க ஊருக்கு நான் வந்தப் புறம் என்னை ‘இந்த வேலையை செய்... அந்த வேலையை பாரு... தண்ட சோறு திங்காத’ ... இப்படியெல்லாம் சொல்லக்கூடாது... ஆமாம்..

கிரிஜா: அப்படி எதுவும் சொல்லமாட்டேன்

வேம்பு... கண்ணாடி ரூம்ல, தங்க நாற்காலியில நீ கால் மேல கால் போட்டுக்கிட்டு ஒக்காந்தா

போதும்..... நீ சிரிச்சுகிட்டு கை, கால் அசைச்சுகிட்டு தமாஷ் பண்ணிகிட்டே இரு டியர்!

வேம்பு: அய்யோடா... இதுக்கு நான் கொடுத்து

வச்சிருக்கனுமே.... அப்படியே செஞ்சுடறேன்...

ஆனா கூட, கிர் கிர் கிரி.... உன் ஊர்க்காரங்க, பொழைப்புக்கு என்ன செய்வே ன்னு என்னைக் கேக்க மாட்டாங்களா?

கிரிஜா: கேக்கவே மாட்டாங்க வேம்பு... உன்னை வேடிக்கை பாக்க வர்றவங்க கிட்ட

நான் காசு வாங்கிடுவேன்... அதில நாம ஜாலியா காலம் தள்ளலாம்!

வேம்பு: (அசடு வழிய) அப்போ, ஜூவில

பாக்கிற மாதிரி என்னைப் பாக்கப் போறாங்களா? ம்...ஒகே

(ப்ளாஷ் பேக் முடிகிறது.......)

வேம்பு: புரிஞ்சுதா கோபால் சார் .... செவ்வாயில காதல் கல்யாணம் பண்ணிக்கிட்டு சாதனையாளர் பட்டியலில நான் மொதல் இடம் பிடிக்கப் போகிறேன்!

கோபால்: (தலையை சொரிந்தபடி) தம்பி..... நீ சொல்றதை நம்பவும் முடியல... நம்பாமலும் இருக்க முடியலே...

வேம்பு: என்னோட மம்மி, மூர்த்தி மாமா குடும்ப ஆளுங்க எல்லாமே இப்படித் தான் சொல்றாங்க.... 2020ல செவ்வாய் கிரகத்தில இந்த வேம்பு, கிர் கிர் கிரிஜா கல்யாண மாலையும் கழுத்துமா நிக்கிறப்ப, அட்சதை போட வருவீங்கல்ல... அப்ப, என்னோட

மகிமையைத் தெரிஞ்சுக்குவீங்க!

கோபால்: வாஸ்தவம்தாம்பா... குரங்காட்டி குரங்கை வச்சு வேடிக்கை காட்டறது இந்த பூமியில சாதாரணம்... ஆனா, செவ்வாயில அது புதுமை... உன்னோட மகிமைதான்!

வேம்பு: கேலி பண்ணாதீங்க கோபால் சார்... உங்க கிட்ட ஒரு விஷயத்தை ரகசியமா சொல்றேன்...2020ல நாசா ஆளுங்களோட செவ்வாய்க்குப் போகப் போற கப்பல், அந்த லோகத்து மாப்பிள்ளையா என்னையும் ஸ்பெஷல் கெஸ்டா அழைச்சுக்கிட்டுப் போகப் போறது! நான் நீன்னு அந்தக் கப்பல்ல போக கோடிக் கணக்கா பணத்தைகொட்டத் தயாரா

நெறைய பேர்

இருக்காங்க....அவங்களுக்கெல்லாம்

நோன்னு நாசா சொல்லியாச்சு... ஆனா பாருங்க, மேரேஜ் பார்ட்டின்னு என் கூட ஆறு பேர் வரலாம்.... உங்களையும் செவ்வாய்க்கு அழைச்சிகிட்டு போறேன்.... ரெண்டாயிரம் ரூபாதான் உங்களுக்கு செலவு....

கோபால்: ரெண்டாயிரம் ரூபாயில செவ்வாய் கிரகத்துக்கு போறது ரொம்ப சீப்புதான்... இருந்தாலும் தம்பி, உன்னோட கிர் கிர் கிரி வாயால என்னைக் கூப்பிட்டா நல்லாயிருக்குமேடா கண்ணா!

வேம்பு: அதுக்கென்ன கோபால் சார்.... கிரிஜாவையே உங்களைக் கூப்பிடச் சொல்றேன்... இப்ப அவ வர்ற நேரம்தான்...

அதுக்குள்ள, நான் குளிச்சுட்டு வந்துடறேன்....
என்னோட கிரிஜா வர்றப்ப நான் மாப்பிள்ளை கணக்கா இருக்கனுமில்ல!

(வேம்பு உள்ளே உள்ளே போகிறான்.... சில நிமிடங்களில் ஒரு பெண்ணின் தகரக் குரல் கேட்கிறது)

கிரிஜா: வேம்பு.... உன்னோட கிர் கிர் கிரிஜா வந்திருக்கேன் டியர்....

கோபால்: யாரு குரல் கொடுக்கிறது? செவ்வாய் பொண்ணா வந்திருக்கிறது? கிரிஜா: ஆமா ... நீங்க யாரு அங்கிள்?

கோபால்: நான் வேம்புவுக்கு அங்கிள்.... அதனால, உனக்கும் அங்கிள்! உங்களோட லவ் ஸ்டோரி எனக்குத் தெரியும் கிர் கிர் கிரி!

கிரிஜா: எனக்கு வெட்கமா இருக்கு அங்கிள்.... எங்க கல்யாணம் எப்ப நடக்கும்னு நான்

ஆவலா காத்துகிட்டிருக்கேன்... எங்க மேரேஜுக்கு நீங்க கட்டாயம் செவ்வாய்க்கு வரணும் அங்கிள்!

கோபால்: வரணும்னு ஆசைதான் கிர் கிர்... ஆனா, நாசா கப்பல்காரன் ரெண்டாயிரம் ரூபா கேக்கரானாமே

கிரிஜா: இப்ப மூவாயிரம் ரூபா ஆயிடிச்சு அங்கிள்....ஒன்னு செய்யிறேன்.... நான் இப்பவே உங்களை செவ்வாய்க்கு ப்ரீயா அழைச்சிகிட்டுப் போறேன்! உங்களை கண்ணாடி ரூம்ல வச்சு, தங்க நாற்காலியில உக்கார வச்சு...

கோபால்: (பதறியபடி) தெரியும்மா.... குரங்காட்டி மாதிரி என்னை வித்தை காட்டி காசு பண்ணுவே! வேணாம்.. வேணவே வேணாம்.... ரெண்டாயிரமோ மூவாயிரமோ கட்டித் தொலைச்சிட்டு கல்யாணத்துக்கே

வர்றேன்….

கிரிஜா: தேங்க்ஸ் அங்கிள்….. (உரக்க) வேம்பு…. நீ எங்க இருக்கே?

வேம்பு (குரல்): கிர் கிர் கிரி…. நான் குளிச்சிட்டு

ட்ரஸ் பண்ணிகிட்டிருக்கேன்….. இதோ வந்திடுவேன்

கிரிஜா: சீக்கரமா வா… நான் இப்ப செவ்வாய் லோகத்து கல்யாண ட்ரெஸ்ல வந்திருக்கேன்! டு பீஸ் டிரஸ் டியர்!

கோபால்: (தனக்குள்) ஐயோ….. கிர் கிர் கிரி

எப்படி இருப்பான்னு நான் பாத்தாகணுமே… அதுவும் டு பீஸ் டிரஸ்னு வேற

சொல்றாளே….வேம்புன்னா கண்ணில சொட்டு

மருந்து போட்டுக்கிட்டு ரசிப்பான்….நான் என்ன செய்ய முடியும்? (மேஜை மீது கிண்ணம்

இருப்பதைப் பார்க்கிறார்) ஹை ... ஏதோ டேபிள் மேல கிண்ணம் இருக்கே.... எண்ணையும் இருக்கே! ரெண்டு சொட்டு விட்டுப் பார்ரா கோபால்! (எண்ணையைக் கண்ணில் விட்டுக்கொண்டவர் கதறுகிறார்) ஐயையோ ..... கண்ணு எரியறதே....... வேம்பு, நீ எங்கடா இருக்கே..... சீக்கிரமா வாடா... கண்ணுல நெருப்பு கொட்டின மாதிரி எரியுதுடா.... ரொம்ப வலிக்குதுடா

கிரிஜா: என்ன ஆச்சு அங்கிள்..... வேம்பு, சீக்கிரம் வா

வேம்பு: (வந்தபடி): கோபால் சார் ... நான்

வந்திட்டேன்... என்ன ப்ராப்ளம் ?

கோபால்: என்னடா... நான்

துடிச்சிகிட்டிருக்கிறேன்... நீ சாவகாசமா

கேக்கிறியே... கிண்ணத்து எண்ணையை நீ
தடவிக்கிட்டா உனக்கு கிர் கிர் கிரிஜா

பளிச்சுன்னு தெரியறதா சொன்னியே... எனக்கு
மட்டும் ஏண்டா இப்படி மிளகாப் பொடி
கொட்டின மாதிரி கண்ணு எரியிறது ?

வேம்பு: ஐயோ, அங்கிள்.... இது நெஜமாவே
நான் இட்டிலி சாப்பிட்டு மீதி வச்ச மொளகாப்
பொடி எண்ணை !

/திரை – மறுபடி விலகும்/

# இரண்டாவது பகுதி | காட்சி 4

காட்சி 4:

(அதே ஹால்.... மூர்த்தி, விசாலம் உட்கார்ந்திருக்க, கோபால் கறுப்புக் கண்ணாடி மாட்டிகொண்டு தட்டுத் தடுமாறியபடி வருகிறார்)

மூர்த்தி: வாடா கோழி கோபால்... என்ன... கறுப்புக் கண்ணாடி போட்டு கிட்டு, தண்ணி போட்டவன் மாதிரி வர்றே!

கோபால்: தண்ணி இல்லடா... எண்ணெய்

மூர்த்தி: ஓஹோ... வேம்பு கிட்ட மாட்டிகிட்டியா!

விசாலம்: வேம்பு லவ் பண்றதா சொல்லியிருப்பானே.... தன் ரூமுக்கு அழைச்சிகிட்டு போயிருப்பானே!

கோபால்: (ஆச்சரியத்துடன்) ஆமா ... அழைச்சிகிட்டுப் போனானே

மூர்த்தி: செவ்வாய் கிரகத்துப் பொண்ணு பொண்டாட்டியா வரப் போறான்னு சொல்லியிருப்பானே!

கோபால்: சொன்னானே...சொன்னானே

விசாலம்: உங்களையும் செவ்வாய்க்கு தன்னோட கல்யாணத்துக்கு கூட்டிண்டு போறதா சொல்லியிருப்பானே!

கோபால்: அதுவும் சொன்னான்.... போய் வர மூவாயிரம் ரூபா ஆகும்னும் சொன்னானே!

மூர்த்தி: அந்த செவ்வாய்ப் பொண்ணைப் பாக்கணும்கிற ஆசையில, சொட்டு

மருந்துன்னு நெனைச்சு, மிளகாப் பொடி எண்ணையை கண்ணில விட்டுக் கிட்டுருப்பியே!

கோபால்: ஐயோ... விட்டுக்கிட்டேனே... என் கண்ணை நானே கெடுத்துகிட்டேனே

விசாலம்: உங்க ஜேபியிலேந்து மூவாயிரம் ரூபா காணாமப் போயிருக்குமே!

கோபால்: போச்சே... அந்தப் பணம் நாசாவுக்கு டிரான்ச்பர் ஆயிடிச்சுன்னு வேம்பு

சொல்லிட்டானே... ஏண்டா மூர்த்தி.... இப்படியெல்லாம் நடக்கும்னு என்கிட்டே மொதல்லயே சொல்லப்படாதாடா?

மூர்த்தி: வயசுப் பசங்கதான் ஜொள்ளு விட்டுகிட்டு அவன்கிட்ட இப்படி ஏமாந்தாங்க! நீ எப்படிடா ஏமாந்தே!

விசாலம்: உங்க பிரண்டுக்கு கட்டயில ஏற்ற வயசில போய் , செவ்வாய் சிறுக்கியைப் பார்க்க

ஆசை வந்திச்சு பாரு... அதான் அனுபவிக்கிறார்!

கோபால்: (பரிதாபமாக) போதும் விசாலம் மாமி.... ஏற்கெனவே, வேம்புவோட மிளகாப் பொடி கண்ணை குத்துது.... நீங்களும் மேல மேல குத்தாதீங்க!

(வேம்பு வருகிறான்)

வேம்பு: ஹாய் கோபால் மாமா ... அஞ்சு நிமிஷம் முந்தி என்னோட கிர் கிர் ஒரு செவ்வாய் கிரக ஜோக் சொன்னா பாருங்க..... அதை கேட்டு சிரிச்சு சிரிச்சு என் வயிறே புண்ணாயிடுச்சு... அந்த ஜோக் என்னன்னா.....

கோபால்: (அவசரமாக) வேணாம்பா சாமி.....
மிளகாப் பொடியால ஏற்கெனவே கண்ணு
புண்ணாயிடுச்சு .... வயிறு வேற ஆகணுமா?
வேம்பு: இத பாருங்க கோபால் மாமா... நான்
டூப் அடிக்கிறேன்னு இங்க யாராச்சும்
சொல்லுவாங்க.... அதையெல்லாம் காதில
போட்டுக்காதீங்க!
கோபால்: கண்ணு, காது, மூக்கு எதிலேயும்
போட்டுக்க மாட்டேன்.... போதுமாப்பா!
வேம்பு: கூல் மாமா.... இத மாதிரி சில சிரமங்க
இருக்கத்தான் செய்யும்.... 2020ல செவ்வாய்ல
என் கல்யாணத்துக்கு வந்தப் புறம் என்னை
தலை மேல தூக்கி வச்சு கொண்டாடுவீங்க !

கோபால்: (கிண்டலாக) ஆமாம்பா.... நான் உன் தாய் மாமன் பாரு... கல்யாணத்தில மாலை மாத்த உன்னைத் தலை மேல தூக்கி வச்சிக்கப் போறேன்... மொதல்ல, உன்னைப் பெத்த அப்பனை உன் கல்யாணத்துக்கு கூட்டிப் போகிறதைப் பத்தி யோசி!

வேம்பு: ஒகே கோபால் மாமா.... உங்க சவாலை நான் ஏத்துக்கிறேன்....(உரக்க) ஹல்லோ நாடக ஆசிரியரே.... என்னோட அப்பா கேரக்டரை எப்ப நொழைக்கப் போறீங்க!

ஆசிரியர் குரல்: இதோ .... இப்பவே!
(கோட் அணிந்தபடி நாகராஜன் நுழைகிறார்)

நாகராஜன்: மூர்த்தி அத்தான்.... விசாலம் அண்ணி... சௌக்கியமா இருக்கீங்களா? நான் தான் நாகராஜன்

மூர்த்தி:  யாரு…. மீனாட்சியோட புருஷனா? ஆளே மாறிட்டே!  பெரிய மனுஷன் மாதிரி கோட் சூட்டெல்லாம் போட்டுக்கிட்டு நிக்கிறே?
நாகராஜன்:  நான் இப்ப பெரிய மனுஷன் தான்

அத்தான்….. கட்டடம் கட்டுற பெரிய கம்பெனியோட மேனேஜர்! என்னோட விசிட்டிங் கார்டு இந்தாங்க! (கார்டை நீட்டுகிறார்)

கோபால்:  யாரு… நீங்க வேம்புவோட

அப்பாவா! … ஹி ஹி … நான் மூர்த்தியோட

பிரெண்டு கோபால்….. ஏன் சார் நீங்க குடும்பத்தை விட்டுட்டு ஓடிப் போனீங்க?
நாகராஜன்:  அப்ப வேறு வழி தெரியலே

கோபால் சார்…. இப்ப தான் பெரிய ஆளா திரும்பி வந்திட்டேனே!
வேம்பு: (நாகராஜனிடம்)  ஹாய் டாட்!

நாகராஜன்: (அவனை அணைத்தபடி) சாரிடா வேம்பு.... உன்னை சின்ன வயசிலேயே விட்டுட்டுப் போனாதால உனக்கு இந்த அப்பா மேல கோபமா?

விசாலம்: ஏண்டா நாகராஜா....கோபப் படாம அவன் உன்னைக் கொஞ்சுவான்னு எதிர்பார்க்கறியா

வேம்பு: இட்'ஸ் ஒகே டாட்..... நான் எல்லாத்தையும் சகஜமா எடுத்துக்குவேன்... நீங்க வந்துடுவீங்கன்னு கோபால் மாமா கிட்ட சவால் விட்டேன்... இப்ப பாருங்க.... ஐயாயிரம் ரூபா ஜெயிச்சிட்டேன்!

கோபால்: (பதறியபடி) இரு...இரு... சவால் வவ்வால்னு நீயா அதுக்கு ஐயாயிரம் வெலை வேற வைக்கிறியா.... இந்த விளையாட்டுக்கு நான் வரலே!

நாகராஜன்: இவர் குடுக்கலேன்னா என்னடா கண்ணா... நான் பத்தாயிரமா தரேன்!

விசாலம்: (உரக்க) மீனாட்சி.... இங்க கொஞ்சம் வாயேன்...

மீனாட்சி: (வந்தபடி) என்ன அண்ணி.....உங்களுக்காக இருமல் கஷாயம் ரெடி பண்ணிகிட்டிருந்தேன்...

விசாலம்: எதிர யார் நிக்கிறது பாரு மொதல்ல...

நாகராஜன்: நான் திரும்பி வந்திட்டேன் மீனாட்சி... நல்லா இருக்கியா... மீனாட்சி: (வெறுப்புடன்) ஏன் வந்தீங்க? நீங்க இங்க வரலேன்னு யாரும் இங்க அழலியே

நாகராஜன்: உன் கோபம் நியாயம் தான் 

மீனாட்சி..... உனக்கே தெரியும், என் பிசினஸ் நல்லபடியா நடக்கும்னு நான் கடன் வாங்கினது, வட்டியோட கடன் தலைக்கு மேல போயி, நான் தலைமறைவா இருக்கவேண்டிய சூழ்நிலை... மூர்த்தி அத்தானும் அண்ணியும் உன்னையும் வேம்புவையும் பத்திரமா பாத்துக்குவாங்கன்னு நான் நம்பியது வீண் போகலே.... இப்ப பாரு மீனாட்சி... எனக்கு பெரிய வேலை, கை நிறைய சம்பளம்... இனிமே கடனையெல்லாம் சுளுவா திருப்பிக் குடுத்திடலாம்! இங்க பக்கத்து தெருவிலேயே பெரிய flatடை வாடகைக்கு எடுத்திட்டேன் ... இனிமே நாம நிம்மதியா வாழலாம் மீனாட்சி!

மீனாட்சி: இத பாருய்யா... இனி உன்னை எந்த ஜன்மத்துக்கும் நான் நம்ப மாட்டேன்... உன்னோட காசு பணம் எதுவும் எனக்கு

தேவையில்லே... நம்ம உறவு விட்டுப் போயி ரொம்ப காலம் ஆயிடிச்சு..

நாகராஜன்: (கெஞ்சியபடி) அப்படியெல்லாம் சொல்லாத மீனாட்சி..... நடந்ததை கெட்ட கனவா நெனைச்சு என்னை மன்னிச்சு, என் கூட வந்துடு

வேம்பு: மம்மி..... அப்பா இவ்வளவு சொல்றாரில்ல.....சரீன்னு சொல்லும்மா

மீனாட்சி: அட போடா போக்கத்தவனே....

உங்கப்பன் குணம் எனக்குத் தான் தெரியும்.... இனியும் இந்த மனுஷன் கூட நான் குடித்தனம் நடத்தறதா இல்லே...

நாகராஜன்: இந்த ஒரே ஒரு தரம் எனக்காக விட்டுக் கொடு மீனாட்சி

மீனாட்சி: இந்த விஷயத்தை பத்தி இனிமே நான் பேசறதா இல்லே (விருட்டென்று உள்ளே

போகிறாள்)

கோபால்: நாகராஜன்….. நீ இன்னிக்கு தானே வந்திருக்கே? மீனாட்சி மனசு மாற கொஞ்சம் டைம் குடுப்பா…. நல்லதே நடக்கும்னு நம்புவோம்… என்ன மூர்த்தி?

மூர்த்தி: ஆமா…. நீ கோபாலா இப்ப சரியாதான் சொல்லியிருக்கே….. அப்புறம் கோழியா மாறி எப்படி கிளறுவியோ !

வேம்பு: டாட்…. இந்த வீட்டில யாருமே என்னை சரியா புரிஞ்சுக்கில…. என்னை பிரீயாவே இருக்க விடமாட்டேன்கிறாங்க…. ஸோ …. நான் கூட வரேன் டாடி… வாங்க போகலாம் (இருவரும் போகிறார்கள்)

கோபால்: என்ன விசாலம்மா…. மீனாட்சி புருஷன் திரும்பி வந்திருக்கிறதைப் பத்தி நீங்க

ஒண்ணுமே சொல்லலே?

விசாலம்: சொல்றதுக்கு என்ன இருக்கு.... கிரிக்கெட்டில ரொம்ப மோசமா ஆடிட்டு காணாமப் போன ஆட்டக்காரன் திரும்பி விளையாட வந்தா, பாக்கிறவங்க அவனைச் சட்டையே செய்ய மாட்டாங்க!...... நாகராஜன் இனிமேலாச்சும் பொறுப்பா இருந்து நல்ல பேர் எடுக்கிறானா, இல்லே, பழையபடி சொதப்பரானான்னு பாக்கணும்!

திரை – மறுபடி விலகும்

# இரண்டாவது பகுதி | காட்சி 5

காட்சி 5:

(அதே ஹால்….. பரத், வீணா, மூர்த்தி, விசாலம் ஆகியோர் டீவீ எதிரில் இருக்க, மீனாட்சி உள்ளே நுழைகிறாள்)

பரத்: மீனாட்சி மாமி… நீங்களும் வந்து பாருங்க….

கோபால்: (நுழைந்தபடி) நானும் பார்க்கலாமில்லியா!

மூர்த்தி: அதான் வந்திட்டியே கரடி கோபாலா!

பரத்: இப்ப நான் போட்டிருக்கிற வீசீடி என்ன

தெரியுமா?

விசாலம்: பரத், நீ கிரிக்கெட் ஆசாமி..... அதை தான் போடுவேன்னு எங்களுக்குத் தெரியாதாடா!

பரத்: ஆனா, வழக்கமான, இந்தியன் டீம், ஆஸ்திரேலியா டீம், இங்கிலாந்து டீம்னு இல்லே.....இது வேற.... சினிமா பிரபலங்க ஆடின கிரிக்கெட்!

வீணா: (குதூகலத்துடன்) ஹை ... அப்ப சூர்யா,ஜோதிகா, விஜய்,, அசின், விக்ரம், திரிஷா – இப்படி ஜோடியா ஆடியிருகிறாங்களா பரத்?

கோபால்: ஏம்மா வீணா... கிரிக்கெட் என்ன சினிமாவில டூயெட் ஆடற மாதிரியா! இந்த சினிமாக் காரங்களுக்கு ஒழுங்கா பேட்டையே பிடிக்கத் தெரியாதே!

பரத்:  கோபால் சார்....மொதல்ல டீவீயப் பார்த்திட்டுப் பேசுங்க.... எல்லா சினிமா நட்சத்திரங்களும் ஒரு வாரம் ஷூட்டிங்கைக் கேன்சல் பண்ணிட்டு, என்கிட்டே கிரிக்கெட் ஆடறதுக்கு ட்ரைனிங் எடுத்துக்கிட்டாங்க!

விசாலம் :  ஆமாண்டா பரத்... நீ சிரமப்பட்டு கத்துக்  குடுத்தது வீண் போகலே... இங்க பாரேன்.. விஷாலுக்கு எகிறிக் குதிச்சு என்னமா பந்தை சுழட்டிப் போட  சொல்லித் தரே!  அவன் சொதப்பரப்ப அஞ்சலியும் டாப்சியும் பக்கத்தில நின்னுகிட்டு கலாட்டா பண்ணுதுங்களே ! என்னது? சந்தடி சாக்கில நமீதாவுக்கு பேட்டை இப்பிடிப் பிடி அப்பிடிப் பிடின்னு நீ அவ கையை அழுத்திப் பிடிச்சு சொல்லித் தரே?

பரத்: மாமி.... நான் அப்பிடி சிரத்தையா சொல்லித் தரவே தான் நமீதா இந்த மேட்ச்ல அம்பது ரன் எடுத்தாங்க! இங்க பாருங்க ஒரு ஆக்டர் விடாம, என்னோட படம் எடுத்துக்கிட்டு போஸ் குடுக்கிறதை!

வீணா: அப்போ... இந்த மேட்ச்ல நீதான் ரியல்

ஹீரோன்னு சொல்லு! கோபால்: ஏம்பா பரத்.... இவ்வளவு நெருக்கமா சினிமாக்காரிங்க உடம்போட உரசிக்கிட்டு நின்னிருக்கே! நீ கொஞ்சம் கூட ஜொள்ளு விடலியே!

மீனாட்சி: வாயை அலம்புங்க.... எங்க பரத் குணத்தில ராமனாக்கும்! (வேம்புவும் நாகராஜனும் உள்ளே நுழைகிறார்கள்)

நாகராஜன்: என்ன மூர்த்தி அத்தான்.... பரதன், ராமன்லாம் காதில விழுது! ராமாயண சீரியல் பாக்கிறீங்களா?

மூர்த்தி: ராமாயணமும் இல்ல, பரதனும் இல்லடா நாகராஜா... இந்த பரத்தைப் பத்தி தான் பேசிக்கிட்டிருந்தோம்

நாகராஜன்: (வீணாவைப் பார்த்து) நீ.... நம்ம வீணா தானே... முக ஜாடை மாறவேயில்ல.... ஆனா அதெப்படி இப்படி கிடு கிடுன்னு வளர்ந்திட்டே!

விசாலம்: ஏம்பா நாகராஜா... நீ பத்து வருஷம் முன்னாடி எங்கேயோ போயிட்டே....அதுக்காக வீணா வளராம அப்படியே குழந்தையா இருக்கனும்கிரியா!

மீனாட்சி: (வெறுப்புடன்) இந்த ஓடிப்போன மனுஷனோட பிள்ளையும்தான் இதோ மதமதன்னு வளர்ந்து நிக்கிறான், யாருக்கும் பிரயோஜனமில்லாம!

நாகராஜன்: மீனாட்சி...நான்தான் இப்போ

சுக்கிர தசையோட திரும்பி

வந்திட்டேனே....இனிமே பாரு... நம்ம பையன் வேம்புவை ஓஹோன்னு ஆக்கி காட்டறேன்!

வேம்பு: எஸ் மம்மி..... டாடியோட நேத்து ஆபிசுக்கு கார்ல போனப்ப, அப்பாவுக்கு அவ்வளவு மரியாதை! எனக்கும் சேர்த்து சல்யூட் அடிச்சாங்க! ஆபிசும் சரி,

அப்பாவோட ப்ளாட்டும் சரி... அப்படியே குளு குளுன்னு இருக்கு மம்மி!

மீனாட்சி: (கேலியாக) ஆமா....ரவுடி, தாதாங்க கூடதான் ஏ.சி கார், பங்களான்னு

இருக்காங்க..... உன் அப்பனும் நீயும் அடுத்தவன் காசில அட்டகாசம் பண்றவங்கன்னு எனக்கு நல்லாவே தெரியும்!

(உள்ளே போகிறாள்)

மூர்த்தி: என்னடி இது விசாலம்.... மீனாட்சி மனசு மாறவே மாறாதா?

விசாலம்: (பெருமூச்செறிந்தபடி) ஹூம்... அப்பன் துணையில்லாம, ஒரு ரெண்டுங்கெட்டான் பையனை கட்டிக் காப்பாத்த மீனாட்சி எவ்வளவு கஷ்டப்பட்டான்னு உங்களுக்கே தெரியும்.... அந்த விரக்தி தான் அவளை இப்படி வைராக்கியமா பேச வைக்கிறது...

நாகராஜன்: நான் ஒரு பெரிய தப்பு பண்ணிட்டேன் அண்ணி..... நடுவில அப்பப்ப மீனாட்சியையும் வேம்புவையும் பாக்க வந்திருக்கணும்.... ஆனா இப்ப ஒரு தீர்மானத்தோட தான் இருக்கேன் அத்தான்.... வருஷக் கணக்கில, மீனாட்சிக்கும்

பையனுக்கும் நீங்க ஆதரவு தந்ததுக்கு நன்றிக் கடனா உங்க குடும்பத்துக்காக நான் மாடா உழைக்கப் போறேன்!

மூர்த்தி: இப்படி சொன்னதுக்கு ரொம்ப

சந்தோஷம் நாகராஜா.... ஆனா என்ன.... மாடா உழைக்கறேன்னு பக்கத்தில இருக்கிறவங்களை முட்டிடாதே!
வெளையாட்டுக்குச் சொன்னேன்!

நாகராஜன்: ஆனா நான் இந்த விஷயத்தில சீரியஸ்ஸா இருக்கேன்

அத்தான்.... அதுவும் வீணாவுக்கு உசத்தியான வாழ்க்கையை அமைச்சுக் குடுக்கிறது என்னோட ரொம்ப முக்கியப் பொறுப்பு!

வீணா: அதானே..... அங்க சுத்தி, இங்க சுத்தி எல்லோரும் என்னோட கல்யாணப் பேச்சில வந்து நிப்பீங்களே!

நாகராஜன்: பேச்சோட நான் நிக்க மாட்டேன் 

வீணா! உன்னோட கல்யாணத்தை முடிச்சிட்டுதான் மறு வேலை!

வேம்பு: டாடி.... 2020ல என் கல்யாணம் ஞாபகம் இருக்கட்டும்... நான் சொன்னேனே, என்னோட கிர் கிர் கிரி... செவ்வாய் கிரகப் பொண்ணு! நாகராஜன்: அதுக்கென்னடா கண்ணு.... அந்தக் கிரகசாரத்தை அப்ப பாத்துக்கலாம் ….. ஆமா மூர்த்தி அத்தான்.... இந்த பரத் யாருன்னு நீங்க சொல்லவே இல்லியே?

விசாலம்: இவன் வேலூர் கிருஷ்ணசாமியோட பையன் ... உனக்கு தெரிஞ்சிருக்குனுமே? நாகராஜன்: என்ன அத்தான் இது.. எனக்கு நல்லாவே நெனவில இருக்கு ... முன்னே இதே7

இடத்தில உங்களை கன்னா பின்னான்னு திட்டி, பணத்தை உங்க மூஞ்சியில விட்டெறிஞ்சு, உங்களை அடிக்க கை ஓங்கின, அந்த கிருஷ்ணசாமியோட பிள்ளையா இந்த பரத்!

பரத்: நாகு மாமா.... உங்களுக்கு ஆயிரம் கும்பிடு ... கொஞ்சம் கொஞ்சமா இப்பதான் என் அப்பா செஞ்ச தப்பை மூர்த்தி மாமாவோட குடும்பத்தை மறக்க வச்சு, இப்ப என்னோட சகஜமா பழகிற நிலைமைக்கு பெரும் பிரயர்த்தனம் எடுத்து, கொண்டு வந்திருக்கேன்.... அதனால, மறுபடியும் அந்த சங்கதியை பத்தி பேசறதை விட்டுடுங்க... ப்ளீஸ்!

வீணா... கடைக்குப் போகணும்னு சொன்னியே.... போகலாம் (இருவரும் போகிறார்கள்)

கோபால்: (தனக்குள்) ஆஹா..... கிளறிக் கிளறியே, விஷயத்தை ஊசி குத்தற மாதிரி இந்த கோழி கோபால் கக்க வைப்பான்னா, இந்த நாகராஜன் புஸ்னு படமெடுத்தே பயமுறுத்தரானே... இந்த ஆளை நான் கலாய்ச்சா என்ன! (உரக்க) என்ன நாகராஜன்.... நான் ஒன்னு கேக்கணும்.... உங்களுக்கு, செவ்வாய் கிரகப் பொண்ணு கிர் கிர் கிரிஜா மருமகளா வர்றது சம்மதம்தான?

நாகராஜன்: என்ன இப்படிக் கேட்டுட்டீங்க கோபால் சார்.... அப்பா அப்பான்னு என் பேர்ல கிர் கிர் கிரி உசிரையே வச்சிருக்கா!..... என் கால்ல விழுந்து என்னோட மனப்பூர்வமான ஆசீர்வாதத்தை வாங்கிட்டா! அப்ப எடுத்த போட்டோ என் கிட்ட இருக்கு.... பாக்கிறீங்களா?

கோபால்: பேஷா

பாக்கறேனே .... எங்க காட்டுங்க?
வேம்பு: இதோ, இப்பவே கிர் கிர் கிரியோட போட்டோவை எடுத்துகிட்டு வரேன் கோபால் மாமா..... அதோட, அதை நீங்க பாக்கிறதுக்கு சொட்டு மருந்தும் கொண்டு வரேன்!
கோபால்: (அதிர்ச்சியுடன்) மறுபடியும் மிளகாப் பொடியா....இந்த விளையாட்டுக்கு நான் வரலே!
(அவசரமாக வெளியே போக, மற்றவர்கள் சிரிக்கிறார்கள்)

திரை – மறுபடி விலகும்

# இரண்டாவது பகுதி | காட்சி 6

காட்சி 6:

(அதே ஹால்.... மூர்த்தி, விசாலம், கோபால் ஆகியோர் அமர்ந்திருக்க, நாகராஜன் திவாகருடன் நுழைகிறார்)

நாகராஜன்: மூர்த்தி அத்தான்..... வந்திருக்கிறவர், என்னோட முதலாளியோட ஒரே பையன் திவாகர்.... ஒரே வாரிசு.... ஜமீன் பரம்பரை..... இந்த திவாகர் சார் அமெரிக்காவில பிசினஸ் பண்றார்.... போன

வெள்ளிக்கிழமை தான் என்னோட போன்ல பேசினார்... இப்ப, சென்னையில வந்து நிக்கிறார்! இங்க புதுசா பேக்டரி ஆரம்பிக்கப் போறார்.... அதுக்காக ஆறு மாசம் சென்னையில தங்கப் போறார்

மூர்த்தி: உட்காருங்க சார்.... நீங்க எங்களைப் பாக்க வந்ததுக்கு ரொம்ப சந்தோஷம்... (உரக்க) மீனாட்சி.... காப்பி கொண்டாம்மா

திவாகர்: சாரி.... நான் வெளியில எதையும் சாப்பிடறதில்ல .... எனக்கு வேண்டியதை நானே தயார் செஞ்சிப்பேன்!

கோபால்: ரொம்ப நல்ல பாலிசி தம்பி சார்.....ஹி ..ஹி .... நான் இந்த பேமலி பிரண்டு.... கோபால்!

நாகராஜன்: மூர்த்தி அத்தான்..... நான்

சொல்லாம கொள்ளாம ஆந்திரா போனதிலேந்து எனக்கு அதிர்ஷ்டம் மேல அதிர்ஷ்டம்னுதான் சொல்லணும்! நெல்லூர் கிட்ட இவங்களோட ஜமீன் இருக்கு...தோட்டம் துரவுன்னு எக்கச்சக்கமான சொத்து... இவரோட அப்பா ஜமீன்தார் ஜகன்னாதன் கண்ணில நான் பட்டேன்... என்னைப் பிடிச்சுப் போயி, பெரிய மனசு பண்ணி, அவர் ஜமீன்ல என்னை மேனேஜரா எடுத்துக்கிட்டார்! இருக்கிற சொத்து போதாதுன்னு ரியல் எஸ்டேட் பிசினசையும் பெரிய அளவில ஜமீன்தார் செய்யிறார். அந்த கம்பெனியோட சென்னை பிராஞ்சிலதான் நான் இப்ப மேனேஜர்! சின்ன ஜமீன்தார் திவாகர் சாரும் தன்னோட இருந்து, சொத்து பிசினசையெல்லாம் பாத்துக்கனும்னு பெரியவருக்கு ஆசை.. ஆனா

அமெரிக்காவிலேயே தங்கி கார் தயாரிக்கிற தொழில்ல பெரிய ஆளா வரணும்னு இந்த சின்னவருக்கு ஆசை ... அதான் அங்கியே செட்டில் ஆயிட்டார்

திவாகர்: (பொறுமை இழந்து) ஒகே...ஒகே.... நான் வந்த விஷயத்தை சொல்லிடுங்க!

நாகராஜன்: (சமாளித்தபடி) பாத்தீங்களா... திவாகர் சாருக்கு நேரம் ரொம்ப ரொம்ப முக்கியம்... இவர் தங்கறதுக்காக பைவ் ஸ்டார் ஹோட்டல்ல பெரிய ரூமா புக் பண்ணியிருக்கோம்... ஆனாலும் அது ஆபீஸ் வேலைக்கு மட்டும்தான், வீட்டு சூழல்ல தனியா ஒரு ரூம் வேணுமின்னு அடம் பிடிக்கிறார்! எனக்கு இந்த வீடுதான் ஞாபகம் வந்திச்சு

அத்தான்.... இங்க மாடி ரூம் காலியாதான
கெடக்கு? அதை ஆறு மாசம் வாடகைக்கு
விடுவீங்களான்னு கேக்க இவர் வந்திருக்கிறார்!

மூர்த்தி: அதுக்கென்ன.... பேஷா தர்றேனே

விசாலம்: (நம்பிக்கையில்லாமல்) பெரிய
மனுஷர்! இங்க தங்க நாங்க குடுத்து
வச்சிருக்கணும்... ஆனா, ரொம்ப பழைய
ரூம்.... இவருக்கு பிடிக்குமோ, பிடிக்காதோ?

திவாகர்: பரவாயில்லை... நான் அட்ஜஸ்ட்
பண்ணிக்குவேன்... ஆறே மாசம்தான...
(செக்கை எடுத்து எழுதித் தந்தபடி) இந்தாங்க,
ஒரு லட்சம் ரூபா அட்வான்ஸ்!

மூர்த்தி: ஹி ..ஹி ... அதிகமாவே
குடுத்திருக்கீங்க.. சாருக்கு என்ன மாதிரி
சமையல் பிடிக்கும்னு சொல்லுங்க... எங்க
மீனாட்சி கிட்ட சொல்லி ஏற்பாடு

செஞ்சிடறேன்!

திவாகர்: தேங்க்ஸ்.... ஆனா எனக்கு பிரைவசி ரொம்ப ரொம்ப முக்கியம்.... சமையல் மட்டுமில்ல, என் சம்பந்தப் பட்ட வேலைங்களை நானேதான் பாத்துப்பேன்

நாகராஜன்: இது மட்டுமில்ல அத்தான்... லேடீஸ்னா திவாகர் சாருக்கு ரொம்ப மரியாதை... அளவோட தான் பேசுவார்! சின்ன முதலாளி .... மாடிக்கு வாங்க போகலாம்

(இருவரும் மேலே போக, மீனாட்சி வருகிறாள் )

மீனாட்சி: அத்தான்.... எல்லாத்தையும் கேட்டுகிட்டுத்தான் இருந்தேன்... முன்னே, பின்னே தெரியாதவரை நம்பி மாடி ரூமை வாடகைக்கு விடறது சரீன்னு எனக்குப் படல...

விசாலம்: இப்படி பயப்பட வேண்டிய அவசியமே இல்லம்மா மீனாட்சி.... பெரிய இடத்துப் பிள்ளைன்னு பார்த்தாலே நல்லா தெரியுதே!

மூர்த்தி: இங்க பாரும்மா... டக்குனு லட்ச ரூபாய்க்கு செக் குடுத்துட்டார்.... அதுவுமில்லாம, உங்க வீட்டுக்காரனோட முதலாளி பிள்ளை தானேம்மா!

மீனாட்சி: அதனால தான் எனக்கு சந்தேகமே ... வந்திருக்கிறது சின்ன முதலாளின்கிறார்... தன்னோட ப்ளாட்ல கூட வச்சிக்கிலாமில்லியா?

கோபால்: அட... அதுதாம்மா முதலாளி பந்தா.... தனக்கு கீழ வேலை செய்யிறவங்க கூட தங்க மாட்டானுங்க!

மீனாட்சி: என் மனசில தோணினதை சொல்லிட்டேன் அத்தான்.... என் வீட்டுக்காரர் குணம் எப்படின்னு எனக்கு நல்லாவே அனுபவம் இருக்கே.... நாம ஜாக்கிரதையா இருக்கிறது நல்லது (உள்ளே போகிறாள்)

மூர்த்தி: விசாலம்... எனக்கு என்னமோ மீனாட்சி தேவையே இல்லாம பயப்படறா ன்னு தோணுது!

விசாலம்: ம்.... வயசுப் பொண்ணு வீட்ல இருக்கிறதால மீனாட்சி இப்படிப் பேசறா... அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் .... அவ சொன்னதை இந்த காதில வாங்கி அந்த காதில விட்டுடுங்க...

கோபால்: (தனக்குள் மெதுவாக) பலே...

வீணாவுக்கு ஜோடி பரத்தா, இல்ல

திவாகரான்னு இந்தக் கதை போகுது! அப்பப்ப,

பிரச்சினையை கிளறி விட இந்த கோழி

கோபாலுக்கு வேலை வந்தாச்சு!

(திரை – மறுபடி விலகும்)

# மூன்றாம் பகுதி | காட்சி 7

காட்சி – 7

(அதே ஹால்....விசாலம், வீணா, பரத் ஆகியோர்)

விசாலம்: ஏம்பா பரத்... நேத்து டீவீயில பாத்த கிரிக்கெட் விளையாட்டில, பந்தை பிடிக்காம, கையைக் கட்டிக்கிட்டு ஒதுங்கிப் போனானே ஒரு தொப்பி ஆசாமி.... அவனை எப்பிடி ஆட்டத்தில சேர்த்துக் கிட்டாங்க?

வீணா: ஐயோ அம்மா... அவர் பந்தையே

தொடக்கூடாது! ஏன்னா, அவர் லெக் அம்பயர்!

விசாலம்: இது என்னடி கூத்து! காலுக்குன்னு தனியா அம்பயரா? அப்ப, பந்து வீசறவன் பக்கத்தில நின்னுகிட்டு, கொடுக்கிரதை எல்லாம் இடுப்பில சொருகிக்கிறவன், கைக்கு அம்பையரா?

பரத்: (சிரித்தபடி) மாமி..... பொம்பளைங்க ஆடற கிரிக்கெட் விளையாட்டு அடுத்த மாசம் இங்க நடக்கப் போகுது... நான் உங்களை அழைச்சிக்கிட்டுப் போயி எல்லாத்தையும் விவரமா புரிய வைக்கிறேன்...

(நாகராஜன் உள்ளே வருகிறார்)

நாகராஜன்: ஏம்பா பரத்... நீ பலே ஆளுப்பா! இங்க எல்லாரையும் கிரிக்கெட்டை பாக்க வச்சே மயக்கற!

மீனாட்சி: (வந்தபடி) ரசனை இருக்கிறவங்க

கிரிக்கெட்டை விரும்பிப் பாக்கிறாங்க...

ஒண்ணுமில்லாத ஜடங்களுக்கு அது புரியாது....

நாகராஜன்: அடடே... மீனாட்சி, நீயும் கிரிக்கெட் ரசிகையா! இருக்கட்டும்,

இருக்கட்டும்... ஏம்பா பரத்.... நீ டெஸ்ட் பிளேயரா?

பரத்: அதெல்லாம் இல்லை மாமா.... கிரிக்கெட்

ஆபீஸ்ல வேலை பாக்கிறேன் ... எல்லாத்தையும் பாத்து, பழகி தெரிஞ்சுகிட்டேன்!

நாகராஜன்: (கிண்டலாக) ப்பூ ...

இவ்வளவுதானா... மாடி ரூம்ல இருக்கிற திவாகர் சார் கர்நாடகா ரஞ்சி டீம் ப்ளேயராக்கும்! அவர் ஜெயிச்சு வாங்கின கப் எல்லாத்தையும் என்கிட்டே காண்பிச்சார்....

அவர் கண்டி அமெரிக்காவில செட்டில் ஆகாம இருந்திருந்தா, இங்க சச்சின், சேவாக் ரேஞ்சுக்கு வந்திருப்பார்!

(கேட்டுக்கொண்டே திவாகர் நுழைகிறான்)

திவாகர்: நாகராஜன்... என்ன என்னை ஒரேயடியா தூக்கி வச்சுப் பேசறீங்க!

நாகராஜன்: (பணிவுடன்) வாங்க... வாங்க... நெஜத்தை தான் சொன்னேன்..... மூர்த்தி அத்தான் வெளியே போயிருக்கிறார்.... இவ, அவரோட பொண்ணு வீணா

. திவாகர்: ஒ... (பரத் பக்கம் திரும்பி கை குலுக்கிய படி)... நீங்க?

பரத்: என் பேரு பரத்.... இவங்களுக்கு உறவு....

நாகராஜன்: கிரிக்கெட் ஆபீஸ்ல பரத் வேலை பாக்கிறான்.... பால், பேட், ஸ்டம்ப்

பத்தியெல்லாம் தெரியும்... சின்ன முதலாளி.... இந்த வீ ட்ல எல்லோருக்கும் கிரிக்கெட்னா ரொம்ப பிடிக்கும்.... நீங்க ரஞ்சி ட்ராபியில செஞ்சரி அடிச்ச சீடியை குடுத்தா, இவங்க பாத்து ரொம்ப சந்தோஷப் படுவாங்க!/

திவாகர்: அதுக்கென்ன தரேனே... இப்ப எனக்கு அவசர மீட்டிங் இருக்கு... நான் போகணும் (வேகமாகப் போகிறான்)

கோபால்: (வந்தபடி) என்னம்மா வீணா... மூர்த்தி டீநகர் வரைக்கும் போறேன்னான்.... வந்துட்டானா?

விசாலம்: ஒப்புக்கு விசாரிச்சது போறும் .... நீங்க பேப்பர் படிங்க!

வீணா: கோபால் மாமா….. இன்னையிலேந்து பேப்பர் விலை ஒரு ரூபா ஏறியிருக்கு… உங்க கடன் நோட்டில அப்பா எழுதிட்டார்!

கோபால்: (மேலே பார்த்து விட்டு நாற்காலியைத் தள்ளிப் போட்டுக்கொள்கிறார்)

தலைக்கு மேல பேன் சுத்துதே… கரண்ட்டு காசையும் நோட்டில எழுதிடப் போறான்!…..

ஏம்பா நாகராஜன்… பரத் தம்பி இங்க இருக்கச்சே, இவனோட அப்பா வேலூர் கிருஷ்ணசாமி முன்ன போட்ட சண்டையைப் பத்தி அசட்டுத் தனமா உளறி வைக்காதீங்க!

வீணா: கோபால் மாமா…. உங்களுக்கு அந்த சண்டை விஷயத்தை கிளறிப் பாக்கணும்… அதான? வாங்க மீனாட்சி மாமி, பரத்… உள்ள நாம போகலாம் (மூவரும் போகிறார்கள்)

நாகராஜன்: இத பாருங்க கோபால் சார்.... பரத்தை எளக்காரமா பேசணும்னு எனக்கு எண்ணம் இல்லே... இருந்தாலும் நீங்க தெரிஞ்சுக்க வேணாமா? அந்த வேலூர் கிருஷ்ணசாமி ஏதோ அவசரத்துக்கு மூர்த்தி அத்தான் கிட்ட அம்பதாயிரம் ரூபா கை மாத்தா கேட்டான்... அத்தானும் எங்கெங்கயோ புரட்டி பணத்தைக் கொடுத்தார்... ஒரு வருஷம் கழிச்சப் புறம் மூர்த்தி அத்தானுக்கு பணம் தேவைப் பட்டதால, கிருஷ்ணசாமியை கேட்டிருக்கிறார்... இதில என்ன தப்பு? கிருஷ்ணசாமிக்கு அது அவமானமாப் போயிடிச்சாம்.... நானா திருப்பிக் கொடுக்காதவரை நீ எப்பிடி பணத்தை கேப்பே .... கொடுத்த மாதிரி குடுத்து இப்படி மட்டம் தட்டறியா .... உறவுக்காரன்னு மதிப்பே

இல்லை... அது, இதுன்னு எல்லார் எதிரேயும் அத்தானை அடிக்க வர்ற மாதிரி குதிச்சார்... கெட்ட வார்த்தைங்க சரளமா வந்திச்சு... (தயங்கியபடி) அதையெல்லாம் சொல்லனும்னா....

கோபால்: சொல்ல வேண்டாமே.... எனக்குத் தெரியாத கெட்ட  வார்த்தை இருக்கா என்ன?

விசாலம்:  அப்ப ஒன்னு பண்ணுங்க...  நீங்க நாகராஜனை கெட்ட வார்த்தையால திட்டுங்க..... பதிலுக்கு நாகராஜன் உங்களை திட்டட்டும்..... எதாச்சும் விட்டுப் போனா, நான் சொல்றேன்!

கோபால்: வேணாம் மாமி... எனக்கு இன்னைக்கு நேரம் சரியில்லை.... பேப்பர்ல ராசி பலன் படிக்கணும்! (பேப்பரால் மூடிக்

கொள்கிறார்)

திரை – மறுபடி விலகும்

காட்சி 8:

(அதே இடம்.... மூர்த்தி, விசாலம், மீனாட்சி ஆகியோர் இருக்க, நாகராஜன் உள்ளே நுழைகிறார்)

நாகராஜன்: அத்தான்.... ஸ்வீட் எடுத்துக்குங்க

மூர்த்தி: என்னடா நாகராஜா விசேஷம்?

நாகராஜன்: சொல்றேன்.... அண்ணி, நீங்களும் எடுத்துக்குங்க... மீனாட்சி.... நீயும் எடுத்துக்க!

மீனாட்சி: இனிப்பு சாப்பிடறதை நான் நிறுத்தி பல வருஷம் ஆச்சு..

அதுவும் உங்க கையிலேயிருந்து வந்தா விஷம் மாதிரி!

நாகராஜன்: (சோகமாக) அத்தான்….. மீனாட்சி மனசு மாறி, என்னை ஏத்துக்கிற நாள் ரொம்ப தூரத்தில இல்ல…. நான் எதுக்கு ஸ்வீட் குடுக்கிறேன்னு சொல்றேன்…. நான் நினைச்சதை விட வெகு சீக்கிரமா அதிர்ஷ்டம் இந்த வீட்டுக் கதவை தட்டப் போறது!

மீனாட்சி: (கேலியாக) அப்ப, இந்த மனுஷன் சொல்றது குருட்டு துர் அதிர்ஷ்டம்…. வீட்டு வாசல்ல காலிங் பெல் இருக்கச்சே அது கதவை ஏன் தட்டனுன்கிறேன்!

நாகராஜன்: நல்ல ஜோக் மீனாட்சி…. ஆனா, கரண்டை நம்பி ரிஸ்க் எடுக்கிற அதிர்ஷ்டம்

இது இல்ல.... அத்தான்... இப்படிப்பட்ட உண்மையான அதிர்ஷ்டம் கதவை தட்டினா, நீங்க கதவைத் திறப்பீங்களா , மாட்டீங்களா !

(கோபால் உள்ளே நுழைகிறார்)

கோபால்: கதவைப் பத்தி என்ன பேச்சு?

திறந்திருந்திது... நொழஞ்சிட்டேன்!

விசாலம்: அப்ப, உங்க பூர்வ ஜென்மம் என்னன்னு எங்களுக்கு புரிஞ்சு போச்சு!

மூர்த்தி: பூர்வ ஜென்மம், நாய், பேய் பத்தியெல்லாம் என்ன பேச்சு..... நாகராஜா.... அதிர்ஷ்டம் கதவை தட்டினா, தொறக்காத மக்கு நாங்க இல்ல!

நாகராஜன்: ரொம்ப சரியா சொன்னீங்க அத்தான்..... இப்ப விஷயத்தை சுருக்கமா

சொல்லிடறேன்.... ஆந்திராவிலேந்து என்னோட முதலாளி கிட்டேயிருந்து போன் வழியா எனக்கு ஒரு நல்ல சேதி கிடைச்சிருக்கு! ஏற்கெனவே நான் சொன்ன மாதிரி, அவர் ஜமீன்தார் பரம்பரை... கோடிக்கணக்கில சொத்து இருக்கு... நம்ம பழக்க வழக்கங்கதான்.... அவருக்கு திவாகர் சார் ஒரே பையன்.... ஜமீன்தாருக்கு கொஞ்ச நாளா உடம்பு சரியில்ல....குடும்ப ஜோசியரை ஆலோசனை கேட்டிருக்கிறார்... அதன் பிரகாரம் திவாகருக்கு உடனடியா கல்யாணம் பண்ணத் தீர்மானிச்சிட்டார் ஜமீன்தார் ....

மீனாட்சி: மூர்த்தி அத்தான் ... இதையெல்லாம் இவர் நம்ம கிட்ட ஏன் சொல்றார்? இங்க சம்பந்தம் பேச யாரும் ஜமீன் பரம்பரையோ,

பணக்காரங்களோ இல்லை!

கோபால்: ஒரு வேளை இப்படி இருக்குமோ.... கல்யாண விஷயத்தை ஜமீன்தார் தன் பிள்ளை

திவாகர் கிட்ட சொல்லியிருப்பார்..... அவர் தனக்குப் பிடிச்ச பொண்ணைக்

கட்டிக்கிறேன்னு சொல்லியிருப்பார்.... ஆனா, அதுக்கும், அதிர்ஷ்டம் இந்த வீட்டுக் கதவைத் தட்டுறதுக்கும் என்ன சம்பந்தம்?

நாகராஜன்: சம்பந்தம் இருக்கு கோபால் சார்.... பரத், வீணா மாதிரி, திவாகர் மனசிலேயும்

காதல், கத்திரிக்கான்னு எதுவும் இல்லே....

அவருக்கு எப்பவும் பிசினஸ் ஞாபகம்தான்... இப்ப அப்பாவுக்கு உடம்பு சரியில்லேன்னு தெரிஞ்சதால, அப்பா கை காட்ற பொண்ணுக்கு தாலி கட்ட திவாகர் சார் சம்மதிச்சிருக்கிறார்!

மூர்த்தி: நாகராஜா... ஜமீன்தாரோட ஒரே பிள்ளைன்னு சொல்றே.... எக்கச்சக்கமான பணம் வேற.... பெரிய பெரிய இடத்து வரனெல்லாம் வந்து குவியுமேப்பா!

நாகராஜன்: ஆமாம் அத்தான்... நாலஞ்சு வருஷமாவே ஜாதகங்க குவிஞ்சுகிட்டே வருது... நான் கூட, அட குடுத்து வைப்பமேன்னு, நம்ம வீணாவோட பொறந்த நாள், நேரம்,நட்சத்திரம் தெரிஞ்சிருந்ததால, அவ ஜாதகத்தையும் கணிச்சு குடுத்திருந்தேனே!

விசாலம்: அதனால என்ன லாபம் சொல்லு நாகராஜா.... அவங்க அந்தஸ்துக்கு நம்மது ஏணி வச்சாலும் எட்டாதே?

நாகராஜன்: ஆனா, தெய்வ சங்கல்பம்னு ஒண்ணு இருக்கே அண்ணி..... அந்த ஜமீன் வழக்கப்படி, பரம்பரை ஜோசியர் வந்த

ஜாதகத்தையெல்லாம் கண்ணில வெளக்கெண்ணை விட்டுக் கிட்டு பார்ப்பார்! காரணம், ஜமீன்தார் சொத்து எல்லாமே பிள்ளைக்குப் பொறக்கப் போற பேரனுக்கோ, பேத்திக்கோ தான் போகப் போகுது!

மூர்த்தி: இப்ப புரியுது நாகராஜா.... ஜமீன்தார் தன செலவில ஒரு பொண்ணுக்கு கல்யாணத்தை நடத்தி வைச்சா, அவர் பையனுக்கு பொருத்தமான வரன் அமையும்னு பரிகாரம் சொல்லியிருப்பார்... சரிதானே?

மீனாட்சி: அப்படியிருந்தா, வீணாவுக்கும் பரத்துக்கும் உடனடியா கல்யாணத்தை முடிச்சிடலாம் மூர்த்தி அத்தான்!

நாகராஜன்: (அவசரமாக) அப்படியெல்லாம்

ஒரு பரிகாரமும் இல்ல...அத்தான்.... நான் சட்டுபுட்டுன்னு நறுக்னு சொல்றேன்.....ஜமீன் ஜோசியர் எல்லா ஜாதகத்தையும் சல்லடை போட்டு சலிச்சு, ரெண்டே ரெண்டு ஜாதகம் தான் திவாகர் ஜாதகத்துக்கு எல்லா விதத்திலும் போருந்தறதுனு சொல்லிட்டார்... அந்த ரெண்டு அதிர்ஷ்ட ஜாதகத்தில ஒன்னு நம்ம வீணாவுது!

விசாலம்: ரொம்ப நல்ல சேதிதான் சொல்லியிருக்கே நாகராஜா....கேக்கிறதுக்கே ரொம்ப சந்தோஷமா இருக்குப்பா.... ஏங்க ... நீங்க என்ன சொல்றீங்க?

மூர்த்தி: ஜமீன் சம்பந்தம்... நம்ப பக்கத்து மனுஷங்க....சந்தேகமே இல்லாம, இது உசத்தியான சம்பந்தம் தான்.....ஆனா...

நாகராஜன்: (அவசரமாக குறுக்கிட்டு)

அத்தான்.... நீங்க இப்படி தயங்குவீங்கன்னு தெரிஞ்சுதான், ஜமீன்தாரே நேர இங்க வந்து 'இந்த சம்பந்தம் எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு... எல்லா கல்யாண செலவையும் நானே ஏத்துகிறேன்'னு அவர் வாயாலேயே உங்க கிட்ட சொல்லப் போறார்!

கோபால்: அப்புறம் என்னடா மூர்த்தி... உடனே ஜமீன்தாருக்கு போன் போட்டு உனக்கும் சம்மதம்னு சொல்லிடு!

மூர்த்தி: இத பாருப்பா கோபால்... அபரிமிதமான சந்தோஷத்தில நான் தலையும் புரியாம காலும் புரியாம இப்ப இருக்கேன்.... வீணா கல்யாணத்தைப் பத்தி நாங்க கொஞ்சம் கூட யோசிக்கலியே?

மீனாட்சி: மூர்த்தி அத்தான்.... வீணாவும் கல்யாணம் இப்ப வேணாம்னு

சொல்லியிருக்கா... அதை மனசில வச்சிக்குங்க

நாகராஜன்: நீ சொல்லறது சரி மீனாட்சி... ஆனா, அவளுக்கு கல்யாண அதிர்ஷ்டம் இப்ப சொல்லாம கொள்ளாம வந்திடுச்சே!

அதனால, வீணா நாம எடுத்து சொன்னா

கட்டாயம் சம்மதிப்பா... மொதல்ல நிச்சயத்தை

முடிப்போம்... மத்ததுக்கு டைம் எடுத்துக்குவோம்

மீனாட்சி: இவரு பேச்சை விடுங்க அத்தான் கல்யாணம் ஒரு ஆயிரம் காலத்துப் பயிர்னு

பெரியவங்க சொல்றாங்க... அதில அவசரம்

கூடாது... வீணாவுக்கு நல்ல வாழ்க்கை அமைஞ்சா அதைப் பாத்து சந்தோஷப் படற மொதல் ஆளு இந்த மீனாட்சிதான்

விசாலம்: இதை நீ சொல்லனுமா மீனாட்சி....

நாங்க இந்த வீட்டில வெறும் பொம்மைங்க.... வீணாவை சின்ன குழந்தையிலேந்து வளர்த்து ஆளாக்கினது நீ தானே !

மூர்த்தி: சரியா சொன்ன விசாலம்..... ஏம்மா மீனாட்சி.... இப்ப நாம மேல என்ன செய்யிறதுன்னு நீயே சொல்லேன்!

மீனாட்சி: அத்தான்..... ஜாதகப் பொருத்தம் பிள்ளை வீட்டில மட்டும் பாத்தா போதாது ....

பொண்ணு வீட்டார் நாமும் பாக்கணும்...

அதைப் பார்த்தப்புறம் மேல யோசிக்கலாம்...

மூர்த்தி: நாகராஜா.... மீனாட்சி சொல்றதும் சரின்னு எனக்குப் படறது

நாகாராஜன்: ஒகே அத்தான் ... ஜாதகத்தை உடனே வரவழைக்கிறேன்! (கேட்டுக்

கொண்டே வேம்பு வருகிறான்)

வேம்பு: (சந்தோஷத்துடன்) டாட்.... உங்க கையில ஸ்வீட்டு .... வாயில ஜாதகத்தைப் பத்தி பேச்சு .... என் கல்யாணத்தைப் உனக்கு எவ்வளவு அக்கறை! டாட்.... ஜாதகம்னு சொன்னே இல்ல? என்னோட கிர் கிர் கிரி ஜாதகத்தை வரவழைச்சு தரேன்.... ஆனா ஒன்னு... அவ செவ்வாய் கிரகத்துப் பொண்ணு, செவ்வாய் தோஷம் இருக்குன்னு கலாட்டா பண்ணக் கூடாது!

நாகராஜன்: அப்படி நான் பண்ண மாட்டேண்டா கண்ணு..... அவளுக்கு செவ்வாய் தோஷம் ஒன்னு தானே.... உனக்கு பூமியில இருக்க அத்தனை தோஷமும் இருக்கேடா!

(வேம்பு அவரை முறைக்கிறான்)

விசாலம்: ஏண்டா வேம்பு... உன்னோட கல்யாணத்துக்கு எங்களையெல்லாம் ஆகாயக் கப்பல்ல செவ்வாய்க்கு அழைச்சிகிட்டுப் போறதா சொல்றே.... நல்ல மாதிரி கப்பல்ல அழைச்சிகிட்டு போகப்படாதா? ஏன் நாசக்காரக் கப்பலை ஏற்பாடு பண்ணே?

வேம்பு: ஐயோ பாட்டி... நாசமும் இல்ல மோசமும் இல்ல... அது நாசா விஞ்சானிங்க கப்பல்! கோபால் சார்... கப்பல்ல இந்த செவ்வாய் மாப்பிள்ள போறதால, brakefast என்ன தெரியுமா? இட்லி, தோசை...தொட்டுக்க என்ன தெரியுமா? கிண்ணத்தில.....

கோபால்: (பதறியபடி) தொட்டுக்க வேணாம்... வேணவே வேணாம்.... நான் அப்படியே சாப்பிடுவேன்!

திரை – மறுபடி விலகும்

## மூன்றாம் பகுதி | காட்சி 9

காட்சி 9:

(அதே இடம்.... கோபால் பேப்பர் படிக்க, மீனாட்சி ஹாலைப் பெருக்குகிறாள்)

கோபால்: (தனக்குள்) மூர்த்தி குளிக்கப் போயிட்டான்...விசாலம் பொழக் கடையில வேலைகாரியோட வம்பு பேசிகிட்டிருக்கா..... இதான் சரியான டைம்... மீனாட்சிக்கும் நாகராஜனுக்கும் ஏன் ஒத்துப் போகலேன்னு தெரிஞ்சுக்கணும்! (உரக்க)

மீனாட்சியம்மா....எனக்கு ஒரு விஷயம் புரியலை...

மீனாட்சி: (குறுக்கிட்டு) நீங்க blogg படிக்கிறவங்களுக்கு சொன்னது என் காதிலேயும் விழுந்தது.... எனக்கும் என் புருஷனுக்கும் ஏன் ஒத்துப் போகலைன்னு உங்களுக்கு தெரியணும் ... இதானே?

கோபால்: ஹி , ஹி ...ஆமாம் மீனாட்சியம்மா.... நாகராஜனைப் பாத்தா குடிகாரன், கஞ்சா அடிக்கிறவன், பொம்பளை பொறுக்கி ... இப்படி எதுவும் இல்லியே?

மீனாட்சி: அதையெல்லாம் விட மோசம்.... குடும்ப பாசம், பந்தம் எதுவுமில்லாத ஆசாமி என் புருஷன்..... பணம், பணம்னு அலைஞ்சு, குறுக்கு வழியில சேர்த்த அதை, கோணல்

வழியிலேயே கோட்டை விட்ட கோமாளி.... என் சொத்து மொத்தம் அந்த மனுஷனால தான் அழிஞ்சிது.... இப்ப, அந்த ஆளு வந்திருக்கிறதும் தன் குடும்பத்துக்காக இல்ல, ஏதோ சுய நலத்தோடதான்!

கோபால்: மீனாட்சியம்மா... உன் புருஷன் தன்னோட பழைய அனுபவங்களை ஒரு பாடமா எடுத்துகிட்டு திருந்தியிருக்க சான்ஸ் இருக்கே... அதில்லாம, இப்ப பெரிய கம்பெனியில நல்ல ஹோதாவில இருக்காரு... அவரோட பிளாட்டுக்கு நான் கூட போயிருந்தேன்.... அமர்க்களமா இருக்காரு.... கூட உன் பையன் வேம்புவும் சேர்ந்துட்டான்... இன்னும் என்னம்மா வேணும்?

மீனாட்சி: அப்பனும் பிள்ளையும் ஒரே குட்டையில ஊறின மட்டைங்க! அவங்க டம்பம்

ரொம்ப நாள் நிக்காது... கோபால்: சரி...

இருந்திட்டுப் போகட்டும்.... ஆனா, வீணாவுக்கு வந்திருக்கிற ஜமீன் வரன் ரொம்ப உசத்தியாச்சேம்மா! ஏன் நீ அதை தட்டிக் கழிக்கப் பாக்கிறே?

மீனாட்சி: ஏன்னா, வீணா நான் பாத்து பாத்து வளர்த்த குழந்தை.... முழுசா விசாரிக்காம, மொதல்லயே தலையை ஆட்டிட மாட்டேன்!

(வீணா உள்ளே நுழைகிறாள்)

வீணா: மாமி.... நான் காலேஜுக்கு போயிட்டு வரேன்....

கோபால்: வீணா .... நாங்க உன் கல்யாணத்தைப் பத்திதான் பேசிக்கிட்டிருக்கிறோம்...

வீணா: ராத்திரி என் அப்பா, அம்மா கூட சொன்னாங்க.... மாடியில குடியிருக்கிற திவாகர்

ஜமீன் பரம்பரையாம் .... அவரோட அப்பா கல்யாணம் பேச வர்றாராம்.... மீனாட்சி மாமி... நான்தான் கல்யாணத்தைப் பத்தி யோசிக்கவே இல்லியே?

கோபால்: இத பாரும்மா வீணா.... என்னைக்காவது ஒரு நாள் நீ இன்னொருத்தனோட குடித்தனம் பண்ணித்தான் ஆகணும்! அதுக்கு நேரம் வந்தா தள்ளிப் போடக் கூடாதம்மா!

வீணா: அப்பாவும் இப்படியேதான் சொல்றார்.... ரெண்டில ஒன்னு சொல்லும்மான்னு கேக்கிறார்

மீனாட்சி: பார்த்தியா.... இப்படி நெருக்கடியெல்லாம் வருது .... பரத் நமக்கு

ரொம்ப  நல்லா தெரிஞ்ச பையன்...

உறவுக்காரப் பையன்../.. நல்லவன்னா அப்படி

நல்லவன்... அவன்தான் உனக்கு சரியான

ஜோடின்னு எத்தனையோ தரம்

சொல்லியிருக்கேன்.... நீ தான்  தலையை

ஆட்டல

வீணா: ஆனா மாமி... பரத் தனக்கு நல்ல

வேலை கெடைக்கிற வரைக்கும்

கல்யாணத்தைப் பத்தி யோசிக்க மாட்டேன்னு

சொல்லிட்டானே?

மீனாட்சி: ம்.. இப்படி ரெண்டு பெரும் குழம்பி

கிட்டே இருங்க... இதனால என்ன ஆச்சு....

காத்திருந்தவன் பொண்டாட்டியை நேத்து

வந்தவன் கொத்திக்கிட்டுப் போகப் பாக்கிறான்!

நான் விட மாட்டேனே!

வீணா:. மாமி நான் சின்ன பொண்ணு...

எனக்கு எது நல்லதுன்னு நீயே அப்பா கிட்ட பேசி முடிவு பண்ணு... ப்ளீஸ்.... நான் கௌம்பறேன் (போகிறாள்)

கோபால்: மீனாட்சியம்மா ... பரத்துக்கு வீணாவை கட்டிக் குடுக்க நீங்க ஆசைப் பட்டது நியாயம்தான்.... ஆனா, உசத்தியான சம்பந்தத்தை விட்டுட்டு சாதாரண இடத்தில பொண்ணை தள்ளி விட்டிட்டாங்களேன்னு நாலு பேர் மூர்த்தியை குத்தி காம்பிக்க மாட்டாங்களா?

மீனாட்சி: நீங்க கோழி கோபால்னு பேர் வச்சிக்கிட்டு என்ன பிரயோஜனம்? வந்திருக்கிறது நெஜமாவே ஒசத்தியான வரன்தானான்னு நல்லா கௌரிப் பாத்திட்டு அப்புறம் சொல்லுங்க!

(கோபால் தலையச் சொறிந்து கொள்கிறார்)

# நான்காம் பகுதி | காட்சி 10

காட்சி 10:

(அதே ஹால்.... விசாலமும், கோபாலும் இருக்க, மூர்த்தியும் நாகராஜனும் நுழைகின்றனர்)

மூர்த்தி: அப்பாடா..... என்ன வெய்யில் (உரக்க) மீனாட்சி, கொஞ்சம் குடிக்க தண்ணி குடும்மா

விசாலம்: ஏங்க ... போன காரியம் என்ன ஆச்சு.... அதை சொல்லுங்க...

மூர்த்தி: நல்ல சேதிதான்..... ஜமீன்தார்

பிள்ளை திவாகரோட ஜாதகமும் வீணா ஜாதகமும் அருமையா பொருந்தறதுன்னு நம்ம ஜோசியரும் சொல்லிட்டார் (மீனாட்சி தண்ணீர் டம்பளருடன் நுழைகிறாள்)

விசாலம்: மீனாட்சி.... இப்ப உனக்கு திருப்தி தானேம்மா? (மீனாட்சி ஒன்றும் பேசாமல் திரும்பிப் போகிறாள்)

நாகராஜன்: நம்ம பக்கத்திலேயும் ஜாதகப் பொருத்தம் பார்த்தாச்சுன்னு ஜமீன்தார் கிட்ட நான் போன்ல சொல்லிட்டேன்.... அவருக்கு அப்படி ஒரு சந்தோஷம்.... ஒரு வேலையா பெங்களூர் ஏர்போர்ட்ல இறங்கினவர், உடனடியா சென்னைக்கு ப்ளைட் பிடிச்சிட்டார்....

கோபால்: ஓஹோ.... மேற்கொண்டு சம்பந்தம் பேசலாம்னு முடிவு செஞ்சிருப்பார் !

நாகராஜன்: ரொம்ப சரியா சொன்னீங்க.... ஜமீன்தாருக்கு எந்தக் காரியத்தையும் உடனடியா முடிச்சாகணும்.... இப்ப ஏர்போர்ட்டிலேந்து இங்க கார்ல வந்துகிட்டிருப்பார்.... (கார் ஹார்ன் ஒலி கேட்கிறது) அவருக்கு நூறு ஆயுசு.... வந்து எறங்கிட்டார்! (உரக்க) முதலாளி..... வாங்க (நாகராஜன் வெளியே போக, சாதாரண ஜிப்பா அணிந்த ஒருவர் உள்ளே நுழைந்து நாற்காலியில் அமர்கிறார்... கோபாலும் மூர்த்தியும் அவரை உதாசீனம் செய்து, பய பக்தியுடன் கை கட்டிக் கொண்டு வாயிற் பக்கம் பார்க்கின்றனர்)

கோபால்: ஏன்டா மூர்த்தி.... ஜமீன்தார்னா

கிரீடம், கிரீடத்து மேல மயில் இறகு வச்சிருப்பார்.... வாசப் படி இடிக்குமேடா?

மூர்த்தி: அதையெல்லாம் ஜமீன் சிப்பந்திங்க பாத்துப்பாங்க... ஒருத்தர் கிரீடத்தை வாங்கி வச்சிப்பார்.... இன்னொருத்தர் ஜமீன்தார் பின்பக்கம் பொரளூர அங்கியை தாங்கிப் பிடிச்சுப்பார்.... ஒருத்தர், முன்னாடி சிவப்பு கம்பளத்தை விரிச்சுப் போடுவார்!

வந்தவர்: உங்களில, மூர்த்தி யாரு?

மூர்த்தி: நான் தான்... ஆந்திராவிலேந்து ஜமீன்தார் வரப் போறார்.... நீங்க? ஓ .... ஜமீன்தார் பராக் பராக்னு சொல்லப் போறீங்களா!

வந்தவர்: பராக்னு சொல்ல மாட்டேன்.... பான் பராக் போடுவேன்....

நீங்க சொன்ன ஜமீன்தார் ஜகந்நாதன் நான் 

தான்!

(நாகராஜன் பழத் தட்டுடன் உள்ளே அவசரமாக வருகிறார்) நாகராஜன்: மூர்த்தி அத்தான்... இவர் தான் என்னோட முதலாளி ஜமீன்தார் ஜகந்நாதன்... கார்லேந்து பழம், பூவை எடுத்திகிட்டு வரச் சொன்னார் !

மூர்த்தி: மன்னிக்கணும்.... ஜமீன்தார் இந்த ஜிப்பாவில வருவீங்கன்னு எதிர்பார்க்கலே!

ஜகன்னாதன்: (பழத் தட்டை குடுத்தபடி) இந்தாங்க.... என்னோட ஜமீன் கெட்டப்பெல்லாம் என்னோட ஆந்திரா பங்களாவில்தான்.... மத்தபடி வெளியில இப்படி சிம்பிளா தான் வருவேன்!

மீனாட்சி: அதுவும் நல்லதுதான்....

வித்தியாசமா வந்தா ஏதோ ஷூட்டிங் நடக்குதுன்னு கும்பல் சேரும்!..

. விசாலம்: ஏங்க ... வந்திருக்கிற பெரியவரை என்ன சாப்பிடறீங்கன்னு கேளுங்க!

ஜகந்நாதன் கேக்கவே வேணாம்... மாத்திரை சாப்பிடப் போறேன்.... தண்ணி குடுங்க!

(மீனாட்சி தண்ணீர் தர...)

ஜகந்நாதன் : இதை நான் விளையாட்டுக்கு சொல்லல.. மாத்திரையாலதான் நான் பொழச்சிகிட்டிருக்கேன் ... சீக்கிரமா என்னோட பையன் திவாகருக்கு கால் கட்டு போட்டு, என்னோட கோடிக் கணக்கான சொத்துக்கு ஜமீன் வழக்கப்படி என் பேரப் பிள்ளை வாரிசாகணும் ... இதான் என்னோட ஒரே ஆசை... (ஜிப்பாவிலிருந்து எடுத்து) இந்த பென் டிரைவ் ல என்னோட ஜமீன் பரம்பரையோட

எல்லா விவரமும் இருக்கு.... எனக்கு உங்க சம்பந்தம் ரொம்ப பிடிச்சிருக்கு...அந்தஸ்து ஒரு பிரச்சினையே இல்லே....நீங்களும் எல்லா விவரத்தையும் நிதானமா பார்த்திட்டு ஒரு நல்ல முடிவுக்கு வாங்க.... கல்யாணத்தை பத்தி பேசினாலே பிடி குடுக்காம இருந்த என் பையன் திவாகர், நான் இப்ப இருக்கிற நிலைமையைப் பாத்து, கல்யாணத்துக்கு ஒரு வழியா சம்மதிச்சிருக்கான்... அவன் மனைவியை தீர்மானிக்கிற பொறுப்பை என்கிட்டே விட்டுட்டான்... திவாகர் உங்க வீட்டு மாடியிலதான இருக்கான்? எந்த சந்தேகம் வேணும்னாலும் கேளுங்க... அவன் பதில் சொல்லுவான்... இன்னொன்னும் சொல்லிடறேன்... கல்யாணம் சம்பந்தப் பட்ட

அத்தினி செலவும் ஜமீன் ஏத்துக்கும்….. நீங்க சீக்கிரம் நல்ல முடிவா எடுத்து உங்க பொண்ணை எங்க ஜமீன் மருமகளா அனுப்புங்க… நான் போயிட்டு வரேன்!

(ஜகந்நாதன் போகிறார்…. கூடவே நாகராஜனும்)

கோபால்: பார்த்தியா மூர்த்தி… பெரிய மனுஷன்னா இவர் பெரிய மனுஷன்… இரத்தின சுருக்கமா, வெட்டு ஒன்னு துண்டு ரெண்டா சொல்லிட்டுப் போறார் பாரு!

மீனாட்சி: அவர் பெரிய மனுஷராகவே இருந்திட்டுப் போகட்டும்….ஏன் உச்சாணிக் கிளையிலேருந்து இறங்கி வந்து இங்க பொண்ணு கேக்கணும்?

விசாலம்: மீனாட்சி.... இப்படி தொட்டதுக்கெல்லாம் சந்தேகப் பட்டா எப்படிம்மா?

மூர்த்தி: அதானே? மீனாட்சி... நீ உன்னை மாத்திக்கணும்... இப்ப, நாகராஜன் கூட ஆளே மாறி நல்லபடியா இருக்கான்..... அவனோட சேர்ந்து குடும்பம் நடத்தி சந்தோஷமா இருக்கிற வழியை பாரும்மா....

மீனாட்சி: (கண் கலங்கிய படி) இத பாருங்க மூர்த்தி அத்தான்.... நான் என் புருஷனை நம்பறதா இல்ல.... இந்த வீட்டில நான் இருக்கிறது உங்களுக்கு சங்கடமா இருக்குன்னா, சொல்லுங்க... நான் எங்கேயாவது போயிடறேன்...

மூர்த்தி: (ஆதுரத்துடன்) அடடே... நான் அந்த

அர்த்தத்தில பேசல மீனாட்சி..... நீ நல்லபடியா இருக்கனுங்கிரதுதான் எங்க ஆசை... நீ ஏன் வெளியில போகணும்... இது உன் வீடும்மா!

விசாலம்: மீனாட்சி... இந்த ஜமீன் வரனை என்ன பண்ணலாம்னு சொல்லு.... ஜாதகப் பொருத்தம் சரியா இருக்குன்னு தெரிஞ்சு போச்சு....

மீனாட்சி: ஜமீன்தார் குடும்பத்தை பத்திய தகவலை டீவீயில போட்டுப் பாத்து தெரிஞ்சிகிட்டா பத்தாது.... அவங்க ஊருக்கே போயி, அக்கம் பக்கத்தில தீர விசாரிக்கணும்.... மாடியில இருக்கிற ஜமீன்தார் பிள்ளை திவாகர் அமெரிக்காவில எப்படி இருக்கிறார்னு விசாரிக்கணும்...

நாகராஜன்: (வந்தபடி) மீனாட்சி….. நான்தான் ஜமீன் மாளிகையில பத்து வருஷம் இருந்திருக்கேனே? விசாரிக்க என்ன இருக்கு?

மீனாட்சி: வேலிக்கு ஓணான் சாட்சியா? எல்லாம் நாங்க விசாரிச்சிக்கிறோம் (உள்ளே போகிறாள்)

கோபால்: பலே... நாகராஜன் நல்லவனா, கெட்டவனாங்கிர சஸ்பென்ஸ்ஸோட டிராமா

போறது…. ஒகே... நான் வெட்டியாதான இருக்கேன்? ஆந்திரா பக்கம் போய் ஜமீன் விஷயத்தை ஒரு கிளறு கிளறிட்டு வந்தா என்ன!

/திரை – மறுபடி விலகும்/

# நான்காம் பகுதி | காட்சி 11

காட்சி 11:

(அதே ஹால்..... வீணா படித்துக் கொண்டிருக்க, பரத் நுழைகிறான்)

பரத்: வீணா.... ஒரு குட் நியூஸ்.... ஐ.டி கம்பெனிக்கு நேத்தைக்கு இண்டர்வியூ

போயிட்டு வந்தேன்.... அனேகமா சலெக்ட்

ஆகிடுவேன்..... ஆரம்பத்தில முப்பதாயிரம் ரூபா தர்றதா சொல்லியிருக்காங்க!

வீணா: (உற்சாகத்துடன்) கங்க்ராட்ஸ் பரத்...

ஸ்வீட் எங்க?

பரத்: வேலைக்கு ஆர்டர் வந்ததும் மொதல் ஸ்வீட் உனக்குதான் வீணா... இதை பாரு (பேப்பரை நீட்டுகிறான்)

வீணா: ஹை .... பெரிய கம்பெனி.... நல்ல சம்பளம் தருவாங்க.... பரத்.... நீ கட்டாயம் ஜாயின் பண்ணிடு.... இருந்தாலும் எனக்கு ஒரு சின்ன வருத்தம் பரத்.... இப்ப நீ செஞ்சிகிட்டிருக்கிற கிரிக்கெட் வேலையை, சம்பளம் கம்மியா இருந்தாலும், நீ எவ்வளவு நேசிக்கிறேன்னு எனக்கு தெரியும்...

பரத்: என்ன செய்யிறது வீணா.... ஒன்னு பாத்தா இன்னொன்னு இருக்காது.... இருந்தாலும், நான் ஒரு கிரிக்கெட் ரசிகன், அனுபவசாலின்னு இண்டர்வியூவில

சொன்னேன் வீணா... எங்க கம்பெனி
கிரிக்கெட் டீம்ல நீங்க சேருங்கன்னு
சொல்லிட்டாங்க!
(மீனாட்சி வருகிறாள்)

பரத்: மாமி... நல்ல சேதி.... எனக்கு ஒரு நல்ல
வேலை கெடைக்கப் போகுது!
மீனாட்சி: (சந்தோஷத்துடன்) அப்படியாடா
பரத் ... நீ ஒசத்தியா வருவேன்னு எனக்கு
தெரியும்.... இனிமே நீ எந்த சாக்கு போக்கும்
சொல்லி தப்பிக்க முடியாது பரத்... நீயும்
வீணாவும் பக்கத்து பக்கத்தில நிக்கிறதை
பாத்தாலே என் கண்ணுக்கு குளிர்ச்சியா
இருக்குடா .... நீங்க ரெண்டு பேரையும்
மாலையும் கழுத்துமா பார்த்தா எனக்கு
இன்னும் திருப்தியா இருக்கும்!
பரத்: (தயங்கியபடி) மாமி... புது வேலை வரப்

போறது எப்போன்னு நிச்சயமா தெரியணும் ... அதுக்கப்புறம், வர்ற பணத்தில கொஞ்சம் சேர்த்து நான் ஸ்டெடியாகனும் ... அதுக்கு கொஞ்ச காலம் ஆகுமே மாமி?

மீனாட்சி: புரியாம பேசாத பரத்.... அய்யர் வர்ற வரை அமாவாசை காத்திருக்காது... இப்பெல்லாம், முன்னாலேயே அட்வான்ஸ் புக்கிங் பண்ணாம, கடைசி நிமிஷத்தில எதுவும் கெடைக்காது! வெளியூர் போகணும்னா கூட ஆறு மாசம் ஒரு வருஷம் முந்தியே ரிசர்வ் பண்றதில்லியா? அத மாதிரி, உங்க கல்யாணத்தை நிச்சயம் பண்ணிடலாம்டா... நடுவில, நீ வேலையில நல்ல ஹோதாவில வந்திடலாம்... வீணாவும் மேல் படிப்பை

முடிச்சிடலாம்... இதில யோசிக்கிறது நல்லதில்லே ... இந்த ஜமீன் சம்பந்தம் குறுக்க வருதில்ல?

பரத்: மாமி... நான் வீணாவை கல்யாணம் பண்ணிகிட்டாலும், இல்லேன்னாலும் உறவுக்காரன்தானே? வீணா ஜமீன் குடும்பத்தில மருமகளா போறது நமக்கெல்லாம் பெருமையான விஷயம்தான்!

மீனாட்சி: (எரிச்சலுடன்) அட போடா பைத்தியக்காரா... உங்க ரெண்டு பேருக்கும் நடுவில இருக்கிற அந்நியோன்யம் தான் குடும்ப வாழ்க்கைக்கு ஒசத்தி ... ஜமீன் சம்பந்தம்கிறது ஒய்யாரக் கொண்ட மாதிரி.... அதுக்குள்ள, ஈரும் பேனும் இருக்கிறது நல்லா சோதிச்சு பாத்தா தெரியும்!

வீணா: மாமி.... எனக்கு குழப்பமாகவும்

இருக்கு, பயமாவும் இருக்கு!

மீனாட்சி: அப்ப நான் சொல்றபடி கேளுங்க.... 'நாங்க ரெண்டு பெரும் காதலிக்க

ஆரம்பிச்சிட்டோம்... வாழ்க்கையிலும் ஒன்னா சேர்ரதுன்னு தீர்மானிச்சிட்டோம்'னு எல்லார் எதிரேயும் சொல்லிடுங்க! மத்ததை நான் பாத்துக்கிறேன்!

வீணா: (பதறியபடி) ஐயோ மாமி,,,, சாதரணமாவே அப்பா எதிர பேச

யோசிப்பேன்.... லவ், கல்யாணம்னு பேச

நெனைச்சா, நாக்கு ஸ்ட்ரைக் பண்ணிடும்.... நான் அழுதுடுவேன்!

பரத்: என்னோட கதையும் அப்படித் தான்

மாமி..... ஏற்கெனவே என் அப்பாவுக்கும்

வீணாவோட அப்பாவுக்கும் வருஷக் கணக்கா பேச்சு வார்த்தை இல்ல.. இப்ப, நான் எடக்கு மடக்கா லவ், அது, இதுன்னு சொல்ல ஆரம்பிச்சா என்ன நடக்குமோ? இந்த வீட்டுக்குள்ள நான் சகஜமா வந்து போக முடியுமோ முடியாதோ?

மீனாட்சி: என்ன பசங்களோ நீங்க.... நான் ஒன்னு கேக்கறேன் பரத்.... மூர்த்தி அத்தானும், விசாலம் அண்ணியும் ஜமீன் சம்பந்தத்தை பெரிசா நெனைக்கிரா...ஆனா ஜமீன் விஷயத்தில ஏதோ வில்லங்கம் இருக்குன்னு நான் சந்தேகப் படறேன்... அப்படியிருந்தா, வீணாவோட வாழ்க்கை கட்டாயம் பாழாப் போயிடுமா இல்லியா?

பரத்: அய்யய்யோ ... அப்படி நடக்க விடக்கூடாது மாமி.... நான் ஏதாவது செய்ய

முடியுமா மாமி?

மீனாட்சி: திருவள்ளுவர் என்ன சொல்லியிருக்கார்? யார் எது சொன்னாலும் அது சரியான்னு சோதிச்சு பாத்து

தெரிஞ்சுக்கணும்.... முக்கியமா, அந்த திவாகர் அமெரிக்காவில எப்படி இருக்கான், எப்படிப்பட்டவன்னு நல்லா விசாரிக்கணும்!

பரத்: சரி மாமி... என்னோட படிச்சவங்க சில

பேர் இப்போ அமெரிக்காவில இருக்காங்க... அவங்க மூலமா ஏதாச்சும் தகவல் கிடைக்கிறதான்னு பாக்கிறேன்

/திரை – மறுபடி விலகும்/

# நான்காம் பகுதி | காட்சி 12

காட்சி 12:

(அதே இடம்.... மூர்த்தி, விசாலம் இருக்க, நாகராஜன் கையில் செக்குடன் வருகிறார்)

நாகராஜன்: மூர்த்தி அத்தான்.... இந்தாங்க, பிடிங்க செக்கை.... ஜமீன்தார் அனுப்பிச்சிருக்கார்!

மூர்த்தி: (வாங்கிப் பார்த்துவிட்டு) என்னப்பா இது நாகராஜா... மூணு லட்சத்துக்கு செக்! அதுவும் என் பேர்ல?

நாகராஜன்: இங்கதான் என் முதலாளி

நிக்கிறார்! வீணா-திவாகர் நிச்சயதார்த்த செலவுக்கு பணம் அனுப்பியிருக்கிறார் அத்தான்! அடுத்த மாசத்தில நாலு நல்ல நாள் பாத்தும் எழுதி அனுப்பியிருக்கிறார்! உங்க சவுகரியப்படி ஒரு நாளில நிச்சயதார்தத்தை கிராண்டா நடத்தத் தான் இந்தப் பணம்....

அதுக்கப் புறம் பாருங்க...ஆந்திரா ஜமீன் பங்களாவில எப்படி ரொம்ப விமரிசையா கல்யாணம் நடக்கப் போகுதுன்னு!

வீணாவுக்கு தடபுடல் கல்யாணம் மட்டுமல்ல, அவளுக்குப் பொறக்கப்போற குழந்தைக்குதான் எல்லா சொத்தும் சேரப் போகுது!

விசாலம்: என்னங்க... இனியும் நாம யோசிச்சா, நம்மளை முட்டாள்னு அக்கம்பக்கத்தில கேலி செய்வாங்க!

மூர்த்தி: நீ சொல்றதும் சரிதான்... எதுக்கும் நம்ம சோசியர்கிட்ட நிச்சய தேதியை சரி பாத்துக்குவோம்

(வேம்பு நுழைகிறான்)

வேம்பு: ஹாய் மூர்த்தி அத்தான்... வீணாவோட நிச்சயதார்த்தம் பத்திதான பேசறீங்க? டாட் சொன்னார்.... அந்த பங்க்ஷனுக்கு என்னோட கிர் கிர் கிரிஜா, அவ அப்பா, அம்மாவோட வரணும்னு ஆசைப் படறா .... ஒகேவா ?

விசாலம்: தாராளமா வந்து விருந்து சாப்பிட்டுட்டு போகட்டும்... ஆனா, செவ்வாய் மனுஷா நம்ம கண்ணுக்கு தெரிய மாட்டங்களே!.... வந்து என்ன பண்ணப்

போறாங்க?

வேம்பு: ஓல்ட் லேடி ... என்னோட வருங்கால மாமனார் கர் கருக்கு பிசினஸ் மைண்டு ... செவ்வாய் கிரகத்தில புகை, தூசு, சாக்கடை, கொசுக் கடி எதுவும் கிடையாது! நம்ம ஊர் பத்தி என்னோட கிர் கிர் கிரி அப்பா கிட்ட சொன்னாளா.... அவர் ஒரு பெரிய பிசினஸ் ஐடியா பண்ணி இங்க வரப் போறாரு!

மூர்த்தி: என்ன செய்யப் போறார்? ஏதாவது மருந்து கொண்டாந்து பூமியை சுத்தம் செய்யப் போறாரா உன் மாமனார்?

வேம்பு: சுத்தம் எப்படி ஆகப் போகுதுன்னு சத்தம் போடாம கேளுங்க.... மருந்து மாயம் எதுவுமில்ல... நம்ம ஊரு கூவம் ஆறு, குப்பை கூளம், கொசுக்கடி எல்லாம் என்னோட கிர் கிர் கிரிக்கு ரொம்பவே பிடிச்சிப் போச்சு! இப்ப,

கொசுக் கடி, சாக்கடை நாத்தம் இல்லாம அவளால, செவ்வாயில தூங்கவே

முடியலையாம்... ரொம்ப கஷ்டப் படரா!
விசாலம்: (வெறுப்புடன்) சரியான நாத்தம் பிடிச்ச பொண்ணா இருக்காளே! நீ எப்படிடா செவ்வாயில அந்தப் பொண்ணோட குடித்தனம் செய்யப் போறே!
வேம்பு: இந்த விஷயத்தில்தான் என்னோட மாமனார் கர் கர் ஐடியா வருது! பூமியில நாத்தம்னு நாம நினைக்கிறதெல்லாம் செவ்வாயில வாசனையா தெரியுது! அதனால, இங்க நாத்தம் அடிக்கிற ஐட்டங்களை நான் காண்ட்ராக்ட் எடுத்து காசு செலவில்லாம

வாங்கிடுவேன்.... அதை என் மாமனார் செவ்வாய்க்கு கொண்டு போயி கொள்ளை கொள்ளையா சம்பாதிச்சிடுவார்!
மூர்த்தி: நாத்தம் பிடிச்ச பேமலி ..

கொள்ளைக்கார பேமலி... பேஷ்... பேஷ்

விசாலம்: எப்படியோ.... அத்தினி வேஸ்ட்டும் பூமியிலேந்து போயிடும்னு சொல்லு!

வேம்பு: ஆமா... நான் யாருன்னு இப்ப புரிஞ்சுதா!

மூர்த்தி: ரொம்ப பெருமைப் பட்டுக்காதே... இவ வேஸ்ட்னு சொன்னது உன்னையும் சேர்த்து தான்!

(வேம்பு அவரை முறைக்கிறான்... அப்போது நாகராஜனின் செல் போன் ஒலிக்க, அவர் அதை காதில் வைத்து மெதுவாகப் பேசுகிறார்)

நாகராஜன்: (வேம்புவை தனியே அழைத்துப் போய்) ஏன்டா வேம்பு... மூர்த்தி அத்தானுக்கு ஏதாச்சும் குரியர் வந்திச்சா? நீதானே வாங்கி வைப்பே?

வேம்பு: ஆமா டாட் ... அரை மணி முந்தி ஒரு

கவர் வந்திச்சு.... அதோ, டேபிள் மேல
வச்சிருக்கேன் பாரு

நாகராஜன்: (மெதுவாக) நல்ல வேளை ...
அத்தான் அதை இன்னும் பிரிக்கலெ (உரக்க)

அத்தான்... ராகு காலம் வர்றதுக்குள்ள,
செக்கை பூஜை ரூமுக்கு கொண்டு போய்
வீணா கல்யாணம் ஜாம் ஜாம்னு நடக்க

பெருமாளை வேண்டிக்குங்க.... அண்ணி....

நீங்களும் போங்க... சாமி ஸ்தோத்திரம்
சொல்லுங்க
(மூர்த்தியும் விசாலமும் உள்ளே

போகிறார்கள்.... நாகராஜன் அவசரமாக
மேஜை மீதிருந்த குரியர் கவரை பிரித்துப்
பார்க்கிறார்)

வேம்பு: (ஆச்சயர்த்துடன்) டாட் .... மூர்த்தி
அத்தானுக்கு வந்த கவர்பா! நீ ஏன் பிரிக்கிற? 

நாகராஜன்: (தாஜா பண்ணியபடி) அதில்லடா கண்ணா... இது ஜமீன்தார் ஊரிலேந்து வந்திருக்கிற லெட்டர் .... தெலுங்கில எழுதியிருக்குன்னு எனக்கு போன் வந்திச்சு...

அத்தானுக்கு தான் தெலுங்கு தெரியாதே? ம்.... ஒன்னு செய்யிறேன் (மேசையிலிருந்து பேப்பரையும் பேனாவையும் எடுத்து மடமடவென்று எழுதி கவரில் அதை மாற்றி வைத்து ஒட்டி வைக்கிறார்.... மூர்த்தியும் விசாலமும் நுழைகிறார்கள்)

நாகராஜன்: மூர்த்தி அத்தான்... ஜமீன் ஊரிலேந்து உங்களுக்கு லெட்டர் வந்திருக்கு பாருங்க!

மூர்த்தி: (அதை எடுத்தபடி) ஜமீன்தார் எதுக்கு லெட்டர் போட்டிருக்கார்?

நாகராஜன்: ஜமீன்தார் எழுதலே.... அந்தக்

கிராமத்து பஞ்சாயத்து பிரெசிடென்ட் ராமையா போட்டிருக்கிறார்.... அவர் பேரு கவர் மேல தெலுங்கில எழுதியிருக்கு!

வேம்பு: ஆனா, உள்ள இருக்கிறது தெலுங்கு லெட்டர் இல்லே! அது...

நாகராஜன்: (அவசரமாக இடைமறித்து):

ஆமா... அந்த ராமையா எனக்கு போன் பண்ணி சொன்னார்... உங்களுக்கு தெலுங்கில எழுதினா தெரியாதே... அதான் இங்கிலிஷ்ல இருக்கு!

மூர்த்தி: (படித்துப் பார்த்துவிட்டு) நாகராஜா.... அந்த ராமையா, ஜமீன்தாரை ஓஹோன்னு புகழ்ந்து எழுதியிருக்கார்.... உங்க பொண்ணு ஜமீன் மருமகளா வர்ற ரொம்பவே புண்ணியம்

செஞ்சிருக்கனும்னு ராமையா எழுதியிருக்கார்!

நாகராஜன்: அடடே... அப்படியா எழுதியிருக்கு!

வேம்பு: (ஆச்சர்யத்துடன்) டாட் ... என்ன

இப்படி ரியாக்சன் குடுக்கிறீங்க! நீங்கதான...

நாகராஜன்: (அவன் வாயைப் பொத்தி)

எழுதினதை ராமையா போன்ல

சொல்லிட்டாரே... எதுக்கு ஆச்சர்யப்

படறீங்கன்னு கேக்கறான்....

விசாலம்: இனிமேலும் மசமசன்னு

நிக்காதீங்க.... மேல ஆக வேண்டியதைப்

பாருங்க!

(நாகராஜன் வேம்புவை தள்ளிக்கொண்டு

வெளியே போகிறார்)

/திரை – மறுபடி விலகும்/

காட்சி 13:

(அதே ஹால்.... மூர்த்தி, விசாலம் இருக்க, வெளியிலிருந்து மீனாட்சி நுழைகிறாள்)

மூர்த்தி: வாம்மா மீனாட்சி.... நீ கோவிலுக்கு போய் அர்ச்சனை செஞ்சிட்டு வந்த வேளை , சுப சேதியா வர்ரதும்மா! ஜமீன்தார் இங்க வந்து பதினைஞ்சு நாள் ஆச்சா... இது வரை தப்பா எதுவும் நம்ம காதில விழல.... இப்ப, அடுத்த மாசம் நிச்சயதார்தத்தை நடத்திக்கலாம்னு ஜமீன்தார் பணத்தை

அனுப்பியிருக்கிறார் .... அந்த ஊர் பஞ்சாயத்து ப்ரெசிடெண்ட்டும் ஜமீன்தாரை அப்படி தலையில தூக்கி வச்சு எழுதியிருக்கார்! நல்ல யோக ஜாதகம் நம்ம வீணாவுதுன்னு இப்ப நல்லாவே புரிஞ்சு போச்சு மீனாட்சி!

மீனாட்சி: அத்தான்... வீணா உசத்தியா வாழப் போறாங்கிறதில எந்த சந்தேகமும்

இல்ல...நிச்சயத்துக்கு இன்னும் நாள்

இருக்கே.... அவளுக்கு வரப் போகிற புருஷன் ஸ்ரீராமன் மாதிரி ஏக பத்தினி விரதனா தான் இருப்பான்!

விசாலம்: (சந்தோஷத்துடன்) பார்த்தீங்களா,

பார்த்தீங்களா... ஜமீன்தார் பிள்ளை திவாகர் உசத்தியானவன்னு மீனாட்சியே சொல்லிட்டா!

மீனாட்சி: நான் அப்படி சொல்லலே

அண்ணி....நிச்சயதார்த்தம் வரை கொண்டு

விட்டிருக்கிற பகவான், வீணாவுக்கு போருத்தமானவனைத் தான் தாலி கட்டவைப்பான்னு சொல்றேன்

(கேட்டுக் கொண்டே கோபால் நுழைகிறார்)

கோபால்: கல்யாணப் பேச்சு காதில விழறதே மூர்த்தி... இங்க சீக்கிரமா மேள சப்தம் கேக்கும்னு சொல்லு!

விசாலம்: ஆமா... அதோட, விருந்து சாப்பிட்டு நீங்க விடற ஏப்ப சப்தமும் கேக்கும்!

மூர்த்தி: ஏன்டா கோபால்... உன்னை கொஞ்ச நாளா காணலியே?

கோபால்: என் பொண்டாட்டியோட நிலம் விஷயமா ஆந்திரா பக்கம் போகனுமின்னு சொன்னேனே ஞாபகமில்லியா? போனவன், அப்பிடியே ஜமீன்தார் பங்களாவையும் போய் எட்டிப் பாத்திட்டு வந்தேன்!

விசாலம்: அதான பாத்தேன்.... ஏதாவது கிடைக்குமான்னு கிளறிப் பாக்காம விட மாட்டீங்களே!

கோபால்: ஹி , ஹி .... நெஜமாவே வந்திருக்கிற சம்பந்தம் ரொம்ப பெரிய எடம்தான்

மூர்த்தி.....ஜமீன் பங்களா, தோப்பு தொறவு இதையெல்லாம் பாத்து பிரமிச்சிட்டுப்

போயிட்டேன் ... ஜமீன்தார் நடத்திற ரியல் எஸ்டேட் கம்பெனி உள்பட அத்தினி சொத்தும் இனிமே உன் பொண்ணுக்குத் தாண்டா! அங்க எனக்கு ராஜோபசாரம்தான் போ! தடபுடல் விருந்து, தட்டில தட்சணைன்னு அசத்திட்டார் ஜமீன்தார்!

மூர்த்தி: (கடன் நோட்டை எடுத்த படி)

தட்சணையும் வாங்கினியா!... எவ்வளவு பணம்

குடுத்தார் சொல்லு.... நோட்ல எழுதிக்கிறேன்.

என் பொண்ணுக்கு வர இருந்ததில கம்மியாயிடிச்சில்ல ?

கோபால்: தாராளமா எழுதிக்க! மொத்த கடனையும் ‘ஜமீன்தார் சம்பந்தி வர்றார்... பராக்.. பராக்’னு குரல் கொடுத்துகிட்டே அடைச்சிடறேன்!

மீனாட்சி: (கோபத்துடன்) ஏன் கோபால் சார்... பொண்ணு வீட்டு சார்பா அவ்வளவு தூரம் போனீங்களே... மூக்கப் பிடிக்க சாப்பிட்டு வந்து நிக்கிறீங்க..அக்கம்பக்கத்தில விசாரிக்கணும்னு தோணலியா?

கோபால்: என்னம்மா... இந்த கோழி கோபாலை இப்படிக் கேட்டிட்டே? எதாச்சும் புதுசா விஷயம் கிடைக்குதான்னு துழாவி

துழாவி பாத்தேனே!  ஆனா, அது ஒரு குக்கிராமம்...  இருக்கிற கொஞ்சம் பேரும் படிப்பறிவே இல்லாத தெலுங்கு பேசற ஆசாமிங்க... பஞ்சாயத்து ப்ரெசிடெண்ட்டா இருக்கிற ராமையா என்னோட ஏதோ பேசணும்னு டிரை பண்ணார்... அந்த ஆசாமிக்கும் தெலுங்குதான் தெரியும்! கடைசியா தட்டு தடுமாறி நம்ம விலாசத்தை கேட்ட மாதிரி இருந்திச்சு... எழுதி குடுத்திட்டு வந்தேன்...

மூர்த்தி:  அந்த ராமையா கிட்டேயிருந்து எனக்கு லெட்டர் வந்தாச்சுடா...  ஜமீன்தாரைப் பத்தி ஆஹா ஓஹோன்னு எழுதியிருக்கிறார்

கோபால்:  கேட்டுக்கிட்டியாம்மா மீனாட்சி... இனிமே என்ன விசாரிக்கிறது?  சம்பந்தத்தை முடிச்சிடுப்பா மூர்த்தி....ஆமா... நான்

மாப்பிள்ளை திவாகரைப் உடனே பாத்து கை குலுக்கணுமே!

விசாலம்: (அலுத்துக் கொண்டு) ஆமா...

மாப்பிள்ளை மாடியில இருக்கிராருன்னு பேரு... இங்க இருக்கிற நாங்களே அவரைப் பார்த்து ரெண்டு வார்த்தை பேச முடியலை.... யாரோ 'வாம்மா மின்னலு'ன்னு கூப்பிடற மாதிரி கிர்னு வெளியே போறாரு, கிர்னு மேல போயிடறாரு!

மூர்த்தி: புரிஞ்சுக்கடி விசாலம்.... மாப்பிள்ளை தன்னோட பிசினசை பார்ப்பாரா, நம்மோட பேசிகிட்டு நிப்பாரா ?

(திவாகர், நாகராஜனுடன் நுழைகிறான்)

திவாகர்: ஹலோ....

மூர்த்தி: (பணிவுடன்) வாங்க மாப்பிள்ளை... உக்காருங்க

திவாகர்: இருக்கட்டும்.... நான் இந்த வீட்டு 

மாடியில குடி வந்து 21 நாள் ஆகுது... மொதல் நாள் என்னைப் பாத்தீங்க... அப்புறம், இப்பதான் நான் வந்திருக்கேன்..... ... ஏன்னா... பேச எனக்கு கொஞ்சம் விஷயம் இருக்கு....ம்.... பரத்தையும் வரச் சொன்னேன்... எஸ்... வந்தாச்சு! (பரத் உள்ளே நுழைகிறான் )

பரத்: ஹலோ திவாகர் சார்... வரச் சொன்னீங்களே?

திவாகர்: ஆமா .... என்னை திவாகர்னு கூப்பிட்டா போதும் பரத்.... ஒகே? என்னோட அப்பா ஜமீன்தார் ஜகன்னாதன் போன் பண்ணி, எனக்கும் வீணாவுக்கும் இன்னும் 15 நாளில கல்யாண நிச்சயம் நடக்கப் போகுதுன்னு சொன்னார்... நான் ஏற்கெனவே, அப்பா நிச்சயம் பண்ற பொண்ணை

கட்டிக்கிறதா அவர் கிட்ட ஒத்துக்கிட்டிருக்கேன்!

நாகராஜன்: மூர்த்தி அத்தான்.... சின்ன ஜமீன்தார் தேங்கா ஒடச்ச மாதிரி, வீணாவை கல்யாணம் செஞ்சிக்க தனக்கு சம்மதம்னு பளிச்சினு சொல்லிட்டார் பாருங்க!

மூர்த்தி: ரொம்ப சந்தோஷம் மாப்பிள்ளை!

திவாகர்: இருந்தாலும் ஒரு விஷயத்தை நான் யோசிச்சேன்.. அதைப் பத்தி முக்கியமா பேச வந்திருக்கேன்.... நான் இங்க தங்க வந்தது, கொஞ்ச நாளில என் அப்பா கல்யாண சம்பந்தம் பேச வந்தது, இன்னும் 15 நாளில நிச்சயம் நடக்க இருக்கிறது... இதனால. உங்க வீட்டில யாருக்காவது ஏதாவது குழப்பம் வந்திருக்க வாய்ப்பு இருக்கு... இல்லியா?

கோபால்: அதாவது, உங்களை மாப்பிள்ளையா ஏத்துக்க இங்க யாரோ தயக்கம்

காட்டுறாங்கன்னு நினைக்கிறீங்களா!

திவாகர்:: ஆமா... அப்படித்தான் எனக்குத் தோணுது!

மூர்த்தி: மாப்பிள்ளை... உங்களோடது பெரிய சம்பந்தம்... இதை நாங்க எதிர்பார்க்கவேயில்ல... உங்களையும் முன்னே பின்னே பழக்கமில்லியா ... அதான் ஆளாளுக்கு கொஞ்சம் மிரண்டு போய், இப்ப எல்லாம் சரியாயிடிச்சு....

மீனாட்சி: அத்தான்... எதுக்கு மூடி மறைக்கணும்.... நான் வெளிப்படையாவே சொல்றேன் தம்பி.... உங்க சம்பந்தம் மட்டும் வராம இருந்திருந்தா, வீணாவுக்கும்

பரத்துக்கும் தான் நாங்க கல்யாணம் பேசி முடிச்சிருப்போம்! ஏன்னா சின்ன வயசிலேந்து பரத் எங்க நிழல்ல வளர்ந்தவன்... வரப் போற மாப்பிள்ளை எப்படி இருப்பாரோ, தீர விசாரிக்கனுமேங்கிற பயமே இல்லே!

நாகராஜன்: சின்ன ஜமீன்தார்.... மீனாட்சி சொல்றது வாஸ்தவம் தான்... அதே சமயம், ஒன்னை தெளிவா

சொல்லிடறேன்....பரத்-வீணா நடுவில காதல் கசமுசான்னு எதுவுமே இல்லே... உண்மையை சொல்லேம்பா பரத்?

பரத்: ஆமா அங்கிள்.... நீங்க சொன்னது சரி

நாகராஜன்: பாத்தீங்களா... நூத்துக்கு நூறு இது பெத்தவங்க நிச்சயம் பண்ற சம்பந்தம்... அந்தஸ்து, பதவி, சவுகரியமான வாழ்க்கை.. இதையெல்லாம் வச்சு வீணாவை 

பெத்தவங்க, நீங்கதான் மாப்பிள்ளைன்னு தீர்மானம் செஞ்சிட்டாங்க... 15 நாளில நிச்சயதார்த்தம்னும் வந்தாச்சு ... இப்ப, பரத் ஒரு பெரிய வேலையில சேரப் போறான்... கூடிய சீக்கிரம் இவனுக்கு நல்ல வரனா நான் முடிச்சுத் தரேன்! இதனால, யாருக்கும் மனத் தாங்கல் வர சான்ஸே இல்லேன்னேன்!

திவாகர்: நீங்க ஆயிரம் சமாதானம் சொன்னாலும், எனக்கு ஒரு சின்ன நெருடல் இருக்கு... (மீனாட்சியை கை காட்டி) இவங்க பரத்தை சின்ன குழந்தையிலேருந்தே தெரியும்னு சொன்னாங்க ... அதாவது என்னைப் பத்தி உங்க யாருக்கும் முழுசா தெரியலை!

மூர்த்தி: மாப்பிள்ளை... மீனாட்சி அந்த அர்த்தத்தில சொல்லலே.... நீங்க தப்பா

எடுத்துக்காதீங்க

திவாகர்: கட்டாயம் நான் தப்பா எடுத்துக்கல.... ஆனா, இதை நான் ஒரு போட்டியா எடுத்துக்கறேன்! நான் பிசினஸ் ஆளு ... போட்டியில்லாத பிசினஸ் எதுவுமில்ல.... அதுவுமில்லாம, அடிப்படையில நான் கிரிக்கெட் ஆசாமி... பரத்துக்கும் கிரிக்கெட் அனுபவம் இருக்கு... வெற்றி, தோல்வியெல்லாம் எதிர்பாராம கிரிக்கெட்ல வரும்... நம்ம வாழ்க்கையும் கிரிக்கெட் மாதிரிதான்

கோபால்: மாப்பிள்ளை... இதையெல்லாம் எதுக்கு சொல்றீங்க... நீங்க தான் ஜெயிக்கிற அளவுக்கு வந்தீட்டீங்களே!

திவாகர்: ஆமா.... கிட்டத்தட்ட... இருந்தாலும்,

ஒரு பரபரப்போட ஜெயிச்சா அது எனக்கு ரொம்ப பிடிக்கும்! கிரிக்கெட்டில கடைசி பந்து இருக்கே... அதோட மகிமையே தனி.... யார் ஜெயிப்பா, யார் தோப்பாங்கறது கடைசி பந்து தீர்மானிக்கும்! நிச்சயதார்த்தத்துக்கு 15 நாள் இருக்கே, இதுதான் கடைப் பந்து!... இதை வீசப் போறது பரத்.... ஆடப் போறது நான்! ... யார் ஜெயிக்கிராங்கன்னு பார்த்துடலாம்.... இது ஜாலியான போட்டியாவே எடுத்துக்கலாம்... ஆல் த பெஸ்ட் பரத்! (கை குலுக்கிவிட்டு வேகமாக போகிறான் திவாகர்)

நாகராஜன்: மூர்த்தி அத்தான்.... மாப்பிள்ளையா வலிய வந்து, கல்யாண விஷயத்தில போட்டிக்கு தயார்னு சவால் விடறார்! இதிலேந்தே தெரியலையா, அவர் சொக்க தங்கம்னு?

மீனாட்சி: தங்கமா இருந்தாலும் லோகத்தில கண்ணை மூடிக்கிட்டு வாங்க மாட்டாங்க! உரசிப் பாத்துதான் வாங்குவாங்க!

பரத்: மூர்த்தி மாமா... வீணா ஜமீன்தார் வீட்டு மருமகளாப் போறதுதான் உசத்தி.... போட்டி எதுவும் வேணாம்... விளையாட்டுக்குக் கூட நான் உங்களுக்கு எந்த தர்மசங்கடத்தையும் குடுக்க நான் விரும்பல மாமா

விசாலம்: எண்டா பரத்... நெருப்புன்னா வாய் வெந்துடுமா என்ன? மாப்பிள்ளை என்ன சொன்னாரோ அதை செய்....

வீணா: ஆமாம் பரத்.... அதிர்ஷ்டம் உன் பக்கம் இருந்தாலும் இருக்கும்.... நீயா நானான்னு ஒரு கை பாத்துடு!

பரத்: அப்படீங்கிற? ஒகே!

# ஐந்தாம் பகுதி | காட்சி 14

காட்சி 14:

(அதே இடம்.... மூர்த்தி, விசாலம், வீணா,மீனாட்சி, கோபால் ஆகியோர்)

வீணா: (மீனாட்சி கையிலிருந்த புடவையைப் பார்த்தபடி) ஹை .....பட்டுப் புடவை! டிசைனும் கலரும் சூப்பரா இருக்கே!

நான் இப்பவே கட்டிப் பாக்கணுமே.... ப்ளீஸ்!

மீனாட்சி: அதுக்குள்ள அவசரத்தைப் பாரு!

இன்னும் பத்து நாள் பொறுக்கணும் வீணா! நிச்சயதார்த்தத் தட்டில இதை வைச்சு ஐயர் மந்திரம் ஓதி கொடுத்த பின்னாடிதான் கட்டிக்கணும்!

விசாலம்: அம்மாடி... கல்யாணப் பேச்சை எடுத்தாலே வேணாம் வேணாமின்னு தட்டிக் கழிச்ச நம்ம பொண்ணுக்கு கல்யாண களை வெகு ஜோரா வந்திடிச்சே!

மூர்த்தி: வீணா... இந்த புடவையை விட உசத்தியான விஷயம் இருக்கு... நிச்சயப் புடவை வாங்கிறது பெத்தவங்களோட கடமை... ஆனா, உன் பேர்ல எவ்வளவு பாசம் வச்சிருந்தா, கொஞ்சம் கொஞ்சமா சீட்டில போட்டு வச்சிருந்த பணத்தில, உனக்காக இந்த ரெண்டு வடம் செயினை வாங்கியிருப்பா மீனாட்சி!

வீணா: (செயினை வாங்கிப் பார்த்து விட்டு, கண் கலங்கியபடி) அசத்திட்டீங்க மீனாட்சியம்மா ... இந்த செயினில, தங்கத்தோட ஒளியை விட, உங்க அன்புதான் ஜோரா ஜொலிக்குது!

விசாலம்: சரியா சொன்னெம்மா வீணா... இவ்வளவு சிரத்தையோட நிச்சய ஏற்பாடுகளை கவனிக்கறா மீனாட்சி... ஜமீன் சம்பந்தம் நல்லதுதான்கிற முடிவுக்கு வந்திட்டான்னு தெரியறது... எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு!

மீனாட்சி: கொஞ்சம் பொறுங்க அண்ணி.... இன்னும் 10 நாளில நிச்சயமா நிச்சயதார்த்தம் நடக்கும்... அதே சமயம் போட்டியும் இருக்கு.... அதில ஜெயிக்கிறவந்தான் மாப்பிள்ளை!

கோபால்: இதை... இதை.... இதைதான் நான் எதிர்பார்த்தேன்! ஏம்மா மீனாட்சி.... கிரிக்கெட் ஸ்டைல்ல வீணா வாழ்க்கைப் போட்டி நடத்தறதா தீர்மானிச்சாச்சு.... அம்பயர்தான முடிவை சொல்லணும்? ரெண்டு பக்கமும் சேராத ஆளுதான் அம்பயரா இருக்கணும்... அப்படிப் பாத்தா, நான் தான் அம்பயர்!

(அதைக் கேட்ட படி பரத் வருகிறான்)

பரத்: கோபால் சார்... உங்களை நீங்களே அம்பயரா சலெக்ட் பண்ணிகிட்டீங்களா ! வாழ்த்துக்கள்

விசாலம்: ஆலையில்லாத ஊருக்கு இலுப்பை பூ சக்கரை!

மூர்த்தி: அட... கோபால் தான் பொழுது

போகாம தவிக்கிறானே... இப்படி உருப்படியா ஏதாவது செய்யட்டுமே!

பரத்: நான் போடப் போறது கடைசிப் பந்து கோபால் சார்.... வாழ்க்கைப் போட்டியோட ரூல்ஸை நல்லா தெரிஞ்சிகிட்டு சரியான முடிவை எடுங்க!

கோபால்: அதுக்கென்ன.... போட்டியோட விதிமுறையை இப்பவே தீர்மானிச்சிடலாம்! ஒன்னு...கிரிக்கெட்டில மூணு ஸ்டம்பு ... வாழ்க்கையில பணம், பதவி, அந்தஸ்துன்னு மூணு ஸ்டம்பு... இதில எது சரியில்லேன்னாலும் உன்னோட கடைசிப் பந்தால திவாகரை கிளீன் போல்ட் பண்ணிடலாம்!

விசாலம்: அஸ்கு புஸ்கு.... இந்த மூணும்தான் ஜமீன் மாப்பிள்ளைக்கு அமோகமா இருக்கே!

மூர்த்தி: அதானே... அந்த ஸ்ட்ராங் பாயின்ட்டாலதான சின்ன ஜமீன்தார் ஜெயிக்கிறதுக்கு ரொம்ப க்ளோசா வந்திருக்காரு!

மீனாட்சி: அது தெரிஞ்ச கதை... ஏதாவது காரணத்தால, கடைசிப் பந்தை சரியா ஆட முடியாம, கேட்ச் குடுக்கலாமே!

கோபால்: ஆமால்ல? . கண் பார்வை சரியில்லாம, இல்ல, வேற ஏதோ டென்ஷன்ல கவனம் இருந்தா அவுட் ஆக்க வழி இருக்கு!

வீணா: நோ நோ... திவாகருக்கு அப்படியெல்லாம் குறை இருக்கிறதா

தெரியலை!

மீனாட்சி: ஏன் ... இப்படி இருக்கலாமில்ல?

கண் காணாத தேசத்தில இருக்கிற பையன்... பொண்ணு விஷயத்தில அப்படி இப்படி இருக்க வாய்ப்பு இருக்கே?

பரத்: மீனாட்சி மாமி... இந்த விஷயத்திலேயும் திவாகர் பாஸ்! அமெரிக்காவில இருக்கிற என் பிரண்டை விசாரிக்க சொன்னேன்.... கொஞ்ச நேரம் முந்தி அவன் போன்ல வந்தான்.... திவாகருக்கு இருக்கிறது ஒரே ஒரு பிரண்டு... ஆம்பளை பிரண்டு! அந்த பிரண்டு கூட தான் ப்ளாட்ல தங்கியிருக்கறார்... அவங்க ரெண்டு பேரும்தான் ஒன்னா வெளியே போவாங்க! ஆபீஸ்ல ரொம்ப ஸ்ட்ரிக்டா தான் எல்லார்கிட்டேயும் பழகுவாராம்!

விசாலம்:  மீனாட்சி.... உனக்கே தெரியும்... ஜமீன் பிள்ளை பொம்பளைங்க பக்கம் கூட திரும்பி பாக்கிறது இல்லே!

கோபால்: இதுவும் தப்புதான்னேன்....முசுடா இருக்கிறவங்க கிட்ட பந்தபாசம் இருக்காது! வீணா எப்படி திவாகரோட குடித்தனம் நடத்துவா?

(வேம்பு உள்ளே நுழைகிறான்)

வேம்பு:  கோபால் சார் சொல்றது கரெக்ட்.... நானும் கிர் கிர் கிரியும் லவ் பண்ண ஆரம்பிச்சதிலேந்து எங்களால தனியாவே இருக்க கஷ்டமா  இருக்கு... கிர் கிர் வந்து நாலு வார்த்தை பேசி, ஒருத்தரை ஒருத்தர் ஆசை தீர பார்த்தப் புறம்தான் எங்களுக்கு மனசு நிம்மதியா இருக்கு!  இந்த திவாகர்

என்னடான்னா, வீணா பக்கம் திரும்பியே பாக்க மாட்டேங்கிறார்.... நிச்சயம்னு ஆனா பிறகும் இப்படியா ஒருத்தர் மரக் கட்டை மாதிரி இருப்பாரு?

மீனாட்சி: அப்பாடா ... என்னோட பையன் இப்பத்தான் உருப்படியா பேசியிருக்கான்!

கோபால்: மீனாட்சியம்மா.... திவாகரோட வீக்னெஸ் என்னன்னு கண்டுபிடிச்சது நானு... கடைசிப் பந்தில அவுட்டுக் குடுக்கப் போறது இந்த அம்பயர்! அப்புறம் பாரு என் கீர்த்தியை! அடுத்த ஐபீஎல் போட்டிக்கு என்னை கோடிக் கணக்கில ஏலத்தில எடுப்பாங்க!

பரத்: ஐயோ கோபால் மாமா.... கிரிக்கெட் விளையாடுறவங்களை தான் ஏலத்தில

எடுப்பாங்க….அம்பயரை இல்லே!

(திவாகர் குதுகலத்துடன் சின்னக் குழந்தை மாதிரி குதித்துக்கொண்டு பாடிய படி வருகிறான்)

ஹாப்பி….இன்று முதல் ஹாப்பி … ஹாய் எவரிபடி…. நான் இப்ப ரொம்ப சந்தோஷமா இருக்கேன்….. இந்தாங்க சாக்லேட்.. (கவரை நீட்டுகிறான்)….. வீணா உனக்கு ரெண்டு … நீ கல்யாணப் பெண்ணாச்சே! மீனாட்சி மாமி, பரத், கோபால் சார் … எடுத்துக்குங்க… ஜாலியாசாப்பிடுங்க! வேம்பு… உனக்கு சாக்லேட் கெடையாது…. (இடைவெளி விட்டு) இந்தா நூறு ரூவா….என்ஜாய்!

கோபால்: இத்தினி நாளா கடுகடுன்னு நாங்க

பாத்த சின்ன ஜமீன் . இப்ப ஜாலி ஜமீனா மாறின காரணம் என்னவோ!

திவாகர்: சரியான கேள்வி... எனக்குள்ள தூங்கிக்கிட்டிருந்த அன்பை வெளிப்படுத்த இப்ப நேரம் வந்தாச்சு! கோபால் சார்... ஒரு மாசமா என்னை பிரிஞ்சிருந்த என்னோட ரூம் தோழன் அமெரிக்காவிலேந்து சென்னைக்கு வர்றான்..... இந்த இருவது நாளா டல் அடிச்சிகிட்டிருந்த நான், எல்லாத்தையும் சேத்து வச்சு என் ப்ரெண்டோட பேசப் போறேன்... அத நெனைச்சாலே வானத்திலே ரொம்ப உயர பறக்கிற மாதிரி இருக்கு! பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோன்னு யாரோ சொன்னங்க... ஆனா நாங்க பேசுவோம்!

மீனாட்சி: என்னங்க தம்பி இது... புருஷன் 

பொஞ்சாதி ரொம்ப காலமா பிரிஞ்சு மறுபடி கூடினாதான் அப்படி சொல்லுவாங்க?

திவாகர்: எல்லாத்துக்கும் அன்பு தானே அடிப்படை.... இந்த இருவது நாளில அதை ஒரேயடியா மிஸ் பண்ணிட்டேனே? அதோ.... கார் சப்தம் கேட்குது... உள்ள வந்திட்டான் ! (நீக்ரோ தோற்றமுடைய ஒருவன் அவசரமாக உள்ளே நுழைகிறான்).... மாசி... என் ஆருயிர் தோழா! வாடா.... வாடா.... (இருவரும் கட்டி அணைத்துக்கொள்கிரார்கள்)

மாசி: (உடைந்த தமிழில்) டேய் திவா ... நீ ஏண்டா ஏர்போர்ட் வரலே ?

திவாகர்: மாசி... ஏர்போர்ட்ல நான் வந்தா, இப்பிடி கட்டி புடிச்சி டான்ஸ் ஆடுனா,

போட்டோ எடுப்பாங்க.. பேப்பர்ல போட்டு அசிங்கம் பண்ணுவாங்க... அரை மணி தானேடா... இதோ எதிரே நிக்கிறியே மாசி (மறுபடி கட்டிக் கொள்கிறார்கள்)

கோபால்: என்னது! இவர் நீக்ரோ மாதிரி இருக்கிறாரு... ஆனா தமிழ் சுமாரா பேசறாரு! தமிழ் ஹீரோயினிங்களுக்கு சவால் விடுவாரு போல!

மாசி: ஆமா அங்கிள்... நானு நீக்ரோ... ரியல் பேரு மோசி... என்னோட டியர் திவா கூட க்ளோசா பேசணும் பழகனும்... அதான் தமிழ் கத்து கிட்டேன் ... மாசின்னு தமில் பேரு மாத்தி கிட்டேன்

விசாலம்: ட்ரஸ் கூட ரெண்டு பெரும் ஒரே

மாதிரி போட்டிருக்கிரான்களே!

மாசி: ஆமா ஆண்டி... ட்ரஸ் ஷூ எல்லாம் ஜோடியாதான் வாங்குவோம் .. ஒரே கலர்ல போடுவோம்....

திவாகர்: டேய் மாசி...எப்பிடிடா நான் இல்லாம இத்தினி நாள் தள்ளினே! சரியான போர் அடிச்சிருக்குமே? எனி வே... (பாடுகிறான், அவன் கைகளைக் கோத்தபடி) உன்னை நான் சந்தித்தேன்.... நீ ஆயிரத்தில் ஒருவன்...

மாசி: ஆமான்டா திவ்.... ஒன்ன காணாத கண்ணும் கண்ணுல்ல.... உன்னை என்னாத நெஞ்சும் நெஞ்சில்ல...

வேம்பு: (பாடுகிறான்) சூப்பரு..... இது சூப்பரு...

ஆமா... நான் என்னோட கிர் கிர் கிரியோட இப்பிடி ஏதாச்சும் பாடணுமே?

கோபால்: பாடேன் இப்படி... நீ எங்கே.... நான் இங்கே... இல்லாட்டி, மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன.

மூர்த்தி: கோபால்... நீ இப்பிடி பாடு...
கண்ணுல போட்டாலும் போட்டேன்... காமெடி பீசா ஆயிட்டேன்!

திவாகர்: மாசி... நீ கிரேட் டா... உன் வேலையெல்லாம் விட்டுட்டு அமெரிக்காவிலேந்து என் நிச்சயதார்த்தத்துக்கு வந்திட்டே பார்த்தியா!

மாசி: இட்'ஸ் ஒகே திவா.... மொதல்ல, ஜமீன்

வாரிசுக்கு உனக்கு புள்ளை பெத்து கொடுக்கப் போற பொண்ணு யாரு சொல்லு!

திவாகர்: இதோ நிக்கிறா பாரு.... வீணா!

மாசி: ஹாய்... வீணா... என் ப்ரெண்ட் திவா ஸ்வீட் பாய் .... நைட் முழுக்க ஜோக் சொல்லுவான்... நான் அப்பிடியே மயங்கிடுவேன்!

விசாலம்: (மெதுவாக) பார்த்தியாடி வீணா.... இந்த திவாகர் தம்பியை போய் முசுடுன்னு சொல்லலாமா!

திவாகர்: ஒகே வீணா... டேய் மாசி... இனிமேலும் நாம ஏன் டைம் வேஸ்ட் பண்ணும்? பிரிஞ்ச நாம இப்ப

சேர்ந்திட்டோம்... இன்னிக்கு புல் டே நமக்கு கொண்டாட்டம்... வா, மாடி ரூமுக்கு போகலாம்.... மொதல்ல நல்லா குளி ... உனக்காக ஸ்பெஷல் ஐய்டங்க சமைச்சு வச்சிருக்கேன்... அசந்து போயிடுவே!

கோபால்: (சப்பு கொட்டியபடி) சின்ன ஜமீன்தார்... உங்க கை பக்குவத்தை நானும் வந்து சாப்பிட்டு பார்க்கிறேனே?

திவாகர்: சாரி கோபால் சார்.... எங்களை யாரும் டிஸ்டர்ப் செய்யக்கூடாது... வாடா மாசி போகலாம் (இருவரும் போகிறார்கள்)

மூர்த்தி: பார்த்தியா மீனாட்சி... மாப்பிள்ளை திவாகர் ப்ரெண்டுக்காக உசிரையே குடுக்கிறார்... கல்யாணம் ஆயிட்டா, 

வீணாவை தல மேல தூக்கி கொண்டாடுவாருங்கிரதில ஒரு சந்தேகமும் இல்லே!

கோபால்: நீ சொலறது சரிடா மூர்த்தி.... இனிமே, எந்த ரூல் படியும் சின்ன ஜமீனுக்கு அவுட்டு குடுக்க வழி இல்லேன்னேன்! பேசாம, அவர்தான் மாப்பிள்ளைன்னு உறுதியா டிக்ளேர் செஞ்சிட்டு போட்டியை

நிறுத்திடலாம்... ஏன் ... நிச்சயம் முடிஞ்ச கையோட கல்யாணப் பத்திரிக்கையை அச்சடிக்க குடுத்திடலாம்!

வீணா: ஏண்டா வேம்பு... உன் கல்யாணத்துக்கு பத்திரிக்கையை எப்படி பிரிண்ட் செய்யப் போறே?

வேம்பு: (ஒரு முறை செருமிக் கொண்டு) 

வேம்பு வெட்ஸ்  கிர் கிர் கிரின்னு இங்கிலீஷ்ல போடுவேன்... பின் பக்கம் தமிழ்ல, உடன்குடி நாகராஜனின் சீமந்த புத்திரன் பூமியின் தவப் புதல்வன் வேம்புவுக்கும்,  ப்ராட்பரி கர் கரின் சீமந்த புத்திரி செவ்வாய் சிங்காரி கிர் கிர் கிரிஜாவுக்கும் ... இப்படி ஆரம்பிச்சு போடுவேன்!

பரத்:  அது சரி வேம்பு....  பொண்ணு வீட்டுக்காரங்க எப்படி பத்திரிக்கை போடுவாங்கன்னு  நாங்க தெரிஞ்சிக்க வேணாமா?  மொதல்ல நாம செவ்வாய் பாஷையை எப்படி படிக்கிறது சொல்லு!

வேம்பு: எங்கப்பா எதுக்கு இருக்கிறார்? செவ்வாய் பாஷையை தமிழ்ல எழுதி படிக்க கிர் கிர் கிட்ட கத்துக்க சொல்லுவேன்...

அன்னைக்கு எங்க அப்பா தானே தெலுங்கில ராமையா எழுதின லெட்டரை இங்கிலிஷ்ல எழுதி மாத்தி வச்சார்!

மூர்த்தி: (கோபத்துடன்) என்னது? எனக்கு ராமையா எழுதின தெலுங்கு லெட்டரை நாகராஜன் இங்கிலிஷில எழுதி மாத்தி வச்சானா?

மீனாட்சி: பார்த்தீங்களா... பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்... என் புருஷன் அதை மாத்தி வைக்க வேண்டிய அவசியம் என்ன? அடேய் வேம்பு... குரியர்ல வந்த அந்த தெலுங்கு லெட்டர் எங்க?

வேம்பு: அதை தான் டாட் தன் பாக்கெட்ல வச்சிகிட்டாரே!

பரத்: மூர்த்தி மாமா... இதில ஏதோ குளறுபடி இருக்கு!

மீனாட்சி: இதை விடக் கூடாது.... வந்த தெலுங்கு லெட்டரை தானே என் புருஷன் மறைச்சிட்டாரு.... அதை எழுதின ராமையா ஜமீன் கிராமத்தில இருக்கிறாரே ! பரத்... நீ ஒன்னு செய்... உடனடியா நீ அங்க போய் ராமையா கிட்ட அவர் என்னதான் எழுதினார்னு விசாரி!

பரத்: இதோ கிளம்பறேன் மாமி.. எனக்கு ஒரு தெலுங்கு பிரெண்டு இருக்கான்.. அவனையும் கூட்டிகிட்டு போறேன்!

திரை – மறுபடி விலகும்

காட்சி 15:

(அதே ஹால்...மூர்த்தி, விசாலம், மீனாட்சி, கோபால், வீணா ஆகியோ ர் இருக்க, பரத் நுழைகிறான்)

மூர்த்தி: வாடா பரத் ... போன காரியம் என்ன ஆச்சு?

பரத்: (தயங்கியபடி) மாமா.... எப்பிடி ஆரம்பிக்கிறதுன்னு தெரியல...

விசாலம்: (பதறியபடி): பரத்...

எதுவாயிருந்தாலும் சொல்லு... விடிஞ்சா நிச்சயமாச்சே? அக்கம்பக்கம் எல்லாருக்கும் சொல்லியாச்சேடா

..

பரத்: மாமா, மாமி... பதட்டப்படாதீங்க... நான் தெரிஞ்சுகிட்டதை விவரமா சொல்றேன்... ஒன்னு மட்டும் உறுதி... சின்ன ஜமீனுக்கு நேரிடையா தொடர்பு இல்ல... மொதல்ல, ஒரு வார்த்தையில சொல்றேன்... அவரோட அப்பா ஜமீன்தார் ஜகந்நாதன் ஒரு கொலை கேசில சம்பந்தப் பட்டிருக்கார்!

கோபால்: அய்யய்யோ.. இது எப்படி எனக்கு தெரியாமப் போச்சு?

பரத்: உள்ளூர் பஞ்சாயத்து ப்ரெசிடெண்ட் ராமையா இந்த தகவலைத் தான் நீங்க போயிருந்தப்போ சொல்ல வந்திருக்கார்... நீங்க குடுத்த இந்த விலாசத்துக்கு தெலுங்கில எழுதின லெட்டர்ல, “ஜமீன்தார் ஒரு கொலை கேசில மாட்டி இருக்கிறது உங்களுக்கு தெரியாதுன்னு நெனைக்கிறேன்... எதுக்கும் அதைப் பத்தி தீர விசாரிச்சு அப்புறமா உங்க பொண்ணை அவர் பிள்ளைக்கு குடுக்கிறதைப் பத்தி யோசிங்கன்"னு அவர் எழுதியிருந்தாராம்!

மூர்த்தி: கவருக்குள்ள இருந்த இங்கிலீஷ் லெட்டர்ல அதைப் பத்தி ஒரு வரி கூட இல்லியே? (மேஜை மீதிருந்து எடுத்து) ஆமா... ஒரு வரி கூட இல்லியே?

மீனாட்சி: எப்படி இருக்கும் அத்தான்...

உங்களுக்கு விஷயம் தெரியக் கூடாதுன்னு தானே, வந்த தெலுங்கு லெட்டரை எடுத்து மறைச்சு, இதை எழுதி வச்சாரு என் வீட்டுக்காரர்!

மூர்த்தி: (கோபத்துடன்) படவா ராஸ்கல்... நம்பிக்கை துரோகம் செஞ்சிட்டானே

நாகராஜன்.... அவன் வரட்டும்... உண்டு இல்லைன்னு பண்ணிடறேன்!

விசாலம்: ஏங்க.. இப்ப அதுவா முக்கியம்....

பரத்... என்ன விஷயம்னு சொல்லேன்... எனக்கு வயத்தை கலக்கரதுப்பா?

பரத்: ஜமீன்தார் சம்சாரம், திவாகர் பொறந்த

ஒரு வருஷத்திலேயே செத்திட்டாங்க... ஜமீன்தார் ஜகந்நாதன் வேற கல்யாணம்

செஞ்சுக்கலை....

விசாலம்: இதை அவங்க அனுப்பிச்ச தகவல்ல சொல்லியிருக்கே?

பரத்: சொல்ல மறைச்சதை நான் சொல்றேன் மாமி.... அந்த குழந்தை திவாகரை வீட்டு வேலைக்காரி தான் வளர்த்தா... ஜமீன்தார் எந்நேரமும் ஜமீன் விஷயங்களில மூழ்கியிருந்ததால, குழந்தை பேர்ல அக்கறையே செலுத்தல... வேலைக்காரியோட நாலு வயசுப் பையன்தான் குழந்தை திவாகரை எந்நேரமும் தூக்கி வச்சு விளையாடுவான்... பத்து பன்னிரண்டு வருஷமா இது தொடர்ந்து, அந்த ரெண்டு பசங்களுக்கும் ஒரு அன்னியோன்னியம் உருவாச்சு... திவாகர் அந்த வேலைக்காரி மகனோட தான்

எந்நேரமும் இருப்பான் , அவன் கூட சாப்பிடுவான், படுப்பான் ... இந்த சூழ்நிலை சிக்கல் ஜமீந்தாருக்கு மெதுவா தான் புரிஞ்சிது... மொதல்ல, குழந்தை திவாகரை அந்தப் பையனிடமிருந்து பிரிக்க, அந்த வேலைக்காரியை ஜமீன் வேலையிலேந்து நிறுத்திப் பார்த்தார்.... அப்படியும் திவாகர் வேலைக்காரி வீடு தேடி அந்தப் பையனோட பழக ஆரம்பிச்சான்.... ஜமீன்தார் எவ்வளவு சொல்லியும் அவன் கேக்கலை... கோபத்தில, ஜமீந்தார் , குடிசையில தூங்கி கிட்டிருந்த வேலைக்காரி பிள்ளையை, நெருப்பு வச்சு கொளுத்தி சாகடிச்சிட்டார்! சமையல் நெருப்பால அந்த பையன் செத்தான்னு வதந்தியை கௌப்பினார் . இருந்தாலும், அந்த வேலைக்காரி விடல... ஊர் பஞ்சாயத்து

துணையோட போலீஸ் கேஸ் பதிவாச்சு... ந்யூஸ் பேப்பர்லயும் ஜமீன்தார் தான் இந்த கொலைக்கு காரணம்னு எழுதினாங்க! இருந்தாலும், தன்னோட பண பலம், ஆள் பலத்தை வச்சு. கேசு வெளியே வராம தூங்க வச்சிட்டார் ஜமீந்தார் ... என்னைக்காவது ஒரு நாள் உண்மை வெளியே வரும்னு நம்பிக் கிட்டிருக்காங்க அந்த வேலைக்காரியும், பஞ்சாயத்து ப்ரெசிடெண்ட் ராமையாவும்!

மீனாட்சி: பாத்தீங்களா அத்தான்... என் வீட்டுக்காரரர் சம்பந்தப்பட்ட விஷயம்னா ரொம்ப கவனமா இருக்கணும்னு நான் சொன்னேனா இல்லியா?

கோபால்: ஏம்பா பரத்... திவாகருக்கு தெரிஞ்சா இது நடந்திச்சு?

பரத்: இல்ல.. முன்னாடியே ஜமீன்தார் சாமர்த்தியமா மேல் படிப்புன்னு சொல்லி, திவாகரை ஹைதராபாத்ல ஒரு பெரிய ஸ்கூல சேர்த்து, ஹாஸ்டல்ல தங்க வச்சிட்டார்... திவாகரும் படிப்பில கவனம் செலுத்தி, அமெரிக்கா போறதை தன குறிக்கோளா வச்சிகிட்டார்... அப்பன்கிற பாசம் அவருக்கு எப்பவுமே இல்லே... அதுமில்லாம, இந்த கொலை விஷயமும் அவருக்கு தெரிஞ்சிருக்க வாய்ப்பு இருக்கு... அதனாலதானோ என்னமோ, ஜமீன்தார் கிட்ட அவர் அதிகமா பேசறது இல்ல... ஜமீன் பங்களாவுக்கு எப்பவாச்சும் போய் உடனே திரும்பி விடுவார்! கொலை செய்யப் பட்ட அந்த வேலைக்காரி பையனோட பேரைக் கேட்டா ஆச்சர்யப் படுவீங்க... மாசி!

எல்லோரும்: (ஆச்சர்யத்துடன்) மாசியா!

கோபால்: அதெப்படிப்பா பரத்! திவாகர் கூட மாடியில இருக்க நீக்ரோ ப்ரெண்ட் பேரும் மாசி!

பரத்: காரணம், திவாகர் செத்துப்போன வேலைக்காரி பிள்ளை மாசியோட

நினைவாவே இருந்திருக்கார்.... (கையிலிருந்த பத்திரிக்கையை காண்பிக்கிறான்) இங்க பாருங்க.. ஒரு தெலுங்கு பத்திரிக்கையில கொலை நடந்தப்புறம் வந்த வேலைக்காரி

பிள்ளை மாசியோட போட்டோ... கருப்பா, திவாகரோட ப்ரெண்ட் சாயல்ல இருக்கான்!

நான் நினைக்கிறேன்... அமெரிக்கா போன திவாகர் நீக்ரோ மோசியைப் பாத்ததும் உள் மனசில இருந்த மாசியோட ஞாபகம்

வந்திருக்கு... அதனால தான் ரெண்டு பேரும் க்ளோஸ் ப்ரெண்ட் ஆயிட்டாங்க... திவாகர், மோசி பேரை மாசின்னு மாத்தி வச்சதும் அதனால தான்!

கோபால்: மூர்த்தி... இது என்னடா கஷ்ட காலம்... ஜமீன் சம்பந்தம் கொலைகார சம்பந்தமா ஆயிடிச்சே? ஆனாலும், திவாகர் தம்பி பேர்ல அனுதாபப் படத்தாண்டா தோணுது... நீ என்ன பண்ணப் போற? விடிஞ்சா நிச்சயமாச்சே?

வீணா: அம்மா... எனக்கு ரொம்ப பயமா இருக்கு.. சின்ன ஜமீந்தாரோட அமெரிக்காவில குடித்தனம் நடத்தனும்னு யாருமே சொல்லலே... ஜமீனுக்கு நான் ஒரு வாரிசை பெத்து தரணும்னு தான் எல்லோரும் 

பேசறாங்க! அப்ப, நான் வாழ்நாள் பூரா அந்த கொலைகார மாமனாருக்கு சமைச்சு போட்டு ஜமீன் பங்களாவில காலம் தள்ளனுமா?

மீனாட்சி: பார்த்தீங்களா அத்தான்.. நம்ம வீணா, கல்யாணத்துக்கு முந்தியே கண் கலங்குறா... இப்படிப் பட்ட சம்பந்தம் தேவைதானா?

விசாலம்: இத பாருங்க.... வீணா கேள்விக்கு நாம உடனே பதில் தெரிஞ்சுக்கணும்.... அந்த மாப்பிள்ளை பையனை உடனே மாடியிலேந்து வரவழைச்சு, கல்யாணம் ஆன கையோட நீங்க வீணாவை அமெரிக்காவுக்கு அழைச்சிகிட்டுப் போய் குடித்தனம் செய்யனும்னு தீர்த்து சொல்லிடுவோம்... குழந்தை பொறந்தாலும், அது அப்பா அம்மாவோட

அமெரிக்காவிலதான் இருக்கணும்

நாகராஜன்: (கையில் ஒரு பத்திரிக்கையுடன் நுழைகிறார்) என்னது... நிச்சயமே நாளைக்கு தான் நடக்கப் போறது... குழந்தை வரைக்கும் போயிட்டீங்க!

மூர்த்தி: (கோபத்துடன்) ஏன்டா நாகராஜா... எந்த மூஞ்சியை வச்சிக்கிட்டு இந்த வீட்டுக்குள்ள அடிஎடுத்து வச்ச? உன்னோட அயோக்கியத்தனத்துக்கு அளவே கெடையாதா?

விசாலம்: ஏம்பா நாகராஜா... நாங்க உனக்கு என்ன கெடுதல் பண்ணோம் சொல்லு... என் பொண்ணு வாழ்க்கை எப்படி இருக்குமோன்னு எங்களை புலம்ப வச்சிட்டியேப்பா?

நாகராஜன்: என்னை யார் யார் திட்டி தீர்க்கணும்னு நினைக்கிறீங்களோ, அதை இப்பவே செஞ்சிடுங்க... அப்புறம் நான் என்ன சொல்றேன்கிறதையும் கேளுங்க..

மீனாட்சி: இன்னும் எங்களை கெடுக்கறதுக்கு பாக்கி வச்சிருக்கீங்களா?

நாகராஜன்: ஏம்பா பரத்... நேத்து நீ ஆந்திராவில ஜமீன் கிராமத்துக்குப் போய் ராமையாவை பாத்திட்டு வந்தே... இல்லியா?

பரத் ஆமாம் மாமா...

நாகராஜன்: ஜமீந்தார் பேர்ல கொலை கேசு இருக்குனு சொல்லி தெலுங்கு பத்திரிக்கையெல்லாம் குடுத்திருப்பானே?

கோபால்: ஆமாம் நாகராஜன்.. விஷயத்தை கேள்விப் பட்டு நாங்க ஆடிப் போய் உட்காந்திருக்கோம்.. ஜமீன் சம்பந்தம்கிற பெருமையெல்லாம் தலைகீழா மாறிடிச்சு!

நாகராஜன்: அது நேத்து நடந்த கதை... இப்ப பேப்பர்ல வந்த நியுஸ் படிக்கிறேன் கேளுங்க! (பேப்பரை படிக்கிறார்) ஜமீன்தார்

ஜகன்னாதன் கோர்ட் அவமதிப்பு வழக்கு .... ராமையா , வேலைக்காரி கைது! தன் மீது தொடர்ந்த கொலை வழக்கு தள்ளுபடி செய்திருந்த நிலையில், தன்னை கொலைகாரனாக விஷமப் பிரச்சாரம் செய்ததாக ராமையா மற்றும் வேலைக்காரி கெங்கம்மா மீது ஜமீன்தார் ஜகந்நாதன் தொடுத்த அவமதிப்பு வழக்கு இன்று ஆந்திரா நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டு,

அவ்விருவரையும் கைது செய்ய நீதிபதி உத்தரவிட்டார்! தனது மகனின் திருமணம் சென்னையில் நிச்சயமாகும் நிலையில், தன் மீது அவதூறு கிளப்பி, பெரிய தொகையைக் கேட்டு அவர்கள் மிரட்டியதாக ஜகந்நாதன் தன மனுவில் சமர்ப்பித்ததுடன், அதற்கான ஆதாரத்தையும் கோர்ட்டில் குடுத்திருந்தார். போலீஸ் விசாரணையில், ராமையாவுக்கும் கெங்கம்மாவுக்கும் கள்ளத் தொடர்பு இருப்பதும், ஜமீன்தாரின் புகழைக் கெடுக்க பல முறை அவர்கள் முயற்சித்ததும் தெரிய வந்தது!

நாகராஜன்: (பேப்பரை நீட்டியபடி) மூர்த்தி அத்தான்... இப்ப என்ன சொல்றீங்க!

மூர்த்தி: அப்பாடா... என் வயத்தில பாலை வார்த்தடா நாகராஜா... குழப்பத்தில ஏதேதோ

பேசிட்டேன்... எதையும் மனசில வச்சிக்காதே!

நாகராஜன்: அத்தான்... பத்து வருஷமா, ஜமீன்தார் கூட இருந்த எனக்குதான் தெரியும் ஏன் இப்படி நடக்குதுன்னு! ஜமீன்தார் எத்தினியோ கேசுங்களை சந்திச்சிருக்கார்... காய்ஞ்ச மரம் தான் கல்லடி படும்?

கோபால்: நீ சொல்றதும் சரி தான்... ஆனா ஒரு விஷயம்... அன்னைக்கு ராமையா எழுதின லெட்டரை ஏன் மாத்தி வச்சே?

நாகராஜன்: ராமையா தெலுங்கில கேசைப் பத்தி எழுதி அனுப்பிச்சது வாஸ்தவம்... அதை மாத்தி எழுத அந்த ராமையாவே தான் எனக்கு போன் செஞ்சான்.. ஒரு பெரிய தொகையா தனக்கு தரலேன்னா கல்யாணத்தை

நிறுத்திடுவேன்னு ஜமீன்தாரை மெரட்டிப் பார்த்தான்... ஆனா, அதுக்கெல்லாம் அவர் அசைஞ்சு குடுக்கலே!

விசாலம்: ஏம்பா நாகராஜா... இனிமே எந்த பிரச்சினையும் கல்யாணத்தில வராதுங்கிறையா?

நாகராஜான்: ஆமாம்... எல்லாரும் மேற்கொண்டு வேலைய பாருங்க... ஜமீன்தார் ராத்திரி ப்ளேன்ல நிச்சயதார்த்தத்துக்கு வர்றாரு.. அழைச்சிகிட்டு வரணும்! (வேகமாகப் போகிறார்)

கோபால்: என்ன வேடிக்கை... வாழ்க்கையும் கிரிகெட்டும் ஒன்னுன்னு மறுபடி ப்ரூவ் ஆயிடிச்சு.. ஜமீன் குடும்பம் கெட்டதுன்னு

கொஞ்ச நேரம் முந்தி நெனைச்சோம்.. இப்ப நெலமை தலை கீழாயிடிச்சே ... பரத்... போட்டிக்கு இன்னும் ஒரு மணி நேரம்தான் இருக்கு... கடைசிப் பந்தை கையில வச்சிக்கிட்டு என்ன செய்யப் போற? யோசிச்சு வை.. நான் வீட்டுக்குப் போய் காப்பி சாப்பிட்டு வரேன் (போகிறார்)

திரை – மறுபடி விலகும்

காட்சி 16:

(அதே ஹால்... மீனாட்சி, பரத், வீணா ஆகியோர் சோகமாக உட்கார்ந்திருக்க, விசாலம், மூர்த்தி ஆகியோர் மோட்டு வளையை பார்த்துக் கொண்டிருக்கின்றனர்)

மூர்த்தி: கண்ணதாசன் அன்னைக்கே எழுதினாரு.. 'சிலர் சிரிப்பார். சிலர் அழுவார்.. நான் சிரித்துக்கொண்டே அழுகின்றேன்'னு ... நமக்கு அது இப்ப சரியா பொருந்தறது ! பரத்

குடுத்த தெலுங்கு பத்திரிகை ஜமீன்தார் கொலைகாரர்னு போட்டுச்சு... நாகராஜன் இன்னைக்கு குடுத்த பேப்பர்ல, ஜமீன்தார் மேல  பழி போட்டவங்களை ஜெயில்ல தள்ளிட்டாங்கன்னு போட்டிருக்கு!  ஜமீன்தார் நல்லவரா கெட்டவரா தெரியலையே?

மீனாட்சி::  அத்தான்.. நான் ஆரம்பத்திலிருந்தே அடிச்சுகிட்டேன், என் புருஷன் சம்பந்தப்பட்ட விஷயம்னா ஜாக்கிரதையா இருக்கணும்னு

விசாலம்:  மீனாட்சி..  எல்லாமே வலிய நம்மை தேடித்தானே வந்திச்சு?.  பெரிய இடம்னு சபலப் பட்டுட்டோம்...  இப்ப, மெல்லவும் முடியாம, விழுங்கவும் முடியாம தவிக்கற நெலமை...

(கோபால் உள்ளே நுழைகிறார்)

கோபால்: நானும் காப்பி சாப்பிட்டு வந்தாச்சு... இன்னும் அஞ்சே நிமிஷம் தான் இருக்கு... உன்னோட கடைசிப் பந்துக்கு இந்த வாழ்க்கை போட்டியில ஒரு வேலையும் இல்ல போலிருக்கு... திவாகர் ஜெயிச்சார்னு சொல்ற ஒரே வேலை தானா இந்த அம்பயருக்கு!

மீனாட்சி: ம்... பரத்தும் வீணாவும் தான் கடைசியில ஒன்னு சேருவான்னு நான் மனக் கோட்டை கட்டினேன்... ஏன்தான் கடவுள் இப்படி சோதிக்கறாரோ ?

வீணா: மாமி... கடவுள் என்ன செய்வார்? இந்த நாடகத்தை எழுதின ஆசிரியரை தான் கேக்கணும்!

பரத்: கரெக்ட் வீணா... (உரக்க) ஹலோ ...

ஆசிரியர் சார்... நாடகத்துக்கு 'கடைசிப் பந்து'னு தலைப்பு குடுத்தீங்க... அந்த கடைசி பந்தை நான் கையில வச்சிக்கிட்டு என்ன செய்யிறதுன்னு தெரியாம முழிக்கிறேன்.. கடைசி நேரமும் வந்தாச்சு.. வில்லனுங்க கை ஓங்கி நிக்கிறது ... இதை நாடகம் படிக்கிறவங்க எப்படிங்க ஏத்துப்பாங்க?

ஆசிரியர் (குரல்): கவலைப் படாதீங்க.. கடைசிப் பந்தை கடைசி நிமிஷத்தில வீசினாதான் கதையில த்ரில் இருக்கும்.. இப்ப பாருங்க... நான் கார் டிரைவராக உள்ள வந்து ஒரே ஒரு டயலாக் பேசறேன்! அப்புறம் என்ன நடக்குது பாருங்க!

ஆசிரியர் (கார் டிரைவரா உள்ள வந்தபடி ) சார்... மாடியில இருக்கிற மாசி சார் இதை

கார்ல விட்டுட்டாரு… தயவு செஞ்சு அவரு கிட்ட குடுத்திடுங்க… (கண்ணடித்தபடி) வரேன் சார் (ஒரு புத்தகத்தை பரத்திடம் தந்து விட்டுப் போகிறார்)

(குழப்பத்துடன் புத்தகத்தை மேலோட்டமாகப் பார்த்த பரத்தின் மூளையில் மின்னல் அடிக்கிறது! அவசரம் அவசரமாக புத்தகத்தின் பக்கங்களை புரட்டிப் பார்த்து, வீணா , மூர்த்தி, விசாலம், கோபால் என, தான் பார்த்ததைக் காண்பிக்கிறான்)

வீணா: ரொம்ப ஷாக்கிங்கா இருக்கே பரத்!

மூர்த்தி: ஐயையோ… இது என்னடா கஷ்ட காலம்?

விசாலம்: நாசமா போச்சு… ம்… கலிகாலம்னு

சரியாதான் சொல்றா

கோபால்: அய்யோடா... சரியா மாட்டிகிட்டாங்க... இந்த அம்பயருக்கு, எல்லோரும் மூக்கில விரல் வைக்கிற அளவுக்கு தீர்ப்பு குடுக்கிற வேளை வந்தாச்சு! (மாடிப் பக்கம் பார்த்து உரக்க)

தம்பி திவாகர்... இறங்கி வாங்க

(திவாகர், மாசி கை கோத்துக் கொண்டு வருகிறார்கள்)

திவாகர்: ஹலோ கோபால் அங்கிள்... எதிர் அணிக்கு இன்னும் ரெண்டு நிமிஷம்தான் சான்ஸ் இருக்கு... இல்லியா!

கோபால்: திவாகர் தம்பி... மொதல்ல,

மாசியோட கையை உதறிட்டு, பரத் போடப் போற கடைசிப் பந்தை பேஸ் பண்ற வழியைப் பாரு!

மாசி: (சிரித்தபடி) இங்க பார்ரா திவா.. இன்னும் இவங்களுக்கு ஜெயிக்கிற ஆசை இருக்கு!

பரத்: திவாகர்... நம்ம போட்டியை நாலு சுவத்துக்குள்ள அந்த கண்ணாடி ரூமில வச்சிக்கிறது பெட்டர்னு நெனைக்கிறேன்!

திவாகர்: ஒகே... வாங்க போகலாம் (எல்லோரும் ரூமுக்குள் செல்ல, ஆசிரியர் போட்டியை வர்ணிக்கிறார்)

ஆசிரியர்: (வர்ணனை) இப்ப, நீங்க எல்லாரும் எதிர்பார்த்த வீணாவோட வாழ்க்கைப் போட்டி ஆரம்பிக்கப் போகுது... விடிஞ்சா

வீணாவுக்கும் திவாகருக்கும் கல்யாண நிச்சயம்கிற நெலமை... திவாகரோட அப்பா ஜமீன்தார், கொலைகாரன்னு பட்டம் வாங்கற மாதிரி இருந்து, திடீர் திருப்பமா, அவரோட எதிரிங்களை ஜெயிலுக்கு அனுப்பி நல்ல பேர் எடுத்துட்டார்... இனிமே தனக்கு ஜெயம் நிச்சயம்கிற நினைப்போட திவாகர் தயாரா இருக்கிறார்... கடைசி நிமிஷத்தில வந்த தெம்போட, பந்தை வீசத் தயாரா நிக்கிறார் பரத்... போட்டி முடிவு என்ன ஆகுமோன்னு மனசு திக் திக்குனு அடிச்சிக்க நிக்கிறாங்க மூர்த்தி, விசாலம்... தன் மனசுப்படியே நடக்கும்னு மந்தகாசத்தோட நிக்கிறா வீணா.. தன் நண்பனுக்கு சப்போர்ட் குடுக்க நிக்கிறான் மாசி... இதோ... வாழ்க்கை போட்டி ஆரம்பிச்சாச்சு... தனக்கு கடைசி நிமிஷத்தில

கிடைச்ச தகவலை வார்த்தை பந்தா வீசறான் பரத்... அதை எதிர்பார்க்காத திவாகர், அந்த ஹூக்லி பந்தை ஆட முடியாததால, பணம், அந்தஸ்து, பதவின்கிற ஸ்டம்ப் மூணும் எகிறி விழுந்திடிச்சு! தன்னை சுப்ரீம் கோர்ட்டு ஜட்ஜுக்கு மேல நினைக்கிற அம்பயர் கோபால் கை தூக்கி திவாகருக்கு அவுட் குடுக்கிறார்!

(அனைவரும் கண்ணாடி ரூமிலிருந்து வெளியே வருகிறார்கள்)

திவாகர்: கங்க்ராட்ஸ் பரத்...போட்டியில நீ ஜெயிச்சிட்ட... வீணா உனக்குதான்னு அம்பயர் கோபால் அங்கிள் கை தூக்கி என்னை அவுட் ஆக்கிட்டாரு... மாசி (அவனைக் கட்டிக் கொண்டு) என் மனம் கவர் கள்வனே... நாம சென்னையை மறந்திடுவோம்... இவங்க

எல்லாரையும் மறந்திடுவோம் ..
அமெரிக்காவுக்கு உடனே போயிடுவோம்!

மாசி: அல்லாருக்கும் கும்பிடு .. நான் வாரேன் (இருவரும் தோளில் கை போட்டபடி வெளியேறுகிறார்கள்)

விசாலம்: எனக்கு போன உயிர் இப்பத்தான் திரும்பி வந்திருக்கு...

மீனாட்சி... உனக்கு கோயில் கட்டி கும்பிடனும்மா.... கடைசி வரை போராடி, வீணா பாழும் கிணத்தில தள்ளாம நீ பாத்துகிட்டே!

கோபால்: ஏண்டா மூர்த்தி... பெரிய இடத்து சம்பந்தம் வர்ற மாதிரி வந்து போயிடுச்சேன்னு உனக்கு உள்ளூர வருத்தம் இருக்கு...

இல்லியா?

மூர்த்தி: டேய் கோபால்... வெந்த புண்ல வேலை பாய்ச்சாதப்பா...

மீனாட்சி: ஏடாகூடமா பேசாதீங்க... பணத்துக்காக அலையறவர் இல்ல எங்க அத்தான்... அவங்களா வந்தாங்க... இப்ப ஏமாந்து போயிட்டாங்க..

மூர்த்தி: சரியா சொன்னேம்மா... எனக்கு அந்த ஜமீந்தார் குடுத்த மூணு லட்சத்தை திருப்பி அவர் மூஞ்சியில எறிஞ்சா தான் மனசில ஒரு நிம்மதி வரும்

கோபால்: சாரிடா மூர்த்தி.. நான் யதார்த்தமா சொன்னது தப்பா தெரியுது.. பிரச்சினை நேரத்தில கை குடுக்கிறவன் தான நண்பன்!.

எங்கிட்ட என் பொஞ்சாதியோட நெலம் வித்த பணம் பாங்க்ல இருக்கு.. அதில வீணாவுக்கு நிச்சயம் செஞ்சிடலாம்... நீயும் உன் கடன் நோட்டை காம்பிச்சு மெரட்ட முடியாதில்ல!

(எல்லோரும் சிரிக்கிறார்கள்)

பரத்: மூர்த்தி மாமா.. எனக்கு ஒரு மாசம் டைம் குடுங்க... எல்லோரும் மெச்சுகிற மாதிரி ஒரு உசத்தியான மாப்பிள்ளையை வீணாவுக்கு கொண்டு வந்து நிறுத்தறேன்!

வீணா: ஹலோ.. போட்டியில நீ ஜெயிச்சிட்டே... நான் இப்ப வீணா பரத்! நான் உன்னை டைவர்ஸ் பண்றதா இருந்தா, அப்ப இன்னொரு மாப்பிள்ளையை தேடு!

(எல்லோரும் சிரிக்கிறார்கள்)

மூர்த்தி: பரத்... இல்லையில்ல.. பரத் மாப்பிள்ளை... நானும் விசாலமும் உடனடியா போய் எங்க சம்பந்திகளை, அதாம்பா, உன் அப்பா வேலூர் கிருஷ்ணசாமியையும், உன் அம்மாவையும் நிச்சயத்துக்கு அழைச்சிட்டு வரேன்!

(ஆசிரியர் உள்ளே நுழைகிறார்)

ஆசிரியர்: என்ன.. எல்லா டிராமா பாத்திரங்களும் கதை சுபமா முடிஞ்சிதுன்னு சந்தோஷமா இருக்கிறாப்பல?

கோபால்: ஆசிரியரே.. சுபமா கதையை முடிச்சீங்க சரி... நாகராஜன் என்ன ஆனாரு... வேம்புவோட செவ்வாய் கிரக பயணம் எப்ப.. ?

ஆசிரியர்: என்னங்க நீங்க.. தன பிள்ளைக்கு

வீணா இல்லைன்னு ஆயிட்டதால,, ஜமீன்தார் ஜகந்நாதன் தன்னை விரட்டிடுவார்னு நாகராஜனுக்கு புரிஞ்சு, ஆபீஸ்ல அகப்பட்டதை சுருட்டிகிட்டு அவர் ஓடிடுவார்னு இந்த ட்ராமாவப் படிக்கிறவங்களுக்கு  சுலபமா, ரெண்டும் ரெண்டும் நாலுன்னு விளங்கிடும் !

வீணா:  அதே மாதிரி, செவ்வாய் கிரகத்தில ரோடு போட தார்  காண்ட்ராக்ட் வாங்கித் தர்றதா யார் கிட்டியாச்சும் வேம்பு புருடா

விட்டிருப்பான்... அவனை உதைச்சு பயித்தியக்கார ஆஸ்பத்திரியில சேத்திருப்பாங்க! எல்லாருமே கோபால் மாமா மாதிரி ஜொள்ளு விட்டுகிட்டு,  வேம்பு சொல்றதை நம்பி  கண்ணில மிளகா எண்ணையை ஊத்திக்குவாங்களா!

(எல்லோரும் சிரிக்கிறார்கள்)

பரத்: இதையெல்லாம் விடுங்க... வாழ்க்கைப் போட்டியில, திவாகர் எந்த காரணத்தினால அவுட் ஆனாருன்னு நாலு சுவத்துக்குள்ள கண்ணாடி அறையில நடந்த மாதிரி காம்பிச்சிட்டிங்க... நாடகத்தைப் படிக்கிறவங்களுக்கு நாங்க பேசினது என்னன்னு தெரிய வேணாமா?

ஆசிரியர்: திவாகர் தோத்துப் போனதுக்கு என்ன காரணம் இருக்குமின்னு படிக்கிறவங்க யோசிச்சு வைக்கட்டும்... கடைசிப் பந்து போட்டப்புறம் DECISION PENDING னு கம்ப்யுட்டர் போர்டில போடறப்ப இருக்கிற ஆவல் கொஞ்ச நாளைக்கு இருக்கட்டுமே! இன்னும் நூறு நாளில அந்த சீனை இந்த ப்ளாக்ல போட்டுடறேன்.. நூறு நாள் ப்ளாக் நாடகத்தில நடிச்ச பெருமை உங்களுக்கும்

இருக்குமில்ல!

கோபால்: ஆசிரியரே... ரொம்ப ஆசைப் படாதீங்க! இது அவசர இன்டர்நெட் காலம்... பத்து நாளைக்குள்ள அந்த காரணத்தை சொல்லி கதையை முடியுங்க!

ஆசிரியர்: சரி... அப்படியே செஞ்சிடறேன்

எல்லோரும்: வாழ்த்துக்கள்!

– முடிவு !? — ஒரு வாரத்தில்!

# இறுதிப் பகுதி

*கடைசிப் பந்து (இறுதிப் பகுதி ) – சுத்தியடிச்சதை* ***slow motion*** *ல பாருங்க!* (காட்சி 16 – கண்ணாடி அறையில்  நடந்த உரையாடல்கள்)

கோபால்:  எல்லாரும் கவனமா கேட்டுக்குங்க … இந்த வாழ்க்கைப் போட்டியில, முக்கியமான கடைசி நிமிஷங்களுக்கு வந்திருக்கிறோம் … இதுவரை திவாகர் முன்னணியில இருந்தாலும், பரத் வீசப் போற  கடைசிப் பந்து – அதாவது பரத்தோட கேள்விங்களுக்கு திவாகர் தரப்

போற பதில்தான் இவரோட வெற்றி அல்லது தோல்வியை தீர்மானிக்கப் போறது! திவாகர் பலே... போட்டி களை கட்டிடிச்சே... ஹலோ பரத்... நான் கொஞ்சமாவது யோசிக்கிற அளவுக்கு உன் கேள்விங்க இருக்குமா? நீ புல் டாஸ் பால் போட்டா நான் சிக்ஸர் அடிப்பேன்! லெக் ப்ரேக், பௌன்சர்னு போட்டா பந்து பவுண்டரிக்கு போயிடும்! எப்படி வசதி!

பரத்: திவாகர்..... நான் வீசப் போற கேள்விங்க, GOOGLY பந்து கணக்கா இருக்கும் திவாகர்: (கேலியாக) இங்க பார்றா மாசி.... பரத் பூச்சாண்டி காட்டரானே! மாசி: பரத் பிரதர்.... GGOGLY ன்னா பந்து கன்னா பின்னான்னு திரும்பி திரும்பி போகணும்.... உன்னால

முடியுமா?

கோபால்: (இடைமறித்து) ஒகே..ஒகே... இப்ப போட்டி ஆரம்பம்.... பரத்... கேள்வியை ஆரம்பி..

பரத்: திவாகர்..... உங்கப்பா ஜமீந்தார் ஜகந்நாதன் ஒரு கொலை கேசில மாட்டியிருக்கிறது உங்களுக்கு தெரியுமா?
திவாகர்: (அலட்சியமாக) இன்னைக்கு பேப்பரைத் தான் எல்லோரும் படிச்சீங்களே! அந்தக் கேசில எங்கப்பாவுக்கு எதிரா எந்த ஆதாரமும் இல்லேன்னு கோர்ட்டே சொல்லிடிச்சு!

பரத்: உங்க வீட்டு வேலைக்காரியோட மகனை உங்கப்பா தீ வச்சு கொளுத்தினதா அந்த கேஸ்

போடப்பட்டிருக்கு … அந்தப் பையனோட நீங்க, குழந்தையிலேந்து பத்து வயசு வரை பழகியிருக்கீங்க

திவாகர்: ஆமா…. நெஜம் தான் .. (கிண்டலாக) அது ஒன்னும் கொலை குத்தம் இல்லியே!

பரத்: நீங்க அமெரிக்காவில செட்டில்

ஆனதும் இந்த மோர்சியை பாத்தீங்க… செத்துப் போன வேலைக்காரி மகன் சாயல்ல மோசி இருக்கிறதால, இவர் பேர்ல உங்களுக்கு ஒரு தனி ஈர்ப்பு வந்திருக்கு! அதனாலதான் நீங்க மோர்சியோட க்ளோஸ் ப்ரண்டாயிட்டீங்க

… இவர் பேரையும் மாசின்னு மாத்திட்டீங்க ….. இல்லியா?

திவாகர்: நீ சொன்னது எல்லாமே சரி… ‘அன்புக்கு உண்டோ அடைக்கும் தாழ்’னு நீ

படிச்சதில்லையா பரத்!

பரத்: உங்க அன்போட தரம் எப்படிப் பட்டதுன்னு இந்த ஆங்கில மாதப் பத்திரிகை சொல்லுது! (கையிலிருந்த புத்தகத்தை

காண்பிக்கிறான்)... இது **GAY**மனிதர்கள், அதாவது, ஓரினச்

சேர்க்கையாளர்களோடபத்திரிகை... இதில, நீங்களும் இந்த மாசியும் நெருக்கமா இருக்க போட்டோங்க வந்திருக்கு! திவாகர்:

(சுரத்திழந்து ) ஓ ... பாத்திட்டியா....

பரத்: நீங்க ரெண்டு பேரும் கல்யாணம் செஞ்சிக்கப் போறதாகவும் இதில

போட்டிருக்கு... இப்படி இருக்கச்சே, வீணாவுக்குத் தாலி கட்ட உங்களுக்கு என்ன தகுதி இருக்கு?

திவாகர்:(அவசரமாக) நோ...நோ...நானும்

மாசியும் உடனடியா கல்யாணம் செஞ்சிக்கிறதா இல்ல.... எங்கப்பாவுக்கு வாக்கு குடுத்தபடி, ஜமீனுக்கு ஒரு வாரிசு பொறந்த பிறகுதான் எங்க கல்யாணத்தைப் பத்தி யோசிப்போம்...

வீணா: (கோபத்தில் வெடிக்கிறாள்) மிஸ்டர் திவாகர்... நான் என்ன பிள்ளை பெக்கற, உணர்ச்சி இல்லாத மிஷின்னு நெனைச்சு என்னை விலை குடுத்து வாங்கப் போறீங்களா? தாலி கட்டியவளோட கடைசி வரைக்கும் வாழணு ங்கிற இந்தியக் கலாச்சாரத்தையே நீங்க கேலி செய்யறீங்க.... நம்ம ரெண்டு பேருக்கும் கல்யாணம் நடக்கும்னு இனி கனவில கூட நினைக்காதீங்க!

கோபால்: போதும்மா... (கையை மேலே தூக்கி) திவாகர் அவுட்டுன்னு இந்த அம்பயர் கை தூக்கிட்டேன்... போட்டி முடிஞ்சாச்சு!

1

# எங்களைப் பற்றி

மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகள்:

மின்புத்தகங்களைப் படிப்பதற்கென்றே கையிலேயே வைத்துக் கொள்ளக்கூடிய பல கருவிகள் தற்போது சந்தையில் வந்துவிட்டன. Kindle, Nook, Android Tablets போன்றவை இவற்றில் பெரும்பங்கு வகிக்கின்றன. இத்தகைய கருவிகளின் மதிப்பு தற்போது 4000 முதல் 6000 ரூபாய் வரை குறைந்துள்ளன. எனவே பெரும்பான்மையான மக்கள் தற்போது இதனை வாங்கி வருகின்றனர்.

ஆங்கிலத்திலுள்ள மின்புத்தகங்கள்:

ஆங்கிலத்தில் லட்சக்கணக்கான மின்புத்தகங்கள் தற்போது கிடைக்கப் பெறுகின்றன. அவை PDF, EPUB, MOBI, AZW3. போன்ற வடிவங்களில் இருப்பதால், அவற்றை மேற்கூறிய கருவிகளைக் கொண்டு நாம் படித்துவிடலாம்.

தமிழிலுள்ள மின்புத்தகங்கள்:

தமிழில் சமீபத்திய புத்தகங்களெல்லாம் நமக்கு மின்புத்தகங்களாக கிடைக்கப்பெறுவதில்லை. ProjectMadurai.com எனும் குழு தமிழில் மின்புத்தகங்களை வெளியிடுவதற்கான ஓர் உன்னத சேவையில் ஈடுபட்டுள்ளது. இந்தக் குழு இதுவரை வழங்கியுள்ள தமிழ் மின்புத்தகங்கள் அனைத்தும்

PublicDomain-ல் உள்ளன. ஆனால் இவை மிகவும் பழைய புத்தகங்கள்.

சமீபத்திய புத்தகங்கள் ஏதும் இங்கு கிடைக்கப்பெறுவதில்லை.

எனவே ஒரு தமிழ் வாசகர் மேற்கூறிய “மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகளை” வாங்கும்போது, அவரால் எந்த ஒரு தமிழ் புத்தகத்தையும் இலவசமாகப் பெற முடியாது.

சமீபத்திய புத்தகங்களை தமிழில் பெறுவது எப்படி?

சமீபகாலமாக பல்வேறு எழுத்தாளர்களும், பதிவர்களும், சமீபத்திய நிகழ்வுகளைப் பற்றிய விவரங்களைத் தமிழில் எழுதத் தொடங்கியுள்ளனர். அவை இலக்கியம்,

விளையாட்டு, கலாச்சாரம், உணவு, சினிமா, அரசியல், புகைப்படக்கலை, வணிகம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு தலைப்புகளின் கீழ் அமைகின்றன.

நாம் அவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து தமிழ் மின்புத்தகங்களை உருவாக்க உள்ளோம்.

அவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்கள் Creative Commons எனும் உரிமத்தின் கீழ் வெளியிடப்படும். இவ்வாறு வெளியிடுவதன் மூலம் அந்தப் புத்தகத்தை எழுதிய மூல ஆசிரியருக்கான உரிமைகள் சட்டரீதியாகப் பாதுகாக்கப்படுகின்றன. அதே நேரத்தில் அந்த மின்புத்தகங்களை யார் வேண்டுமானாலும், யாருக்கு வேண்டுமானாலும், இலவசமாக வழங்கலாம்.

எனவே தமிழ் படிக்கும் வாசகர்கள் ஆயிரக்கணக்கில் சமீபத்திய தமிழ் மின்புத்தகங்களை இலவசமாகவே பெற்றுக் கொள்ள முடியும்.

தமிழிலிருக்கும் எந்த வலைப்பதிவிலிருந்து வேண்டுமானாலும் பதிவுகளை எடுக்கலாமா?

கூடாது.

ஒவ்வொரு வலைப்பதிவும் அதற்கென்றே ஒருசில அனுமதிகளைப் பெற்றிருக்கும். ஒரு வலைப்பதிவின் ஆசிரியர் அவரது பதிப்புகளை "யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்" என்று குறிப்பிட்டிருந்தால் மட்டுமே அதனை நாம் பயன்படுத்த முடியும்.

அதாவது "Creative Commons" எனும் உரிமத்தின் கீழ் வரும் பதிப்புகளை மட்டுமே

நாம் பயன்படுத்த முடியும்.

அப்படி இல்லாமல் “All Rights Reserved” எனும் உரிமத்தின் கீழ் இருக்கும் பதிப்புகளை நம்மால் பயன்படுத்த முடியாது.

வேண்டுமானால் “All Rights Reserved” என்று விளங்கும் வலைப்பதிவுகளைக் கொண்டிருக்கும் ஆசிரியருக்கு அவரது பதிப்புகளை “Creative Commons” உரிமத்தின் கீழ் வெளியிடக்கோரி நாம் நமது வேண்டுகோளைத் தெரிவிக்கலாம். மேலும் அவரது படைப்புகள் அனைத்தும் அவருடைய பெயரின் கீழே தான் வெளியிடப்படும் எனும் உறுதியையும் நாம் அளிக்க வேண்டும்.

பொதுவாக புதுப்புது பதிவுகளை உருவாக்குவோருக்கு அவர்களது பதிவுகள்

நிறைய வாசகர்களைச் சென்றடைய வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். நாம் அவர்களது படைப்புகளை எடுத்து இலவச மின்புத்தகங்களாக வழங்குவதற்கு நமக்கு அவர்கள் அனுமதியளித்தால், உண்மையாகவே அவர்களது படைப்புகள் பெரும்பான்மையான மக்களைச் சென்றடையும். வாசகர்களுக்கும் நிறைய புத்தகங்கள் படிப்பதற்குக் கிடைக்கும்

வாசகர்கள் ஆசிரியர்களின் வலைப்பதிவு முகவரிகளில் கூட அவர்களுடைய படைப்புகளை தேடிக் கண்டுபிடித்து படிக்கலாம். ஆனால் நாங்கள் வாசகர்களின் சிரமத்தைக் குறைக்கும் வண்ணம் ஆசிரியர்களின் சிதறிய வலைப்பதிவுகளை ஒன்றாக இணைத்து ஒரு முழு மின்புத்தகங்களாக உருவாக்கும் வேலையைச்

செய்கிறோம். மேலும் அவ்வாறு உருவாக்கப்பட்ட புத்தகங்களை “மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகள்”-க்கு ஏற்ற வண்ணம் வடிவமைக்கும் வேலையையும் செய்கிறோம்.

**FreeTamilEbooks**.com

இந்த வலைத்தளத்தில்தான் பின்வரும் வடிவமைப்பில் மின்புத்தகங்கள் காணப்படும்.

PDF for desktop, PDF for 6” devices, EPUB, AZW3, ODT

இந்த வலைதளத்திலிருந்து யார் வேண்டுமானாலும் மின்புத்தகங்களை இலவசமாகப் பதிவிறக்கம்(download) செய்து கொள்ளலாம்.

அவ்வாறு பதிவிறக்கம்(download) செய்யப்பட்ட புத்தகங்களை யாருக்கு வேண்டுமானாலும் இலவசமாக வழங்கலாம்.

இதில் நீங்கள் பங்களிக்க விரும்புகிறீர்களா?

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் தமிழில் எழுதப்பட்டிருக்கும் வலைப்பதிவுகளிலிருந்து பதிவுகளை எடுத்து, அவற்றை LibreOffice/MS Office போன்ற wordprocessor-ல் போட்டு ஓர் எளிய மின்புத்தகமாக மாற்றி எங்களுக்கு அனுப்பவும்.

அவ்வளவுதான்!

மேலும் சில பங்களிப்புகள் பின்வருமாறு:

1. ஒருசில பதிவர்கள்/எழுத்தாளர்களுக்கு அவர்களது படைப்புகளை “Creative

Commons" உரிமத்தின்கீழ் வெளியிடக்கோரி மின்னஞ்சல் அனுப்புதல்

2. தன்னார்வலர்களால் அனுப்பப்பட்ட மின்புத்தகங்களின் உரிமைகளையும் தரத்தையும் பரிசோதித்தல்
3. சோதனைகள் முடிந்து அனுமதி வழங்கப்பட்ட தரமான மின்புத்தகங்களை நமது வலைதளத்தில் பதிவேற்றம் செய்தல்

விருப்பமுள்ளவர்கள் freetamilebooksteam@g முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

இந்தத் திட்டத்தின் மூலம் பணம் சம்பாதிப்பவர்கள் யார்?

யாருமில்லை.

இந்த வலைத்தளம் முழுக்க முழுக்க தன்னார்வலர்களால் செயல்படுகின்ற ஒரு வலைத்தளம் ஆகும். இதன் ஒரே நோக்கம் என்னவெனில் தமிழில் நிறைய மின்புத்தகங்களை உருவாக்குவதும், அவற்றை இலவசமாக பயனர்களுக்கு வழங்குவதுமே ஆகும்.

மேலும் இவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்கள், ebook reader ஏற்றுக்கொள்ளும் வடிவமைப்பில் அமையும்.

இத்திட்டத்தால் பதிப்புகளை எழுதிக்கொடுக்கும் ஆசிரியர்/பதிவருக்கு என்ன லாபம்?

ஆசிரியர்/பதிவர்கள் இத்திட்டத்தின் மூலம் எந்தவிதமான தொகையும்

பெறப்போவதில்லை. ஏனெனில், அவர்கள் புதிதாக இதற்கென்று எந்தஒரு பதிவையும் எழுதித்தரப்போவதில்லை.

ஏற்கனவே அவர்கள் எழுதி வெளியிட்டிருக்கும் பதிவுகளை எடுத்துத்தான் நாம் மின்புத்தகமாக வெளியிடப்போகிறோம்.

அதாவது அவரவர்களின் வலைதளத்தில் இந்தப் பதிவுகள் அனைத்தும் இலவசமாகவே கிடைக்கப்பெற்றாலும், அவற்றையெல்லாம் ஒன்றாகத் தொகுத்து ebook reader போன்ற கருவிகளில் படிக்கும் விதத்தில் மாற்றித் தரும் வேலையை இந்தத் திட்டம் செய்கிறது.

தற்போது மக்கள் பெரிய அளவில் tablets மற்றும் ebook readers போன்ற கருவிகளை நாடிச் செல்வதால் அவர்களை

நெருங்குவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்.

நகல் எடுப்பதை அனுமதிக்கும் வலைதளங்கள் ஏதேனும் தமிழில் உள்ளதா?

உள்ளது.

பின்வரும் தமிழில் உள்ள வலைதளங்கள் நகல் எடுப்பதினை அனுமதிக்கின்றன.

1. www.vinavu.com

2. www.badriseshadri.in

3. http://maattru.com

4. kaniyam.com

5. blog.ravidreams.net

எவ்வாறு ஒர் எழுத்தாளரிடம் **Creative Commons** உரிமத்தின் கீழ் அவரது படைப்புகளை வெளியிடுமாறு கூறுவது?

இதற்கு பின்வருமாறு ஒரு மின்னஞ்சலை அனுப்ப வேண்டும்.

<துவக்கம்>

உங்களது வலைத்தளம் அருமை [வலைதளத்தின் பெயர்].

தற்போது படிப்பதற்கு உபயோகப்படும் கருவிகளாக Mobiles மற்றும் பல்வேறு கையிருப்புக் கருவிகளின் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளது.

இந்நிலையில் நாங்கள் [http://www.FreeTamilEbooks.com](http://www.FreeTamilEbooks.com) என

வலைதளத்தில், பல்வேறு தமிழ் மின்புத்தகங்களை வெவ்வேறு துறைகளின் கீழ் சேகரிப்பதற்கான ஒரு புதிய திட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

இங்கு சேகரிக்கப்படும் மின்புத்தகங்கள் பல்வேறு கணிணிக் கருவிகளான Desktop,ebook readers like kindl, nook, mobiles, tablets with android, iOS போன்றவற்றில் படிக்கும் வண்ணம் அமையும். அதாவது இத்தகைய கருவிகள் support செய்யும் odt, pdf, ebub, azw போன்ற வடிவமைப்பில் புத்தகங்கள் அமையும்.

இதற்காக நாங்கள் உங்களது வலைதளத்திலிருந்து பதிவுகளை பெற விரும்புகிறோம். இதன் மூலம் உங்களது பதிவுகள் உலகளவில் இருக்கும் வாசகர்களின்

கருவிகளை நேரடியாகச் சென்றடையும்.

எனவே உங்களது வலைதளத்திலிருந்து பதிவுகளை  பிரதியெடுப்பதற்கும் அவற்றை மின்புத்தகங்களாக மாற்றுவதற்கும் உங்களது அனுமதியை வேண்டுகிறோம்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்களில் கண்டிப்பாக ஆசிரியராக உங்களின் பெயரும் மற்றும் உங்களது வலைதள முகவரியும் இடம்பெறும். மேலும் இவை “Creative Commons” உரிமத்தின் கீழ் மட்டும்தான் வெளியிடப்படும் எனும் உறுதியையும் அளிக்கிறோம்.

http://creativecommons.org/licenses/

நீங்கள் எங்களை பின்வரும் முகவரிகளில் தொடர்பு கொள்ளலாம்.

e-mail

: **freetamilebooksteam@gmail.com** FB

: https://www.facebook.com

/FreeTamilEbooks

G +: https://plus.google.com/communities

/108817760492177970948

நன்றி.

</முடிவு>

மேற்கூறியவாறு ஒரு மின்னஞ்சலை உங்களுக்குத் தெரிந்த அனைத்து எழுத்தாளர்களுக்கும் அனுப்பி அவர்களிடமிருந்து அனுமதியைப் பெறுங்கள்.

முடிந்தால் அவர்களையும் "Creative

Commons License"-ஐ அவர்களுடைய வலைதளத்தில் பயன்படுத்தச் சொல்லுங்கள்.

கடைசியாக அவர்கள் உங்களுக்கு அனுமதி அளித்து அனுப்பியிருக்கும் மின்னஞ்சலை**freetamilebooksteam@gma** முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

ஓர் எழுத்தாளர் உங்களது உங்களது வேண்டுகோளை மறுக்கும் பட்சத்தில் என்ன செய்வது?

அவர்களையும் அவர்களது படைப்புகளையும் அப்படியே விட்டுவிட வேண்டும்.

ஒருசிலருக்கு அவர்களுடைய சொந்த முயற்சியில் மின்புத்தகம் தயாரிக்கும் எண்ணம்கூட இருக்கும். ஆகவே அவர்களை நாம் மீண்டும் மீண்டும் தொந்தரவு செய்யக்

கூடாது.

அவர்களை அப்படியே விட்டுவிட்டு அடுத்தடுத்த எழுத்தாளர்களை நோக்கி நமது முயற்சியைத் தொடர வேண்டும்.

மின்புத்தகங்கள் எவ்வாறு அமைய வேண்டும்?

ஒவ்வொருவரது வலைத்தளத்திலும் குறைந்தபட்சம் நூற்றுக்கணக்கில் பதிவுகள் காணப்படும். அவை வகைப்படுத்தப்பட்டோ அல்லது வகைப்படுத்தப் படாமலோ இருக்கும்.

நாம் அவற்றையெல்லாம் ஒன்றாகத் திரட்டி ஒரு பொதுவான தலைப்பின்கீழ் வகைப்படுத்தி மின்புத்தகங்களாகத் தயாரிக்கலாம். அவ்வாறு வகைப்படுத்தப்படும் மின்புத்தகங்களை பகுதி-**I** பகுதி-**II** என்றும் கூட தனித்தனியே பிரித்துக் கொடுக்கலாம்.

தவிர்க்க வேண்டியவைகள் யாவை?

இனம், பாலியல் மற்றும் வன்முறை போன்றவற்றைத் தூண்டும் வகையான பதிவுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

எங்களைத் தொடர்பு கொள்வது எப்படி?

நீங்கள் பின்வரும் முகவரிகளில் எங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

- **email** : **freetamilebooksteam@gmail.com**
- Facebook: https://www.facebook.com/FreeTamilEbooks
- Google Plus: https://plus.google.com/communities/108817760492177970948

இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் யார்?

- **Shrinivasan** **tshrinivasan@gmail.com**
- **Alagunambi Welkin** alagunambiwelkin@fsftn.org
- **Arun** arun@fsftn.org
- இரவி

**Supported by**

- Free Software Foundation TamilNadu, www.fsftn.org
- Yavarukkum Software Foundation http://www.yavarkkum.org/

This is where you can add appendices or other back matter.

2

# நூல் ஆசிரியர் - ஒரு சிறு குறிப்பு

இந்த நூலின் ஆசிரியர் 'பல முறை மேடை ஏற்றப் பட்ட ராதா விஜயம், ஹீரோயின் 27, மண்ணின் மைந்தன் ஆகிய நகைச்சுவை நாடகங்களையும், வெல்கம் ராதா எனும் தொலைக்காட்சி நாடகத்தையும், சில ரேடியோ நாடகங்களையும், இப்படியும் ஒரு அம்மா, ஊர் கூடித் தேர் இழுப்போம் ஆகிய புதினஙகளையும் இயற்றியுள்ளார். கடைசிப்பந்து, மூன்றாம்புறம் ஆகிய நூல்களை ப்ளாக்கில் எழுதியுள்ளார்.

nithyavaradants@rediffmail.com
http://varadants.blogspot.in/

92824 38025